"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவைக்காளம்



"என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்கு காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெரு வெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும் அதை அசைக்கக் கூடாமற்போயிற்று. ஏனென்றால் அது கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது" (லூக் 6 : 47, 48)

Vol. No. 32 ஜனுவரி - ஏப்பிரல் 2000 No. 1 to 4

"அப்படியானாலும், தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்" லூக் 11 : 28)

"நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு அதை உண்மையும், நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (லூக் 8 : 15)

"அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" (யோ 2 : 5)

"காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக. தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள். எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" (பிரசங்கி 12 : 13)

நான் சிறுவனாக இருந்த நாட்களில் எனது பரிசுத்த தகப்பனார் என்னை தனது கால் மிதி சைக்கிளுக்கு பின்னால் அமரச் செய்து ஓட்டிச் செல்லுவார்கள். இங்கிலாந்து தேசத்தில் செய்யப்பட்ட அந்த சைக்கிள் பெயர் "பிலிப்ஸ்" என்பதாகும். தனக்கு சைக்கிள் சவாரி செய்ய பெலனற்றுப்போகும் காலம் வரை அதை மாத்திரமே அவர்கள் வைத்துப் பயன்படுத்தினார்கள். சிறுவனான என்னை அவர்கள் அழைத்துச்சென்ற அதே சைக்கிளில் பின்வந்த ஆண்டுகளில் அவர்களையே எனக்கு பின்னால் உட்கார வைத்து ஓட்டிச் சென்ற நினைவுகள் எனக்கு வருகின்றன. "படகில் வண்டி ஏறும் நாள் உண்டு. அப்படியே, வண்டியில் படகு ஏறும் நாளும் வரும்" என்ற முது மொழிக்கு இணங்க எங்கள் கதை நடந்தது.

ஒரு நாள் எனது தகப்பனார் தனது சைக்கிளில் சிறுவனான என்னை அமரச்செய்து எங்கள் கிராமத்துக்கு மேற்கு திசையில் இருந்த "ஆனந்தபுரம்" (நெல்லை மாவட்டத்திலுள்ள ஒரு சிறிய கிறிஸ்தவ கிராமம்) என்ற ஊர் வழியாக சைக்கிளை ஓட்டிச்சென்றார்கள். ஆனந்தபுரத்தை சைக்கிள் கடந்து அதின் தென்திசை வழியாக சைக்கிள் சென்று கொண்டிருந்தபோது ரஸ்தாவுக்கு அருகில் மேற்கு பக்கத்தில் கொஞ்சம் தண்ணீருடன் கிடந்த ஒரு சிறிய நீர்ச்சுனையை எனக்கு சுட்டிக் காண்பித்து "அதோ பார், அந்த நீர்ச்சுனையில்தான் நானும் என் தகப்பனாரும் குளிப்பதற்காக தினமும் காலையில் வருவோம்,

அப்பொழுது எனது தகப்பனார் ஆனந்தபுரம் சபையில் பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராகவும், ஆலயத்தில் தேவ ஆராதனைகள் நடத்தும் உபதேசியாராகவும் இருந்தார்கள். எனது தாயாரும் அதே பள்ளியில் தான் ஆசிரியையாக வேலை பார்த்தார்கள்" என்று கூறினார்கள்.

சிறந்த தேவபக்தனான எனது பாட்டனார் கோவில்பிள்ளை உபதேசியாரைக் குறித்து எனது தகப்பனாரும் எனது ஊரிலுள்ள பெரியோரும் சொன்ன ஒரு சில பரவசமான வார்த்தைகளை நான் என் காதாரக் கேட்டிருக்கின்றேன். கர்த்தர் இயேசுவுக்கு மகிமையாக அதை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

எனது பாட்டனார் ஒரு சிறிய அழுக்கு கூட படாத அத்தனையான வெண்மையான வஸ்திரம் உடுத்துவார்களாம். பள்ளி ஆசிரியரானபடியால் கோட்டும் போட்டுக் கொள்ளுவார்களாம். வேஷ்டி சட்டையை தினமும் மாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். அந்த வெண் வஸ்திரங்களைப்போலவே அவர்களின் இருதயமும், கிறிஸ்தவ ஜீவியமும் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாக இருந்திருக்கின்றது. தன் ஆண்டவர் இயேசுவை துதித்துப்பாடுவதில் பேர்பெற்று விளங்கியிருக்கின்றார்கள். பாடும் வரம் பெற்ற அவர்களின் குரல் வளம் கேட்போரின் செவிகளையும், உள்ளங்களையும் கவர்ந்து இழுத்திருக்கின்றது. அத்தனை மதுரமான இன்பக் குரலை கர்த்தர் அவர்களுக்கு கொடுத்து "பிடில்" என்ற வாத்தியக் கருவியை இன்பமாக இசைக்கும் சிறந்த இசை ஞானத்தையும் அளித்திருக்கின்றார். தனது கரங்களில் பிடிலை எடுத்துப் பிடித்து இசைத்து தனது மதுரமான குரலில் கர்த்தரைத் துதித்து பாடத் தொடங்கினால் அதைக் கேட்கும் மயிலும், குயிலும் தாங்களாகவே ஆடத்தொடங்கிவிடும் என்று அவர்களது பாடல்களைக் கேட்ட மக்கள் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். தானாகவே பாடல்கள் எழுதி அதற்கு ராகங்களை அமைத்து கிறிஸ்தவ தேவாலயங்களில் கதா காலசேஷபம் நடத்தி கர்த்தரை மகிமைப்படுத்தி, மக்களையும் இரட்சிப்புக்குள்ளாக வழிநடத்தியிருக்கின்றார்கள். தான் தேவ ஊழியம் செய்த சபைகளில் பாவத்தில் வாழும் மக்களை சபை நடுவே பெயர் சொல்லி கூப்பிட்டு பாவத்தை விட்டு மனந்திரும்ப அன்பாக எச்சரிக்கை செய்திருக்கின்றார்கள். எனது பாட்டனார் சென்ற சபைகளில் எல்லாம் கர்த்தர் உயிர் மீட்சியை கட்டளையிட்டு தமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தி இருக்கின்றார்.

மிகவும் சுகதேகியாக நல்ல சரீர பெலத்தோடு இருந்தபோது ஒரு நாள் மத்தியானம் எனது தகப்பனாரை அழைத்து ஒரு நோட்டும், பென்சிலும் எடுத்துவரச் சொல்லி தனது மரணத்துக்குப் பின்னால் கவனிக்கக்கூடிய அனைத்துக் குடும்ப காரியங்களையும் கூறி முடித்த பின்னர் தனது சரீரம் அடக்கம் செய்யப்படவேண்டிய இடம், கல்லறை கட்டப்படவேண்டிய மாதிரி யாவையும் தெளிவாக சொல்லி அவைகளை எழுத வைத்திருக்கின்றார்கள். எனது தகப்பனார் தனது கண்களிலிருந்து கண்ணீரை வடித்துக் கொண்டே தனது தந்தைக்கு முன்பாக நின்று அவர்கள் எழுத சொன்னவைகளை எல்லாம் எழுதியிருக்கின்றார்கள். இந்த சம்பவத்துக்கு பின்னர் எனது பாட்டனார் சொற்ப நாட்களுக்குள்ளாகவே தேவனுடைய பரம இளைப்பாறுதலுக்குள் மிகுந்த தேவ சமாதானத்தோடு பிரவேசித்திருக்கின்றார்கள்.

எனது பரிசுத்த தாத்தாவின் கடைசி மகனாக பிறந்த எனது தந்தையும் சிறுவனாக மெய்ஞ்ஞானபுரம் ஊரிலுள்ள கிறிஸ்தவ மிஷன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது கர்த்தரால் தொடப் பட்டார்கள். பரிசுத்த மகாத்துமா சாது சுந்தர்சிங் எனது தகப்பனார் படித்துக் கொண்டிருந்த பள்ளிக்கு ஒரு தடவை வந்து ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று மாணவர்களுக்கு இரு கரம் கூப்பி வணக்கம் தெரிவிக்கும்போது எனது தந்தை அந்த பரிசுத்தவானுடைய முகத்தை பார்த்திருக்கின்றார்கள். கர்த்தருடைய மகிமைப் பிரசன்னம் அவருடைய முகத்தில் வீசுவதைக் கண்ட எனது தந்தையின் உள்ளத்தில் கர்த்தர் அப்பொழுதே இரட்சிப்பின் கிரியையை தொடங்கிவிட்டார். பின்னர் எனது தகப்பனார் வாலிபனாக இலங்கை தேசம் சென்றிருந்தபோது சாது சுந்தர்சிங்கை அந்த தேசத்தின் இரத்தினபுரி என்ற இடத்தில் திரும்பவும் பார்த்து அவரது பிரசங்கத்தை கேட்டிருக்கின்றார்கள். இரத்தினபுரியில் சாது பிரசங்கித்த தேவாலயத்தின் குருவானவரை எனது தகப்பனார் சந்தித்து அங்கு எடுக்கப்பட்ட சுந்தரின் புகைப்படத்தை கேட்டு வாங்கி அதை கண்ணாடி சட்டமிட்டு எங்கள் வீட்டின் சுவரில் தொங்க வைத்திருந்தார்கள். அந்தப்படம் இப்பொழுது எனது அறையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது. அந்தப் படத்தை நீங்கள் இந்த முகப்புச் செய்தியில் (5 ஆம் பக்கத்தில்) காணலாம்.

சாது சுந்தர்சிங்கை பார்த்ததின் மூலமாகவும், அவருடைய தேவ செய்தியை கேட்டதின் மூலமாகவும் எனது தகப்பனார் ஆண்டவருடைய



பிள்ளையாக மாற்றம் அடைந்தார்கள் என்று நான் திட்டமாக கூறுவேன். அந்த பரிசுத்த மகாத்துமா சுந்தர்சிங்கைக் குறித்து சிறுவனாக நான் இருந்தபோது என்னிடமும் கூறி எனது உள்ளத்திலும் தேவ அனலை மூட்டி விட்டார்கள்.

கர்த்தருக்கு தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்த எனது தகப்பனார் தனது இறுதி காலம் வரை தேவனுடைய அன்பில் மூழ்கிக் கிடந்தார்கள். தன் அருமை இரட்சகர் இயேசுவை தனது வாழ்வில் மேன்மையாக வைத்து அவருக்கு உத்தமமான இருதயத்தோடு ஊழியம் செய்தார்கள். ஆண்டவருடைய கல்வாரி அன்பு அவர்களுடைய இருதயத்தில் பொங்கி வழிந்தது. கர்த்தரை எப்பொழுதும் பாடித் துதித்து வந்தார்கள். காலை, இரவு குடும்ப ஜெபம் ஒரு நாள் கூட தடைபடாமல் அத்தனை கிரமமாக நடந்து வந்தது. ஒவ்வொரு குடும்ப ஜெபத்திலும் எனது தகப்பனார் 3 பாடல்கள் கட்டாயம் பாடி விடுவார்கள். அவர்களது குரலும் மதுரமாக இருக்கும். எனது பாட்டனார் தனது கதாகாலஷேபங்களில் எனது தகப்பனாரை பாட வைத்திருக்கின்றார்கள். காரணம், எனது தகப்பனாரின் இனிய குரல் வளம்தான். கீர்த்தனை, பாமாலை, கைப்பிரதி பாடல்கள், போன்ற பாடல் புத்தகங்களிலுள்ள பாட்டுகளும் அதின் பாட்டு எண்களும் எனது தந்தைக்கு அத்துப்படியாகும்.

உலகப்பிரகாரமான அலுவலில் நான் இருந்த சமயம் தனது கடிதங்களில் என்னை கர்த்தரைத் துதித்து பாடும்படியாக எழுதுவார்கள். நானும் அப்படியே பாடுவேன். நாங்கள் இங்கு கோத்தகிரியில் எங்களது 3ஆம் வாடகை வீட்டில் இருந்தபோது நான் பாடல்கள் பாடி ஜெபிக்கும் விபரம் எனக்கு கேட்டு எழுதியிருந்தார்கள். பக்கத்து வீட்டில் சிறு குழந்தை இருப்பதால் கர்த்தரைப் பாடி துதிக்கவில்லை என்று தகப்பனாருக்கு நான் பதில் கொடுத்தேன். அடுத்த கடிதத்தில் என்னைக்கட்டாயம் பாடல்கள் பாடி கர்த்தரை துதிக்கும்படியாக எழுதினதுடன், அப்படி பாடி துதித்தால் அந்த சிறு குழந்தையின் தூக்கம் தடைப்படாமல் இருப்பதுடன் அந்தப்பாடல்கள் அதற்கு தாலாட்டுப் பாடலாக இருந்து அது நன்றாக தூங்கும் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

எனது தகப்பனார் மரித்த பின்னர் எனது அருமை தாயார் எனது தந்தை எங்களுக்கு பின் வைத்துபோன ஆஸ்திகளை எங்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார்கள். உலகப்பிரகாரமான தந்தைமார்களைப் போல எனது தகப்பனார் எங்களுக்கு ஆஸ்தி ஐசுவரியங்களை பின்வைத்துச் செல்லவில்லை. எனது பங்குக்கு கிடைத்த ஆஸ்தி எனது தகப்பனார் கர்த்தரைத் துதித்து பாடிய பாடல்புத்தகங்களும், அவர்களுடைய பொக்கிஷமான வேதாகமமும், அவர்களின் வேஷ்டி ஒன்றும் ஒரு சட்டை மாத்திரமே. எனது உடன்பிறந்த சகோதரிமார்களுக்கு எனது தகப்பனார் பயன்படுத்திய மேஜை, நாற்காலி, தோளில் போடும் துண்டு வஸ்திரம் போன்றவை கிடைத்துள்ளன. தங்களது பேரக்குழந்தைகள் சுகயீனமாகப் படுத்தால் தாத்தா விட்டுச் சென்ற துண்டு வஸ்திரத்தைப்போட்டு சுகம் பெறுவதாக ஒரு சமயம் நான் கேள்விப்பட்டேன். கர்த்தருக்கே மகிமை.

எனது தகப்பனாரின் பரிசுத்த வேதாகமம் படித்து படித்து பழமையாய்ப் போய்விட்டதுடன் அதின் உள்பகுதி எண்ணெய் கறையால் பாதிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தை வாசிக்கும் ஒவ்வொரு சமயத்திலும். அதை வாசித்து முடித்ததும் அதை அப்படியே முத்தமிட்டு, முத்தமிட்டு அதில் அவர்களுடைய தாடி ரோமங்களின் எண்ணெய் கறை படிந்துள்ளது. வேதாகமத்தை எனது தகப்பனார் அத்தனை அருமையாக வாசித்து கர்த்தருக்குள் ஆனந்தித்தார்கள். மணிக்கணக்காக வேதப் புத்தகத்தை வாசித்து தியானிப்பார்கள். விருத்தாப்பியத்தில் தனது கண் பார்வை மங்கிக்கொண்டு வருவதை கவனித்த அவர்கள் துரிதம் துரிதமாக வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தார்கள். இறுதியாக கண் பார்வையை அவர்கள் இழந்தார்கள். ஏசாயா தீர்க்கதரிசன புத்தகம் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை கொண்டு வந்த ஒரு புத்தகமாகும். தனது பார்வையை இழந்த சமயம், ஏசாயாவின் புத்தகத்தை திரும்பவும் ஒரு தடவை வாசிக்கும் சிலாக்கியத்தை தேவன் தந்தால் தனக்கு எத்தனை களிகூருதலாக இருக்கும் என்று சொன்னார்கள். அப்படியே கர்த்தர் பார்வை இழந்த கண்களில் ஆச்சரியமாக ஒரு சிறிய வெளிச்சத்தைக் கொடுத்தார். உடனடியாக துரிதம் துரிதமாக தனது விருப்பமான அந்தப் புத்தகத்தை வாசித்து முடித்தார்கள். அதின் பின்னர் அவர்கள் பார்வை திரும்பவே இல்லை.

வேதாகமத்தை வாசித்தது மாத்திரமல்ல, அதின்படி ஜீவித்த பெருமை எனது பரிசுத்த தகப்பனாருக்கு உண்டு. கர்த்தருடைய பிரமாணங்களின்படி அவர்களது வாழ்க்கை இருந்தது. "பூமியிலுள்ளவைகளை அல்ல மேலானவைகளையே நாடுங்கள்" (கொலோ 3 : 2) என்ற தேவ வசனத்தின்படி அவர்கள் எப்பொழுதும் பரலோக வாழ்வையே வாஞ்சித்துக் கதறிக்கொண்டிருந்தார்கள். உலகத்தின் ஆஸ்தி, ஐசுவரியங்கள், பேர், புகழ், கீர்த்தி போன்ற காரியங்களை குறித்து அவர்களிடம் பேசும் மக்களின் ஒரு வார்த்தையை கூட அவர்கள் தனது காதுகளில் போட்டுக்கொள்ளமாட்டார்கள். எங்கள் வீட்டின் வராந்தாவில் இருக்கும்போது யாராவது அவர்களிடம் உலகக்கதைகள் பேசினால் சில நிமிடங்களுக்குள்ளாக மெதுவாக வீட்டுக்குள் எழும்பிச் சென்றுவிடுவார்கள்.

வேதவசனங்களுக்கு நடுநடுங்கி கீழ்ப்படிந்தார்கள். "ஆனாலும் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன் "(ஏசா 66 : 2) என்ற தேவனுடைய வார்த்தை அவர்களது வாழ்வில் நடந்தேறியது. "ஓய்வுநாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக" (யாத் 20 : 8) என்று தேவன் சொன்னபடி ஓய்வுநாள் அத்தனை பரிசுத்தமாக ஒரு வீண்வார்த்தைகூட பேசாமல் எந்த ஒரு உலக வேலைகளும் செய்யாமல் ஆசரிக்கப்பட்டது. "கள்ளத்தராசு கர்த்தருக்கு அருவருப்பானது, சுமுத்திரையான நிறைக்கல்லோ அவருக்கு பிரியம்" (நீதி 11 : 1) என்ற கர்த்தருடைய வார்த்தைப்படி உலகப்பிரகாரமான அவர்களது கடை வியாபாரத்தில் அவர்களுடைய தராசும், எடைக்கற்களும் ஆண்டுதோறும் ஒழுங்காக அரசாங்க அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு முத்திரை குத்தி வாங்கப்பட்டுவிடும். கர்த்தர் விரும்பாத பீடி, சுருட்டு, சிகரெட், வெற்றிலை, பாக்கு, கள்ளச்சாராயம் காய்ச்ச தேவையான பொருட்கள் எதுவும் கடையில் இருக்காது. எல்லாம் கர்த்தருடைய வசனங்களின்படி செய்யப்பட்டன. "என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக் கொண்டிருக்கிறேன்" (பிலி 3 : 8) என்ற தேவ வார்த்தைப்படி ஆண்டவர் இயேசுவுடைய அன்பை ருசிக்கவும் அவருடன் நெருங்கி ஜீவிக்கவும் வசதியாக நல்ல ருசியான போஜன பதார்த்தங்களை எல்லாம் நல்ல திடகாத்திரமான நடுப்பிராயத்திலேயே வெறுத்து ஒதுக்கிவிட்டார்கள். மீன், இறைச்சி, முட்டை, கருவாடு எல்லாவற்றையும் விட்டுவிட்டு மரக்கறி

உணவையே அருந்தினார்கள். அவர்கள் சாப்பிட்ட உணவு வெறும் அரிசி சாதமும், பருப்பு குழம்பு மாத்திரமே. அதிலும் வாரத்தில் இரு நாட்கள் உபவாசம் தவறாது எடுத்துவிடுவார்கள்.

"நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" (யாத் 15 : 26) என்ற தேவ வசனத்தின்படி என்னுடைய தகப்பனார் ஆண்டவர் இயேசுவை தனது சொந்த தகப்பனாக தன் உள்ளத்தில் ஏற்றுக் கொண்ட நாள் முதல் அவர்களது மரணபரியந்தம் எந்த ஒரு மருந்தும் எடுக்கவே இல்லை. இடைப்பட்ட ஆண்டுகளில் எத்தனை எத்தனையோ வியாதிகள், பெலவீனங்கள் அவர்களைத் தாக்கின போதினும், மரணத்தின் விழிம்புக்கே சென்ற நேரங்களிலும் மருந்தை தொடவே இல்லை. தேவனை அவருடைய வசனங்களில் உறுதியாக பிடித்து நின்றார்கள். தேவனும் அவர்களது விசுவாசத்தைக் கனப்படுத்தினார். அல்லேலுயா.

"இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத் 5 : 7) என்ற கர்த்தருடைய வார்த்தைக்கிணங்க எனது தகப்பனார் இரக்கம் நிறைந்தவர்களாக காணப்பட்டார்கள். அவர்களது சிறிய மளிகை கடையில் அவர்களிடம் கடன் வாங்கி கொடுக்காத மக்கள் ஏராளம், ஏராளம் உண்டு. தனது இரத்தத்தை வியர்வையாக வடித்து தனது சைக்கிளில் பாரமான மூட்டைகளை வைத்து ஓட்டிக்கொண்டு வந்து வியாபாரம் செய்த அவர்களுடைய கண்ணீரின் உழைப்பை 5 ஊர்களிலுள்ள பல மக்கள் கடனாகப் பெற்று அப்படியே கொடுக்காமல் இருந்தனர். எனது தந்தையும் அந்தக்கடன்களை இறுதியில் அப்படியே விட்டுவிட்டார்கள். தேவனுடைய கிருபையின் கரம் இரக்கமுள்ள அவர்களை தாங்கினபடியால் அவர்களுக்கு மரணபரியந்தம் ஒரு தாழ்ச்சியும் உண்டாகவில்லை.

பெற்ற தாய் தந்தையரை அவர்களது விருத்தாப்பியத்தில் நிந்தித்து தூஷித்து அவர்களை தங்கள் குடும்ப எல்லைகளிலிருந்து ஓட, ஓட விரட்டியடிக்கும் கொடிய காலம் இது. ஆனால், எனது அன்புத்தகப்பனார் "உன் தகப்பனையும், உன் தாயையும் கனம்பண்ணுவாயாக" (யாத் 20 : 12) "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு, உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே" (நீதி 23 : 22) என்ற கர்த்தருடைய வசனங்களுக்கு இணங்க அவர்களுடைய தாய் தந்தையருக்கு செய்யவேண்டிய அனைத்துக்

கடமைகளையும் பெற்றோரின் மரணபரியந்தம் செய்து முடித்தார்கள். தகப்பனாரின் தாயார் சர்க்கரை வியாதியின் காரணமாக தலையில் பெரிய புண்கள் ஏற்பட்டு மரணப்படுக்கையில் இருந்தபோது அந்த அழுகி நாற்றமெடுத்த புண்களை தினமும் கழுவி சுத்தம் செய்து அதற்கு மருந்துபோட்டு கட்டி, தாயாரின் மலம் மூத்திரம் எடுத்து தனது அன்பு தாயாரை அருமையாக கவனித்திருக்கின்றார்கள். தாயாரை அவர்களது பெற்ற பெண் மக்கள் கூட அருகில் வந்து பார்க்கமாட்டார்களாம். தனது மரண நேரத்தில் அந்த தாயார் தன்னை கருத்துடன் கவனித்த தனது கடைக்குட்டி அன்பு மகனான எனது தந்தையை வாயார வாழ்த்தி ஆசீர்வதித்து மரித்திருக்கின்றார்கள்.

"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்" *(1 தெச 5 17)* என்ற தேவனுடைய கட்டளையின்படி எனது தகப்பனார் எப்பொழுதும் ஜெபிக்கும் ஜெப மாந்தனாக இருந்தார்கள். வீட்டைவிட்டு வெளியே செல்லும்போதும், உள்ளே வரும்போதும் அவர்கள் தனது இருதயத்தை தேவனுக்கு நேராக ஏறெடுத்தார்கள். அப்பாவை காணோமே என்று தேடினால் அவர்கள் ஒரு சிறிய ஓலைப்பாயை தனது முழங்கால்களின் கீழ்ப்போட்டு ஜெபத்தில் தரித்திருப்பார்கள். அந்த சிறிய ஓலைப்பாய் அவர்களின் ஜெபத்திற்காகவே சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும். நாளின் பகற்காலங்களிலும், இராஜாமங்களிலும், அதிகாலையிலும் அவர்கள் தேவனோடு ஜெபத்தில் தனித்திருந்தார்கள்.

வாழ்வின் கடைசி நாட்களில், குறிப்பாக அவர்கள் தனது பரலோக இளைப்பாறுதலுக்கு பிரவேசிப்பதற்காக மரணக்கட்டிலில் ஏறுவதற்கு முன்பாக நாட்களை முழுமையாக முழங்கால்களிலேயே செலவிட்டு தனது பரலோக தகப்பனை மிகுந்த மகிழ்ச்சியோடு சந்திக்க ஆயத்தமானார்கள். இராக்காலங்களில் அரிக்
மண்ணெண்ணெய் விளக்கு தனக்கு அருகாமை
சிறிய ஓலைப்பாயின் மேல் முழங்காலூன்ற மஜபித்துக் கொண்டிருப்பவர்களாக அவர்கள் காணப்பட்டார்கள். "நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன், ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன் "*(1 கொரி 9 : 26)* என்ற கர்த்தருடைய வசனத்தின்படி மிகுந்த நிச்சயத்தோடு தனது கிறிஸ்தவ விசுவாச ஓட்டத்தை கர்த்தருக்குள் ஓடி ஜீவ கிரீடத்தைப் பெற்றுக் கொண்டார்கள். கர்த்தருக்கே எல்லா துதி, கனம், மகிமை உண்டாவதாக.

இதை கருத்தோடு வாசிக்கும் என் அன்பான தேவப்பிள்ளையே, கர்த்தருடைய பரிசுத்த வேதாகமம் உனது பரதேசியான உலக வாழ்வில் உனது வழிப்பயணம் பத்திரமாக பரலோகில் முடிவடைய வழிகாட்டும் தீபமாக உனக்கு இருப்பதால் (சங் 119 : 105) அந்த ஜீவ ஒளிவிளக்கை உனது கரங்களில் பிடித்து இரவும் பகலும் அந்த தேவ வசனங்களை தியானித்து (சங் 1 : 2) அவைகளுக்கு கீழ்ப்படிந்து நட. நாம் நமது ஆண்டவரை நேசிக்கின்றோம் என்று சொல்லுகிறோம். ஆனால், அவரது வார்த்தைகளுக்கு நாம் கீழ்ப்படிந்து நடப்பதில்லை. "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" (யோ 14 : 23) "நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்." (யோ 14 : 15) "என் கற்பனைகளைப் பெற்றுக் கொண்டு அவைகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னிடத்தில் அன்பாயிருக்கிறான்" (யோ 14 : 21) என்று கர்த்தர் சொல்லுகின்றார். தேவன் நம்மோடு என்றும் நிலைத்திருப்பதற்கும், நாம் எங்கு சென்றாலும் அங்கெல்லாம் அவர் நம்மோடு இருப்பதற்கும் "இந்த நியாயப் பிரமான புஸ்தகம் (வேதாகமம்) உன் வாயைவிட்டு பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின்படி எல்லாம் நீ செய்ய கவனமா யிருக்கும்படி இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக, அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப் பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்" (யோசு 1 : 8, 9)

தனது கல்லறையில் "தேவனுடைய வசனத்துக்கு நடுநடுங்கி ஜீவித்த ஒரு மனிதனின் சடலம் இங்கே அடக்கம் செய்யப்பட்டுள்ளது" என்று எழுதப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்ட ஒரு கர்த்தருடைய பிள்ளையின் விருப்பமே நமது ஒவ்வொருவரின் விருப்பமும், நமது அன்றாடக கிறிஸ்தவ வாழ்வின் நடைமுறை பரிசுத்த அனுபவமாக இருக்க அன்பின் கர்த்தர் நமக்கு கிருபை செய்வாராக.



"உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன்" (சங் 35 : 13)

"நான் உபவாசம் பண்ணி, இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து, தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும், விண்ணப்பங்களினாலும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கினேன்" (தானி 9 : 3)

"அநேக முறை உபவாசங்களில் இருந்தேன்" (2 கொரி 11 : 27)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் பிரியமானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் பெருக உண்டாவதாக. ஆமென்.

புத்தாயிரம் ஆண்டின் முதல் இதழை உங்கள் அன்பின் கரங்களில் தந்து மகிழ கிருபைசெய்த அன்பின் கர்த்தரை நன்றி நிறைந்த உள்ளத்தோடு துதித்து ஸ்தோத்திரிக்கின்றேன். வழக்கமான எனது நீண்ட உபவாச நாட்களில் இந்த தலையங்க செய்தியை எழுதலானேன். இந்த ஆண்டு எனது உபவாச நாட்களை ஆரம்பிப்பதற்கு முன்பாக சுமார் ஒரு மாத காலமாக கரங்களில் எடுக்கப்போகும் உபவாச நாட்களை கர்த்தர் வெற்றியோடு முடித்துத்தரவும், சாத்தானுடைய எல்லா தடைகளை முறியடிக்கவும் உள்ளத்தின் பாரத்தோடு மன்றாடி வந்தேன். உபவாச நாட்களின் முதல் நாள் இரவில் சரீரத்தில் சத்துருவுடைய போராட்டத்தை அதிகமாக உணர்ந்தேன். தொடர்ந்து உபவாசம் இருக்க முடியுமா என்ற மிகுந்த சோர்வு கூட உள்ளத்தில் ஏற்பட்டது. "பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்" (யாக் 4 : 7) என்ற தேவ வார்த்தையை மனதில் நினைத்தவனாக சத்துருவை அந்த இரவில் கடிந்து கொண்டேன். அதின் பின்னர் சரீரத்தில் எந்த ஒரு பெலவீனமும் தாக்கவில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

எதற்காக உபவாசிப்பது என்று தேவ சமூகத்தில் தியானித்துக் கொண்டிருந்தபோது இரு காரியங்களுக்காக ஜெபிக்க தேவ ஆவியானவரால் தூண்டப்பட்டேன். ஒன்று, ஆண்டவரை முழுமையாக

நேசிக்கத்தக்கதான அன்பின் இருதயத்தை கர்த்தர் எனக்கு தரும்படியாகவும் "யோனாவின் குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" (யோ 21 : 15) என்று கேட்டு அவனிடத்தில் எதிர்பார்த்த அதே அன்பை பாவியாகிய என்னிடம் என் தேவன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு அன்பின் இருதயத்தை நேசர் தரும்படியாகவும், அடுத்தபடியாக, தேவனின் ஊழியத்தை வல்லமையோடு செய்யத்தக்கதான பரிசுத்த ஆவியானவரின் அக்கினி அபிஷேகத்தை தரும்படியாகவும் "பிதாக்களுடைய இருதயங்களை பிள்ளைகளிடத்திற்கும், கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய ஞானத்திற்கும் திருப்பி உத்தமமான ஜனத்தை கர்த்தருக்கு ஆயத்தப் படுத்தும்படியாக, அவன் எலியாவின் ஆவியும் பலமும் உடையவனாய் அவருக்கு முன் நடப்பான். " (லூக் 1 : 17) என்ற வசனத்தில் குறிப்பிட்ட அந்த எலியாவின் ஆவியையும், பலத்தையும் அன்பின் கருணாகரன் எனக்குத் தந்து தமது நல்ல நாமத்தை மகிமைப்படுத்தவும் உபவாச நாட்களில் ஜெபிக்க தீர்மானித்தேன். அப்படியே உபவாச நாட்கள் முழுமையிலும் எனது இந்த இரண்டு பரலோக ஆசைகளையும் திரும்ப திரும்ப இயேசு அப்பாவின் சமூகத்தில் வைத்து ஜெபித்து வந்தேன். தேவனுடைய ஜனத்தை நியாயம் விசாரித்து அவர்களை நீதியின் பாதையில் நடத்த தக்கதான ஞானத்தையும் விவேகத்தையும் கேட்ட சாலொமோனுடைய இருதய வாஞ்சையை நிறைவு செய்த தேவன் எனது கதறுதலையும் ஒருக்காலும் புறக்கணிக்கமாட்டார் என்ற நிச்சயமான நம்பிக்கை எனக்கு உள்ளது.

தேவனுடைய சமூகத்தில் உபவாசம் செய்து அதின் பரலோக ருசிகண்ட தேவமக்கள் உபவாசத்தை கைவிடவே மாட்டார்கள். நம்முடைய சரீரத்தில் காணப்படும் மாம்ச, சிற்றின்ப ஆசை இச்சைகளை எல்லாம் நமது காலின் கீழ் மிதித்து, தேவனுக்கு முன்பாக நல்லதொரு பரிசுத்த ஜீவியம் செய்ய உபவாசம் நமக்குக் கைகொடுத்து உதவுகின்றது. கோபம், மூர்க்கம், பழிவாங்கும் எண்ணம், சகலவிதமான கசப்புகள், சூது வாது கபடங்கள் எல்லாம் தேவ சமூகத்தில் நாம் ஏறெடுக்கும் ஊக்கமான உபவாச ஜெபங்களின் மூலமாக பறந்தோடிப்போகும். மாமிச பெருந்தீனி, கண்ட நேரமெல்லாம் சாப்பிடும் நொறுக்குத் தீனி போன்ற கொடிய ஆகார மோகம் நமது உபவாச ஜெபத்தால் செட்டைகளை உண்டுபண்ணிக் கொண்டு ஆகாய மார்க்கமாக பறந்து போகும்.

உபவாச ஜெப நாட்களில் தேவன் தமது திருவுளத்தை நமக்கு வெளிப்படுத்தி அவருக்கு முன்பாக நாம் எந்தவிதமான பரிசுத்தத்தோடு ஜீவிக்க வேண்டும் என்பதை எடுத்துக்கூறுவதுடன் நமது பாவ அழுக்குகள், கீழ்ப்படியாமைகள், முரட்டாட்டங்கள் போன்ற காரியங்களையும் நமக்கு சுட்டிக்காண்பித்து நம்மைச் சீர்ப்படுத்துவார்.

உபவாசித்து நாம் ஜெபிக்கும் ஜெபங்கள் தேவனுடைய சந்நிதானத்திலிருந்து உடனடியான பலனை நமக்குப் பெற்றுத் தரும். ".....உன்னை உன்னுடைய தேவனுக்கு முன்பாக சிறுமைப்படுத்துகிறதற்கு உன் மனதை செலுத்தின முதல்நாள் துவக்கி உன் வார்த்தைகள் கேட்கப்பட்டது " (தானி 10 : 12) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது.

இதை கருத்தோடு வாசிக்கும் தேவ பிள்ளையே, நீ உபவாசித்து ஜெபித்து வருகின்றாயா? "இவ்வகையான பிசாசு ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயன்றி மற்றெவ்விதத்தினாலும் புறப்பட்டுப் போகாது" (மாற் 9 : 29) என்று நம் அருமை இரட்சகர் கூறினார். நமது கிறிஸ்தவ வாழ்விலும் பெருமை, அன்பற்ற ஜீவியம், கோபம், கபடம், பெருந்தீனி, மாம்ச சிற்றின்ப ஆசை இச்சைகள் போன்ற பொல்லாத பிசாசுகள் குடிகொண்டிருக்கின்றன. இவைகள் விரட்டியடிக்கப்பட நமக்கு உபவாசம் தேவை. இந்தவித பிசாசுள் உபவாசம் ஒன்றுக்கு மாத்திரமே நடுநடுங்க கூடியவைகளாகும். உபவாசத்தின் மூலமாக சரீரம் ஒடுக்கப்படும்போது இந்த கொடிய சர்ப்பங்களின் விஷப்பற்களை நாம் சுலபமாக பிடுங்கு வீசலாம். புசியாமலும், குடியாமலும் தேவ சமூகத்தில் உபவாசம் இருந்து பாருங்கள். பாவியாகிய எனது வார்த்தைகளின் உண்மையை கர்த்தருக்கு மகிமையாக கண்டு கொள்ளுவீர்கள்.

இந்தச் செய்தியை நான் எழுதிக்கொண்டிருக்கும்போது எனக்கு கிடைத்த "ஐந்தாம் சுவிசேஷம்" என்றதொரு ஆங்கில புத்தகத்தில் சுவிசேஷகர் டாக்டர் ஜோப் அவர்கள் உபவாசத்தின் மாட்சி குறித்து தனது சொந்த வாழ்வின் அனுபவம் ஒன்றை பகிர்ந்து கொண்டுள்ளதை உங்களுடைய ஆசீர்வாதத்திற்காக கீழே தருகின்றேன்.

"எனது உடன் பிறந்த தம்பி பேசக்கூடாத ஊமையனாக சிறுவயதிலிருந்தே காணப்பட்டான். அவனுக்கு 5 வயதானபோது

எங்களுடைய சொந்தக்காரர்களுடைய ஆலோசனையின் பேரில் எனது தாயார் அவனை பள்ளியில் சேர்த்தார்கள். தம்பி ஊமை ஆனதால் அவனோடு படித்த மாணவர்கள் அவனது பெலவீனத்தை கேலி செய்தனர். அதின் காரணமாக அவன் அவர்களோடு சண்டையிட்டான். கற்களை எடுத்து அவர்கள் மேல் எறியவும் செய்வான். அந்தச் சண்டையில் நானும் தம்பியோடு சேர்ந்து கேலி பேசினவர்களை தாக்குவேன். எனினும், பகடிசெய்யும் எதிர்தரப்பினர் அநேகராக இருந்ததால் அநேகமாக நானும் எனது தம்பியும் நன்றாக அடிபட்டுத்தான் வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தோம். தம்பியை இனி பள்ளிக்கூடம் செல்ல அனுமதித்தால் நான் பள்ளிக்கு போகப் போவதில்லை என்று எனது தாயாரிடம் நான் பிடிவாதம் செய்தேன். அம்மா அதிகமாக கண்கலங்கி நின்றார்கள். அம்மாவுக்கு என்ன செய்வதென்றே ஒன்றும் தெரியவில்லை. எனினும், அவர்கள் ஆண்டவருடைய பிள்ளையானதால் 40 நாட்கள் தொடர்ச்சியாக எனது ஊமைத் தம்பிக்காக உபவாசித்து ஜெபிக்க முடிவெடுத்து தனது உபவாசத்தை ஆரம்பித்தார்கள்.

தனது 40ஆம் நாள் உபவாச தினத்தன்று என்னை பள்ளிக்குப் போக வேண்டாமென்று கூறி தனக்கு அருகாமையிலேயே என்னையும் எனது தம்பியையும் முழங்காலூன்றச் செய்து ஜெபிக்கத் தொடங்கினார்கள். தனது ஜெபத்தில் எனது தாயார் ஆண்டவர் இயேசுவிடம் " தேவனே, நான் உம்மிடம் எனது மகனுடைய பள்ளிக்கூட சம்பந்தமான பிரச்சினையைக் குறித்தோ அல்லது அவனது கல்வி மற்றும் எதிர்காலம் பற்றியோ நான் ஜெபிக்க விரும்பவில்லை. எனது மகன் என்னை **அம்மா** என்று கூப்பிடும் வார்த்தையை நான் எனது காதுகளினால் கேட்க நீர் கிருபை செய்யும். அது ஒன்றே போதுமானது " என்று ஜெபித்தார்கள். இந்த வார்த்தைகளை சொன்ன எனது தாயாரின் முகத்தை நான் பார்த்தேன். அவர்களது கண்களிலிருந்து கண்ணீர் மாலை மாலையாக வடிந்து கொண்டிருந்தது. எனினும் அவர்கள் முகம் தேவனுடைய பிரசன்னத்தால் நிறைந்திருப்பதை நான் கவனித்தேன். அவர்கள் தனது கரங்களை நீட்டி முழங்கால் ஊன்றியிருந்த எனது தம்பியின் தலையில் வைத்து "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் ஜீவிக்கின்ற ஜீவனுள்ள நாமத்தின் பெயரில் எனது மகன் பேசும்படியாக நான் கட்டளையிடுகின்றேன்" என்று ஆவிக்குள் மிகுந்த வல்லமையோடு சொன்னார்கள். என்ன ஆச்சரியம் ! நான் ஆச்சரியத்தால் திகைத்துப் போகும் வண்ணம் எனது தம்பி அந்த நிமிடமே தனது வாயைத் திறந்து

"அம்மா" என்று பேசினான். அந்த நாளிலிருந்து அவனது நாவின் கட்டுகள் படிப்படியாக அவிழ்க்கப்பட்டது. அவன் பள்ளிக்கு ஒழுங்காக வந்து படித்தான். படிப்பில் புத்திசாலியானான். இப்பொழுது அவன் அமெரிக்கா தேசத்திலே தனது குடும்பத்துடன் சந்தோசமாக வாழ்கின்றான். ஊமையனான தன்னை தனது நாவின் கட்டுகளை அவிழ்த்துவிட்ட தன் கர்த்தருக்கு இன்றும் மக்களுக்கு முன்பாக சாட்சி கூறி அவரது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தி வருகின்றான்" (டாக்டர். பி. பி. ஜோப்)

விரைந்து நெருங்கி வரும் கிழப்பருவத்தை தைரியமாக சந்திக்க உபவாசியுங்கள்

உற்றார் உறவினராலும், சமுதாயத்தாலும் விருத்தாப்பிய மக்கள் புறக்கணித்து ஓரங்கட்டப்படுகின்றனர். "இவனை அகற்றும்" என்ற குரலோசை பல கோணங்களிலிருந்தும் எழும்பக்கூடிய காலம் நமது விருத்தாப்பிய காலமாகும். நாம் பெற்று வளர்த்து, பாலூட்டி, தாலாட்டி, சீராட்டிய நம் கர்ப்பத்தின் கனிகளே நமது விருத்தாப்பியத்தில் நமக்கு எதிராக குதிங்காலை தூக்கத் தொடங்கினாலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை.

ஒரு அன்பான தகப்பனார் ஒரு சமயம் என்னிடம் தனது தேவ ஊழியம் செய்யும் பாஸ்ட்டர் மகனை குறித்து இவ்விதம் கூறினார்கள். "சகோதரனே, எனது மகன் எனக்கு சத்துருவாக இருக்கின்றான். சமீபத்தில் அவன் ஒருவரிடம் "எனது தகப்பனார், அவரது பெண் மக்களை சுற்றியே ஓடிக்கொண்டிருக்கின்றார். காலம் வரும்போது அவர் என்னிடம் வருவார். அப்பொழுது நான் எனது வீட்டில் ஒரு முளை அடித்து அவரைக் கட்டிப்போட்டு ஒரு நாய்க்கு கஞ்சி ஊற்றுவது போல அவருக்கு கஞ்சி ஊற்றுவேன்". என்று கூறி இருக்கின்றான். கர்த்தர் எனக்கு அப்படிப்பட்ட ஒரு அவல நிலை வராதபடி பாதுகாத்துக்கொள்ள அவரிடம் கெஞ்சி வருகின்றேன் " என்று கூறினார்.

இப்படியும் பெற்ற பிள்ளைகள் பேசுவார்களா என்று நினைக்கின்றீர்களா? ஐயோ, பெற்ற தாய், தந்தையர் தேவபக்தியற்ற பிள்ளைகளிடம் படும் கொடுமைகளை சொல்லி மாளாது. விருத்தாப்பியமான தாய் பெற்ற மகனுடைய வீட்டிலிருந்து அவனது

கொடுமை தாங்காமல் வீட்டைவிட்டுப் போகும்போது " நீ மட்டும் தான் போகின்றாயா? உன்னுடன் உனது புருஷனையும் கூட்டிக்கொண்டு போ" என்று ஆணவமாக தாயிடம் தனது பெற்ற தகப்பனைக்குறித்து குரல் கொடுக்கின்றான். நாம் என்ன சொல்ல இருக்கின்றது.

தங்கள் ஆண் மக்கள் இருவருக்காகவும் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்து, நன்கு புசித்து குடிக்காமல், நல்ல வஸ்திரங்கள் உடுத்தாமல், இராப்பகலாக பாடுபட்டு, அவர்களை படிக்க வைத்து அவர்களுக்கு நல்ல வசதியான வீடுகளை குடியிருக்கக் கட்டிக் கொடுத்து, அவர்களுக்கு தொழில் துறைகளை உருவாக்கிக் கொடுத்து, திருமணம் செய்து வைத்து, இனி அருமை மக்களுடைய குடும்பங்களோடு இந்த நமது கிழப்பருவத்தில் நாம் இணைந்து அன்பு கொண்டு கூடி மகிழ்ந்து வாழலாம் என்று எண்ணிய அந்த அருமைப் பெற்றோரின் அளவற்ற ஆசைக்கு வெகு விரைவிலேயே முற்றுப்புள்ளி விழுந்தது.

அந்த வீட்டின் தலைவன் ஒரு நாள் தனியாக இருக்கும்போது அவர்களது பேரக்குழந்தைகளில் ஒன்று வந்து "தாத்தா, நீங்கள் முதியோர் இல்லம் போனால் என்ன? " என்று கேட்க, அதை ஒரு தேவ தூதனின் பரலோகக்குரலாக எடுத்துக்கொண்டு உடனே கணவனும், மனைவியும் தனிக்குடித்தனம் நடத்த தங்கள் அருமை பிள்ளைகளை விட்டு கடந்து செல்லுகின்றனர். இப்படிப்பட்ட காரியங்கள் எல்லாம் நமது விருத்தாப்பியத்தில் நாம் சற்றும் எதிர்பாராமல் நமக்கு வந்து நேரிடக்கூடியவைகள். என்னை உயிருக்கு உயிராக நேசிக்கும் எனது செல்ல மகன் என்னைக் கைவிடமாட்டான் என்று எண்ணி மாம்சமானதை தங்கள் புயபலமாக்கிக்கொள்ளுவோருக்கு காரியங்கள் முற்றும் எதிர் கோணங்களில் நொடிப்பொழுதில் முடிந்துவிடும்.

இந்த தலையங்கத்தை நான் எழுதும்போது எனக்கு ஒரு கடிதம் இப்படியாக வந்து உள்ளது. மலேசியா நாட்டிலிருந்து வந்த அந்த கடிதத்தின் சுருக்கத்தை உங்களுக்குத் தருகின்றேன். " எனது பெற்றோருக்கு நாங்கள் மொத்தம் 10 பிள்ளைகள். 6 பெண்கள், 4 ஆண்கள். எங்கள் எல்லாரையும் பெற்றோர் அருமையாக வளர்த்து ஆளாக்கி பெண் மக்களாகிய எங்கள் 6 பேரையும் நல்ல இடங்களில் திருமணம் செய்து கொடுத்தார்கள். எனது சகோதரர் 4 பேர்களையும் எனது அருமை பெற்றோர் மிகுந்த பாசத்தோடு செல்லமாக வளர்த்து, போதிய கல்வி ஞானம் கொடுத்து அவர்களையும் நல்ல கண்ணியமான

குடும்பஸ்தர்களாக்கினார்கள். அவர்களில் ஒரு சகோதரன் கர்த்தருடைய ஊழியத்தை செய்யும் பாஸ்ட்டராக இருக்கின்றான். அப்பாவுக்கு வயது 84, அம்மாவுக்கு வயது 76. இந்த முதிர்ந்த வயதில் அப்பா, அம்மாவை தங்கள் வீட்டில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு ஆதரவு அளிக்க ஒருவரும் முன்வரவில்லை. பிள்ளைகள் எல்லாரும் தங்கள் வீட்டுக் கதவுகளை அவர்களுக்கு பூட்டிவிட்டனர். இந்த இக்கட்டான நேரத்தில் அவர்களுக்கு புகலிடம் அளிக்க இந்தியாவிலுள்ள எனது அப்பாவின் கடைசி தங்கை முன்வந்தார்கள். மார்ச் மாதம் 2000 த்தில் எனது அருமைப் பெற்றோர் கண்ணீரோடு இந்தியாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர். வாழ்வின் கடைசிகட்டமாக நானும் எனது சகோதரிகள் மூவருமாக சேர்ந்து மலேசியா விமான நிலையத்தில் கண்ணீரோடு வழி அனுப்பிவைத்தோம். அவர்கள் பெற்ற மக்களில் இன்னும் 2 பெண் மக்களும், ஆண் மக்கள் 4 பேருமே வழி அனுப்பிவைக்க வரவே இல்லை. எனது சகோதரர்களில் ஒருவன் நான் மேலே குறிப்பிட்டது போல வேதம் போதிக்கும் பாஸ்ட்டர் " என்று துயரத்தோடு எழுதியிருந்தார்கள்.

பாஸ்ட்டராக இருந்தாலும், குருவானவராக இருந்தாலும், பேராயராக இருந்தாலும் பெற்றோர் தங்கள் பெலன் ஒடுங்கி விருத்தாப்பிய நிலையை எட்டிப்பிடித்துவிட்டால், அவர்களை பாளையத்துக்கும் புறம்பாக தள்ள தயங்கமாட்டார்கள். ஒரு சகோதரி என்னைக் கண்டு " எனது விதவையான அருமைத் தாயாரை பட்சமுடன் கர்த்தருக்குப் பயந்து கவனித்துக்கொள்ளுவாள் என்ற மிகுந்த எதிர்பார்ப்பில் ஒரு பாஸ்ட்டருடைய மகளுக்கு எனது தம்பியை திருமணம் செய்து வைத்தோம். மகளைக்கட்டிக் கொடுத்த பாஸ்ட்டர் தனது மகளிடம் "முதற்காரியமாக கிழவியை வீட்டிலிருந்து அப்புறப்படுத்து, அப்பொழுதுதான் நீ சுயாதீனமாக உன் கணவனோடு சந்தோஷமாக வாழமுடியும்" என்று ஆலோசனை சொல்லி இருக்கின்றார். தகப்பனுடைய ஆலோசனையை மனதில் வைத்து எனது தாயாரை கடினமாக நடத்தவும், அவர்கள் தனி வீட்டுக்கு குடித்தனம் போய் தனது பெற்ற மகனோடு வாழ இயலவில்லையே என்ற ஆறாத் துயரில் சீக்கிரமாக மரித்தும் போனார்கள் " என்று கவலையோடு சொன்னார்கள்.

இப்படி பெற்ற பிள்ளைகளால் நமது விருத்தாப்பிய காலத்தில் நாம் கைவிடப்படாதிருக்கவும், நமது விருத்தாப்பியம் நமக்கும்,

மற்றவர்களுக்கும், தேவனுடைய நாமத்துக்கும் மகிமையாக இருக்கவும், நமது அஸ்தமன காலம் மிகுந்த தேவ சமாதானத்தோடு காணப்படவும், கர்த்தர் கிருபையாகக் கொடுத்த இந்த நாட்களில் கர்த்தரின் முகம் தேடி உபவாசித்து நாம் உருக்கமாக ஜெபிக்க வேண்டும். நிச்சயமாக தேவன் நமது ஜெபம் கேட்டு " நமது விருத்தாப்பியத்தில் நாம் கர்த்தரின் கரங்களில் விழ " (2 சாமு 24 :14) நேசர் நமக்கு தயை செய்வார். ஏனெனில் " தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயது வரைக்கும் நான் அப்படிச் செய்து வந்தேன். இனிமட்டும் நான் உங்களை தாங்குவேன், நான் அப்படிச் செய்துவந்தேன். இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன் " (ஏசா 46 : 3,4) என்று தேவன் திருவுளம் பற்றியுள்ளார்.

நமது மரணம் மிகுந்த தேவ சமாதானத்தோடு காணப்பட உபவாசித்து ஜெபியுங்கள்.

நான் இப்பொழுதுதானே வாலிபன். நான் கிழப்பருவத்தை எட்ட இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகளோ இருக்கின்றனவே! கிழப்பருவம் வரும்போது மரணத்தை குறித்து யோசிக்கலாம் என்று நினைப்பதற்கில்லை. கல்லறைத் தோட்டத்திலுள்ள கல்லறைகள் எல்லாம் கிழவர்கள், கிழவிகளின் கல்லறைகள் மாத்திரம் இருக்கவில்லையே! சிசு பருவம், பாலியம், வாலிபம், நடுத்தர பருவம், விருத்தாப்பியம் ஆகிய சகல நிலைகளிலும் மாந்தர் மரணத்தைச் சந்தித்து புதை குழிக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனரே!

நமது பாக்கியமான நல் மரணத்தை குறித்து நமக்கு ஒரு வாஞ்சை இருப்பது அவசியமாகும். " நீதிமான் மரிப்பது போல நான் மரிப்பேனாக, என் முடிவு அவன் முடிவுபோல் இருப்பதாக " (எண் 23 : 10) என்று ஆவல் கொண்ட பிலேயாமின் ஆசை நிறைவேறாமற் போயிற்று. ஆனால், நாம் அவனைப்போல ஆசை கொண்டு தேவ பெலத்தால் அந்த பரலோக ஆசையை கட்டாயம் நிறைவு செய்து விடவேண்டும்.

தனது மரணப்படுக்கையில் இருந்த ஒரு கிறிஸ்தவ ஐசுவரியவானான மனிதரை நான் சந்தித்தேன். அவர் என்னைப் பார்த்து

"முடிஞ்சிருச்சி எல்லாம் முடிஞ்சிருச்சி" (முடிந்துவிட்டது எல்லாம் முடிந்துவிட்டது) என்ற வார்த்தைகளை மிகுந்த துக்கத்தோடு கூறி ஓரிரு தினங்களில் இந்த உலகத்தைவிட்டு கடந்து சென்றார். தனது பரம தகப்பனுடைய வீட்டுக்கு ஆனந்த களிகூருதலோடு கடந்து செல்ல வேண்டிய அந்த மனிதர் முற்றும் நம்பிக்கையற்றவராக தனது நித்திய யாத்திரையை தொடங்கவேண்டியதாயிற்று. ஆனால் நமது ஓட்டம் கர்த்தருக்குள் மிகுந்த நிச்சயத்தோடு ஓடி முடிக்கப்படவேண்டும். அப்போஸ்தலன் அதைக்குறித்து எழுதும்போது " நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன், ஆகாயத்தை அடிக்கிறவனாக சிலம்பம் பண்ணேன் " (1 கொரி 9 : 26) என்று குறிப்பிட்டார். " உனது முடிவைப்பற்றி உனக்கு நம்பிக்கையுண்டு. "(எரே 31 : 17) என்று தீர்க்கன் சொல்லுவார். " நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன் " (நீதி 14 : 32) என்று ஞானி கூறுவார்.

விருத்தாப்பியமான மக்கள் தங்களது இறுதி காலத்தில் கவனிப்பாரில்லாமல் கட்டில் கிடையாக தனித்துக்கிடந்து மிகுந்த துயரத்தோடும், கண்ணீரோடும் மரிப்பதை நாம் காண்கின்றோம். அதிலும் அவர்கள் கீழே விழுந்து கால் ஒடிந்து அல்லது இடுப்பு எலும்பு முறிந்து அல்லது பக்கவாதம் போன்ற கொடிய வியாதிகளில் சிக்கினால் அவர்கள் படும்பாடு சொல்லி மாளாது. கட்டில் கிடையாக கிடந்து, மலம் மூத்திரம் போய் நாற்றமெடுத்து, அவர்களை கவனிப்போரும் வெறுத்து, சலிப்படைந்து அவர்களை அப்படியே சாகவிட்டு விடுகின்றனர். எத்தனை துயரமான காரியம் !

" எனது உடம்புக்கு ஏதாவது ஊறு நேர்ந்து நான் கட்டில் கிடையாக படுக்கக்கூடிய ஒரு கொடிய நிலை எனக்கு ஏற்படும் பட்சத்தில் நான் உடனடியாக அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரைகளை வாங்கி சாப்பிட்டு எனது வாழ்வை உடனே முடித்துக்கொள்ளுவேன் " என்று ஆண்டவருடைய கல்வாரி அன்புக்குள் வராத ஒரு கிறிஸ்தவ ஐயா ஒரு தடவை என்னிடம் கூறினார்கள். உண்மைதான், மரணக்கட்டிலில் மனிதனின் ஆதரவும், ஆண்டவருடைய அரவணைப்பும் இல்லாமல் தனித்து கிடப்பது மகா பயங்கரமான காரியமாகும். அப்படிப்பட்ட ஒரு நிர்ப்பந்தமான நிலை நமக்கு வராமல் அன்பின் கர்த்தர் நம்மைக் காத்துக்கொள்ள இந்தக் கிருபையின் நாட்களில் நாம் கட்டாயம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

திடீரென்று மாரடைப்பு தனக்கு வந்ததும் அந்தக்கொடிய வேதனையின் காரணமாக தனது சட்டையை பிடித்து கிழித்து துடி-துடித்து இறந்துபோன ஒரு கிறிஸ்தவ மனிதரைக்குறித்து நான் கேள்விப்பட்டேன். கிறிஸ்துமஸ் காலமான டிசம்பர் மாதம் வந்தால் போதும், அவரும் அவரது பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து தேவாலயத்தை அழகாக ஜோடிப்பார்கள். அதை அலங்கரித்து ஆனந்தம் அடைவார்கள். பனிகொட்டும் காலமான அந்த டிசம்பர் மாதக்கடும் குளிரில் பாடல் குழுவினருடன் அந்த மனிதரும், அவரது பிள்ளைகளும் இரா முழுவதும் பெட்ரோமாக்ஸ் விளக்கு தூக்கி நடந்து வீடுகள்தோறும் ஆண்டவர் இயேசுவின் பிறப்பின் பாடல்கள் பாடி மகிழ்வார்கள். கர்த்தர் இயேசுவை தங்கள் இருதயத்தில் ஏற்று மறுபடியும் பிறவாமல் அவர்கள் தேவாலயத்துக்குச் செய்த எல்லா காரியங்களும் விழலுக்கு இறைத்த நீராக வீணாகிப் போனது. நிர்ப்பந்தமான தேவனற்ற மரணம். " நீ உத்தமனை நோக்கி செம்மையானவனை பார்த்திரு, அந்த மனுஷனுடைய முடிவு சமாதானம் " (சங் 37 : 37) என்று தேவனுடைய வசனம் கூறுகின்றது.

16ஆம் நூற்றாண்டு பரிசுத்தவான் சாமுவேல் ரூத்தர்ஃபோர்ட் மரணக்கட்டிலில் இருந்தபோது அவரது கடைசி வார்த்தைகளை கேட்க தேவ மக்கள் ஆசை ஆவலாக அவரைச்சுற்றிலும் கூடி வந்தார்கள். அவர்களில் ராபர்ட் பிளையர் என்பவர் குனிந்து ரூத்தர்ஃபோர்டை பார்த்து " நீங்கள் இயேசுவை குறித்து என்ன நினைக்கின்றீர்கள்? " என்று கேட்டபோது "நான் என்றுமாக வாழ்ந்து என் ஆண்டவரை ஆராதிப்பேன்" என்று தாழ்வான குரலில் ரூத்தர்ஃபோர்ட் பதில் கொடுத்தார். சில வினாடிகளுக்குப் பின்னர் " இந்த இரவிலேயே எனது இம்மைக்குரிய கதவு அடைபட்டு, இந்த உலகத்தின் திரைச்சீலை இறக்கப்பட்டு என்றுமாக நங்கூரம் பாய்ச்சப்பட்டுவிடும். நாளை அதிகாலை 5 மணிக்கு எனது ஆழ்ந்த தூக்கத்திலேயே நான் பரலோகம் சென்றுவிடுவேன் " என்று கூறினார். அவரது வார்த்தையின்படியே மறுநாள் காலை 5 மணிக்கு அவரது ஜீவன் சமாதானமாக பிரிந்தது.

எத்தனை சமாதானமான, மரணத்தின் நேரத்தைக்கூட திட்டமாக அறிந்த ஒரு ஆசீர்வாதமான முடிவு பாருங்கள். தேவனுடைய மெய் பக்தர்கள் தங்களின் மரண நேரத்தைக் கூட முன்கூட்டி அறிந்துவிடுவார்கள். " நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு அறிவித்தபடி நான் என் கூடாரத்தைவிட்டுப்போவது சீக்கிரத்தில்

நேரிடுமென்று அறிந்திருக்கிறேன் " (2 பேதுரு 1 : 13) என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதினார்.

முடிவில்லாத நித்தியத்தை எப்பொழுதும் மனதில் கொண்டு வாழ தேவன் கிருபை செய்ய உபவாசித்து ஜெபியுங்கள்

நமக்கு முன்னாலுள்ள கரை காணா சமுத்திரம் போன்ற முடிவில்லாத நித்தியத்தை நாம் சிந்திக்கவிடாதபடி சத்துருவாகிய பிசாசு நமது மனக்கண்களை நன்றாக கட்டி வைத்திருக்கின்றான். அப்படி நாம் முடிவில்லாத நித்தியத்தை பயத்தோடு சிந்தித்துப் பார்த்தால் தேவனுக்கு முன்பாக நாம் பரிசுத்தவான்களாகிவிடுவோம். கட்டாயம் பாவம் செய்ய துணியவே மாட்டோம்.

மைராப்பூ என்ற நாஸ்திகன் தனது மரணப்படுக்கையில் " முடிவில்லாததும், காலக்கணக்கு இல்லாததுமான நீண்ட நித்தியத்தை நான் மறந்திருக்கும்படியாக எனக்கு மயக்கம் அளிக்கும் கஞ்சாவை மதுபானத்தில் கலந்து கொடுங்கள் " என்று கேட்டானாம்.

" ஆயிரம் ஆண்டு காலம் நான் அவியாத நரக அக்கினியில் வெந்து துடித்து அதற்கப்பால் மறுபடியும் ஆண்டவர் இயேசுவின் தயவைப் பெற்றுவிடுவேனானால் நான் எத்தனை பாக்கியசாலியாக இருப்பேன்! ஆனால், அப்படி நடக்காதே. நான் அப்படி ஆசைப்படுவேனானால் அது ஒரு கானல் நீர் ஆசையே தவிர வேறொன்றும் இல்லை. கோடானு, கோடானு கோடி ஆண்டுகள் உருண்டோடினும் எனது நரக அக்கினியின் வியாகுலப் புலம்பல்களுக்கு ஒரு சிறிய முடிவுகூட வராமல் முடிவில்லா நித்தியத்திலே அது வெறும் ஒரு மணி நேரம் மட்டுமே கடந்திருக்கும் என்பதை உணருகின்றேன். நித்தியமே, ஐயோ நித்தியமே, என்றென்றைக்குமுள்ள சதா காலம் நிலைத்து நிற்கும் நீண்ட நித்தியமே ! " என்று பிரான்சிஸ் நியூபோர்ட் என்ற நாஸ்திகன் ஓலமிட்டுப் புலம்பினான்.

நித்தியத்தை நாம் எண்ணிப்பார்த்தால் நமது தலை தானாக சுழல ஆரம்பித்துவிடும். இந்த பூவுலக வாழ்க்கை வேதாகம அடிப்படையில் 70 அல்லது 80 வருடங்கள் மாத்திரமே (சங் 90 : 10) இதை ஓடி முடிக்க ஒரு குழந்தை தனது தாயின் வயிற்றில் 9 மாதங்கள் தன்னை

தயார்படுத்திக் கொள்கிறது. அப்படியே, நாமும் நமக்கு முன்னாலுள்ள யுகாயுகங்களான முடிவில்லாத நீண்ட நித்தியத்தை ஆண்டவர் இயேசு அப்பாவோடு பரலோக வீட்டில் ஆனந்தித்துக் களிக்க நமது அற்பமான வாழ்நாட்காலத்தை கர்த்தருக்கு மகிமையாக வாழ்ந்தே ஆகவேண்டும். நமது பூவுலக எல்லா காரியங்களையும் முடிவில்லாத நித்தியத்தின் கண்ணோட்டத்திலேயே நாம் பார்க்க வேண்டும்.

நித்தியத்தைக் குறித்த பூரண அறிவையும், அதை ஆண்டவர் இயேசுவோடும், தேவதூதர்களோடும், பரிசுத்தவான்களின் சங்கத்தோடும் மோட்ச லோகில் செலவிடுவதிலுள்ள எல்லையற்ற பரமானந்தத்தையும் (மத் 25 : 34, 1 கொரி 2 : 9) அதை கைநழுவவிட்டுவிட்டு பிசாசோடும், அவனது அருவருப்பான தூதர்களோடும் அழுகையும், பற்கடிப்பும் நிறைந்த அவியாத அக்கினி கடலில் கிடந்து அனுபவிக்கும் வியாகுலப்புலம்பல்களையும் சிந்தித்து தியானிக்கத்தக்கதான பிரகாசமான மனக்கண்களை கர்த்தர் நமக்குத் தரும்படியாக நாம் உபவாசித்து ஜெபிக்க வேண்டும்.

ஆஸ்திரேலியா தேசத்தில் ஆர்தர் ஸ்டேஸ் என்ற ஒரு பயங்கர குடிகார மனிதனை தேவன் சந்தித்து அவனை தமது அடிமையாக்கி அவனது கரத்திலே ஒரு தேவப்பணியை கொடுத்திருந்தார். " நித்தியம் " என்ற ஒரே வார்த்தையை ஆஸ்திரேலியா நாட்டின் தலைநகர் சிட்னி மற்றும் மெல்போர்ன் பட்டணங்களின் தெருக்களிலுள்ள நடைபாதை மேடைகளில் எழுதுவதே அவனது வேலை. 5 அடி 3 அங்குல உயரமுள்ள அந்த குள்ளமான மனிதர் எந்த ஒரு மனிதருக்கும் தெரியாதவிதத்தில் 33 வருட காலமாக "நித்தியம் " என்ற வார்த்தையை 500000 தடவைகளுக்கும் கூடுதலாக அழகாக எழுதினார். அதிகாலை 5 மணிக்கே எழும்பி இந்தப்பணியை எந்த ஒரு மனிதருக்கும் தெரியாமல் செய்தார். அவருக்கு படிப்பு அறிவு எதுவும் கிடையாது. தனது பெயரைக்கூட அவரால் சரியாக எழுத வராது.


1932 ஆம் ஆண்டு சிட்னி பட்டணத்துக்கு வந்து " நித்தியவாசி " என்று வரும் ஏசாயா 57 : 15 ஆம் வசனத்திலுள்ள பகுதியை வைத்து பிரசங்கியார் முடிவில்லாத நித்தியத்தைக் குறித்துப் பிரசிங்கித்தார். அந்தக்கூட்டத்தில் அமர்ந்து தேவசெய்தி கேட்ட ஆர்தர் ஸ்டேஸ் தேவனால் அவருக்காக பிடிபட்டார். அத்துடன் நித்தியம் என்ற

வார்த்தையை பட்டணத்தின் தெருக்களில் எழுதும்படியாக கர்த்தர் தனக்கு கட்டளையிட்டார் என்று ஆர்தர் ஸ்டேஸ் கூறினார்.

ஆர்தர் ஸ்டேசை ஆஸ்திரேலிய நாட்டு மக்கள் திருவாளர். நித்தியம் என்ற பெயரில்தான் அழைத்து வருகின்றனர். அவருடைய நினைவைக்கொண்டாடும் வகையில் சிட்னி பட்டணத்து துறைமுகப் பாலத்தில் "நித்தியம்" என்ற வார்த்தையை ஆர்தர் ஸ்டேஸ் எழுதின எழுத்தைப்போல எழுதி புத்தாயிரம் ஆண்டான 2000 ஆம் ஆண்டில் உலகமெங்கும் உள்ளோர் அதைக் காணத்தக்கதாக தொலைக் காட்சியில் ஒளிபரப்பினார்கள். திருவாளர். நித்தியம் என்று அழைக்கப்பட்ட ஆர்தர் ஸ்டேசையும், "நித்தியம்" என்று எழுதப் பட்டுள்ள சிட்னி துறைமுக பாலத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணக்கூடும். முடிவில்லாத நித்தியம் என்பது மனுக்குலத்தை குறிப்பாக மனந்திரும்பாமல் பாவத்தில் வாழும் மக்களை அத்தனையாக நடுநடுங்க வைக்கும் ஒரு பயங்கர வார்த்தையாகும்.



ஒரு கிறிஸ்தவனுக்கு நித்தியத்தை குறித்த தரிசனம் கிடைத்துவிட்டால் பாவத்தை அவன் காணும்போது அலறி அடித்துக் கொண்டு ஜீவன் தப்ப ஓடுவான். இன்று கிறிஸ்தவர்களும், தேவ ஊழியர்களும் துணிந்து பாவம் செய்கிறார்கள் என்றால் அதின் அர்த்தம்



என்னவென்றால் அவர்களுக்கு இன்னும் முடிவில்லாத நித்தியத்தைப் பற்றிய தரிசனம் கிடைக்கவில்லை என்பதுதான். நமது கண்களுக்கு முன்பாக கரைகாணா சமுத்திரமான முடிவில்லாத நித்தியம் எப்பொழுதும் நிழலாடிக்கொண்டே இருக்கவேண்டும். நாம் படுக்கும்போதும், கண்விழிக்கும்போதும், வழிநடக்கும்போதும், பாவமானது இரத்த வருணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும்போதும் (நீதி 20 : 31) அது அடுக்கடுக்கான மிகுதியான இனிய சொற்களைப் பேசி, தன் உதடுகளின் மதுரவாக்கினால் நம்மை இணங்கப்பண்ண நயங்காட்டி நமக்கு முன்பாக தனது படுக்கையை ஆயத்தப்படுத்தி எகிப்து தேசத்து விசித்திரமான மெல்லிய வஸ்திரங்களால் அதை சிங்காரித்து, வெள்ளைப்போளம், சந்தனம், இலவங்கப்பட்டையால் வாசனைக் கட்டி, விடியற்காலம் வரை சம்போகத்துக்கு நம்மை வருந்தி அழைக்கும்போது (நீதி 7 : 16-21) நித்தியம் நமக்கு முன்பாக தனது பட்டயத்தை உருவி நிற்கும் காட்சியை நாம் கட்டாயம் கண்டே தீரவேண்டும்.

நித்தியத்தை குறித்து நாம் அடிக்கடி சிந்தித்து தியானிக்கும் போது நமது கிறிஸ்தவ வாழ்க்கை பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தமடையும். உலகத்தை வெறுத்து பரலோகத்தை வாஞ்சித்துக் கதற அது நமக்கு உதவி செய்யும். பாவத்தில் அழியும் மனுக்குலத்தை குறித்த ஆத்தும பாரத்தை அது நமக்கு கொடுக்கும். மனந்திரும்பாத நமது குடும்பத்தின் மக்கள், நமக்கு அருமையானவர்களை நமது ஜெபங்களில் நினைத்து அவர்களின் இரட்சிப்புக்காக போராட நித்தியம் நமக்கு கைகொடுத்து உதவும்.

இந்த தலையங்க செய்தியை நான் எழுதும்போது 2000 ஆம் வருடம் பிறந்து 3 மாதங்களும் ஓடி மறைந்துவிட்டன. இன்னும் 10 ஆண்டுகளுக்குள்ளாக நம்மில் அநேகர் முடிவில்லாத நித்தியத்துடன் ஒன்றரக்கலந்து சங்கமம் ஆகிவிடுவோம். 2050 ஆம் வருடம் பிறக்கும்போது ஒரு தலைமுறையினரே இந்த உலகத்தைவிட்டுக் கடந்து சென்று நித்தியத்துடன் ஒன்று கலந்துவிடுவார்கள். நம்மில் ஏராளமான பேர்களின் கல்லறைகள் கூட இருந்த இடம் தெரியாமல் அழிந்து போயிருக்கும்.

கர்த்தர் இந்த செய்தியின் மூலமாக உங்களோடு பேசுகின்றார். உங்களை தாழ்த்தி தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். பாவத்தை பாலாக பருகிக் குடிக்கும் கிறிஸ்தவனே, லஞ்சம் வாங்கும் கிறிஸ்தவ அதிகாரியே,

கள்ளத்தராசு கள்ளப்படிக்கற்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி பொய் நாவினால் பொருளை சம்பாதிக்கும் கிறிஸ்தவ வியாபாரிகளே, கைநிறைய மாதந்தோறும் அரசாங்கப் பணத்தை சம்பளமாகப் பெற்றும் உண்மையான மனதுடன் பணி செய்யாமல் காலத்தைப் போக்கடிக்கும் கிறிஸ்தவ அரசு உத்தியோகஸ்தர்களே, கர்த்தருடைய மேலான பரிசுத்த தேவ ஊழியங்களை பணம் காசுக்காகவும், பேர் புகழ் பெருமைக்காகவும் ஆத்தும பாரம் இல்லாமல் செய்துகொண்டிருக்கும் தேவ ஊழியரே, விபச்சாரம் வேசித்தனத்தில் துணிந்து ஈடுபட்டுள்ள கிறிஸ்தவ மக்களே, உங்கள் பாவங்களை விட்டு கண்ணீரோடும் கதறுதலோடும் உங்கள் மார்பில் அடித்து மனந்திரும்பி கர்த்தர் இயேசுவை அண்டிக் கொள்ளுங்கள். உங்களுடைய பாவங்களோடு உங்களது வாழ்க்கை முடிவில்லாத நித்தியத்தோடு இணைந்துவிடாதபடி உங்களைக் காத்துக் கொள்ளுங்கள். எந்த நிமிடமும் உங்கள் வாழ்வின் திரைச்சீலை உலக நாடக மேடையில் தரை இறங்கலாம். தேவ கோபம் பற்றி எரிந்து பாவத்திலும், பெருமையிலும், துணிகரத்திலும், மனந்திரும்ப மனமில்லாமலும் வாழும் உங்களை பட்சிக்கும் முன்னர் தேவ குமாரனை முத்தம் செய்து அவரில் அடைக்கலம் புகுந்து விடுங்கள். எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள். உங்கள் ஆத்துமா வாடும்படி உபவாசித்து ஜெபியுங்கள். பெரிய தேவ ஆசீர்வாதம் காண்பீர்கள். அதற்கான தேவகிருபைகளை நமக்காக தமது கடைசி துளி இரத்தம் வரை கல்வாரி மாமலை மேல் வடித்துக்கொடுத்த நம் அருமை கண்மணி இயேசு தகப்பன்தாமே உங்களுக்கும் எனக்கும் தந்தருள்வாராக.

PLAIN SPEAKING

There is no holiness without a warfare. A giving Saviour should have giving disciples. The begining of the way to heaven is to feel that we are in the way to hell.

The mere love of sermons is no sign of grace.

The surest mark of true conversion is humility.

Satan is never so dangerous as when he appears as an angel of light, the world is never so dangerous to the Christian as when it smiles. When Judas betrayed his Lord, it was with a kiss. The believer that is proof against the world's frown does well ; but he that is proof against its flattery does better.

(JOHN CHARLES RYLE)

மகளே அமீனா, நீ நம்பும் ஆண்டவர் உன்னைக் கவனித்துக் கொள்ளுவார்

அமீனா பீகம் அம்மையாரின் திகைப்பூட்டும் அனுபவ சாட்சி

அதுதான் எனது தாய் வீட்டின் கடைசி இரா சாப்பாடு. அம்மா, எனக்கு மீன் குழம்பு சோறு எனது வாயில் ஊட்டி கண்ணீர்விட்டு கதறி ஏங்கி அழுதார்கள். சாப்பாட்டுக்குப் பின்னர் எனது தாய் என்னை தனது மார்போடு அணைத்து முத்தமிட்டு " மகளே அமீனா, நீ நம்பும் ஆண்டவர் உன்னைக் கவனித்துக் கொள்ளுவார் " என்று கூறி எனக்கு விடை கொடுத்தார்கள். எனது அருமை தாயின் அந்த ஆசீர்வாதமான வார்த்தைகளோடு கேரளாவிலுள்ள குன்னமுல்லை என்ற எனது கிராமத்திலிருந்து திருவனந்தபுரம் இரயில் நிலையத்துக்கு புறப்பட்டேன். எனது அருமை தாயை எனது வாழ்வில் நான் அதற்கப்பால் பார்க்கவே இல்லை. 53 வருடங்களுக்கு முன்பாக இந்த சம்பவம் நடந்தது.

திருவனந்தபுரம் இரயில் நிலையத்தில் ரயிலுக்காக வந்திருந்தோர் எல்லாரும் குடும்பங்களாக, குதூகலத்துடன் காணப்பட்டனர். நான் மாத்திரம் அங்கு தனித்தவளாக நின்று கொண்டிருந்தேன். ஆனால், நீண்ட நேரமாக நான் அப்படி தனித்து நிற்கவில்லை. நான் திரும்பி பார்த்தபோது ஒரு சிறிய கூட்டம் மக்கள் எனக்காக காத்துக்கொண்டிருந்தனர். ஆம், அவர்கள் கிறிஸ்தவ விசுவாசிகள். அந்த அன்பான தேவ மக்களிடம் நான் கை அசைத்து விடைபெற்றுக்கொண்டு பாக்கிஸ்தானிலுள்ள பெஷாவர் நகருக்கு போவதற்காக இரயில் ஏறினேன்.

ரயில் திருவனந்தபுரத்தை விட்டு புறப்பட்டதும் விரைவாக கேரளத்து வீடுகளையும், கண்கவர் தென்னைமரத் தோப்புகளையும் கடந்து ஓடிக்கொண்டிருந்தது. அந்த நேரம் நான் எனது மனதுக்குள்ளாக அப்பா இப்பொழுது தனது நித்திரையிலிருந்து கண் விழித்திருப்பார்களா என்று எண்ணிப்பார்த்தேன். அந்த நாள் இரவுதான் என் தகப்பனார் ஒரு கசாப்புக் கடை கத்தியை கூர்மையாக தீட்டி " நீ வீட்டைவிட்டு தப்பிப்போக நினைத்தால் நான் உன்னை துண்டுதுண்டாக வெட்டிப் போடுவேன் " என்று கூறிவிட்டு தனது கூர்மையான கத்தியை தனது தலையணைக்கு அடியில் வைத்துக்கொண்டு தூங்கிவிட்டார்.

எனது தகப்பனார் அந்த நாளின் அதிகாலையில் எப்பொழுதும் இல்லாதவிதத்தில் அசாதாரணமாக தூங்கினார். அவர் வழக்கமாக எழும்பவேண்டிய காலை நேரத்துக்கும் கூடுதலாக இன்னும் உறக்க நிலையில் இருந்தார். அந்தச் சமயம் தான் நான் எனது வீட்டைவிட்டுக் கிளம்பினேன். அன்று ஏதேன் பூங்காவில் தேவன் நம் ஆதி தகப்பன் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை கொடுத்தது போல எனது தகப்பனுக்கும் அதே நித்திரையை கொடுத்து நான் எனது வீட்டிலிருந்து ஜீவன் தப்ப ஓடிச்செல்ல கர்த்தர் எனக்கு ஒரு வழியை திறந்தார்.

எனது இளமைக்காலம்

எனது தகப்பனார் தனது வியாபாரத்தில் நல்ல செல்வாக்குள்ள வரும் எங்களுடைய முகமதிய சமுதாயத்தில் மெத்தவும் கண்ணியமாக மதிக்கப்பட்டவருமாக இருந்தார். அவருடைய பிள்ளைகள் ஏழு பேர்களும் இஸ்லாமிய பக்தி மார்க்கத்திற்கிணங்க தொழுகை, நோன்பு நோற்றல், தானதர்மம் செய்தல் போன்றவற்றில் சீராக நடந்துகொள்ள வேண்டும் என்று அவர் கண்டிப்பு செய்தார். பிள்ளைகளுடைய எதிர்கால வாழ்க்கையை விசேஷமாக அவருடைய பெண் மக்களின் வாழ்க்கையைக் குறித்து மகா கவனம் செலுத்தி வந்தார். எனது மூத்த சகோதரியை மிகவும் இளமை காலத்திலேயே அவர் திருமணம் செய்து கொடுத்துவிட்டார். அதிர்ஷ்ட வசமாக என்னைக்குறித்து அவர் வேறு திட்டங்கள் வைத்திருந்தார். நான் மெட்ரிகுலேசன் படித்து முடித்து நல்லதொரு வேலையையும் பெற்று எனது வாழ்வில் நான் எல்லா நலன்களுடனும் வாழவேண்டும் என்று எனது அப்பா அதிகமாக ஆசைப்பட்டார்.

பென்னம்மா எங்கள் வீட்டுக்கு பக்கத்திலுள்ளவள். எனது மிகுந்த அன்புக்கும், பாசத்துக்கும் உரிய என்னுடைய தோழி அவள். நாங்கள் இருவரும் ஒவ்வொரு நாளின் பெரும்பகுதியை ஒன்றாகச் செலவிட்டோம். பள்ளியில் கொடுக்கப்படும் கணக்குப்பாடங்களை நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து போட்டு விடைகள் கண்டுபிடித்து இருவரும் இன்பமாக பேசிக்கொண்டிருப்போம். நாங்கள் இருவரும் இணைபிரியா தோழிகளாக இருந்தோம்.

பென்னம்மாவுடன் கூடிச்சேர்ந்து நேரம் செலவிட எனது பெற்றோரும் என்னை தாராளமாக அனுமதித்தனர். காரணம், எனது பெற்றோரும், பென்னம்மாவின் பெற்றோரும் குடும்ப நண்பர்களாக இருந்தனர். எனது பெற்றோர், பென்னம்மாவின் தாயாரை நேசித்து

ணப்படுத்தினார்கள். பென்னம்மாவின் தாயார் தனது ஓவ்வு நேரங்களில் சுற்றியுள்ள வீடுகளுக்குச் சென்று அங்குள்ள பெண் மக்களிடம் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறுவார்கள். எனது தாயாரும் அப்படி சுவிசேஷம் கேட்ட பெண்களில் ஒருவராவார்கள். அதின் காரணமாக எனது அம்மா ஆண்டவர் இயேசுவின் அன்புக்கு அடிமையாகி அவரை தனது முழு இருதயத்தோடும் விசுவாசித்து நம்பினார்கள். எனது தாயார் ஒரு இரகசிய கிறிஸ்தவளாக இருந்தார்கள். எனது தாயாரின் இந்த அர்ப்பணிப்புத்தான் ஆண்டவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட எனது வாழ்வைச் சந்தித்த அநேக போராட்டங்கள், பாடுகள், உபத்திரவங்களில் என்னைத் தேற்றி எனக்கு தேவ ஆலோசனைகள் கொடுத்து, நான் சோர்ந்து போகாதபடிக்கு எனக்கு உதவிகரம் கொடுத்தார்கள். ஆனால், எனது தாய்க்கும் எனக்கும் இடையில் நடந்த இந்தக் காரியங்கள் எதுவும் எனது தந்தைக்குத் தெரியாது. எனது தகப்பனாருக்கு முன்பாக எனது தாயார் எப்பொழுதும் அஞ்சி நடுங்கியே காணப்பட்டார்கள்.

எங்களுடைய சம்பாஷணைகளின் போது பென்னம்மாவும் அவளுடைய சகோதரி தங்கம்மாவும் ஆண்டவர் இயேசுவை தங்களுடைய மிக நெருங்கிய சிநேகிதனாக குறிப்பிடுவதை நான் கவனித்தேன். அவர்கள் அவரை தங்கள் இரட்சகர் என்றும், தங்கள் பரம தகப்பன் என்றும், தங்கள் தேவன் என்றும் அழைத்தனர். இந்த ஆண்டவர் யார்? என்று நான் எனக்குள்ளாக ஆச்சரியம் அடைந்தேன். இந்த ஆச்சரியமான எனது ஆர்வமானது பென்னம்மாவும், தங்கம்மாவும் ஒழுங்காக கலந்துகொள்ளும் ஓய்வுநாள் பள்ளிக்கு என்னை அழைத்துச் சென்றது.

ஓய்வுநாட் பள்ளி ஆசிரியை தனது பாடங்களில் ஒன்றில் " எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள் " (ரோ 3 : 23) என்ற தேவனுடைய வசனத்தை குறிப்பிட்டார்கள். அப்படியானால் " எல்லாரும் " என்ற இடத்தில் நானும் சேர்ந்துள்ளேனே என்று எனக்குள்ளாக சிந்தித்துக் கொண்டிருக்கையில் ஆசிரியை " பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோ 6 : 23) என்ற மற்றொரு கர்த்தருடைய வார்த்தையை வாசித்தார்கள். " பாவத்தின் சம்பளம் மரணம் " என்ற வார்த்தையில் நடுநடுங்கிய நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக உள்ள ஈவாகிய நித்திய ஜீவனைக்குறித்து எண்ணியபோது நான் எனக்குள்ளாக ஆனந்தம்

அடைந்தேன். நான் அமைதியானேன். இந்த ஆண்டவர்தான் அன்புநிறைந்த ஆண்டவர். அவர் என்னை பாவியென்று நியாயந் தீர்க்கவில்லை. மாறாக, என் பாவங்கள் எல்லாவற்றையும் கழுவி சுத்திகரித்து அப்புறப்படுத்தி எனக்கு தமது நித்திய ஜீவனைத் தருவதாக வாக்களித்துள்ளார். ஆனால், நான் தேவனுடைய இந்த ஈவை எப்படி பெற்றுக்கொள்ளுவது? என்று எனக்குள்ளாக தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருக்கையில் அதற்கான விடையை தேவனுடைய வசனம் கொடுத்தது. " கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய் " (ரோ 10 : 9)

எனது இரட்சிப்பும், எனது பாடுகளும்

மிகவும் எளிமையான எனது விசுவாசத்தாலும், கீழ்ப் படிதலாலும் நான் எனது பாவங்களை ஆண்டவர் இயேசுவிடம் கண்ணீரோடு அறிக்கையிட்டு அவரை எனது வாழ்வின் சொந்த ஆத்தும நேசராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டேன். இப்பொழுது நித்திய ஜீவன் எனக்கு சொந்தமாயிற்று. கர்த்தருக்கே துதி உண்டாவதாக.

குன்னமுல்லையிலுள்ள ஜெபவீட்டில் எனக்கு ஒரு வேதாகமம் அன்பளிப்பாக கொடுத்தார்கள். அதை நான் மிகுந்த ஆசை ஆவலோடு வாசித்தேன். தேவனுடைய வார்த்தைகள் எனக்கு பாலும், தேனுமாக இருந்தது. தேவனுடைய எல்லா வார்த்தைகளுக்கும் அப்படியே நான் கீழ்ப்படிந்து நடக்க ஆவல் கொண்டேன். அதின்படி நான் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்து எனது விசுவாசத்தை வெளியரங்கமாக அறிக்கையிட ஆவல் கொண்டேன். அதற்காக நான் குன்னமுலை ஜெபவீட்டின் மூப்பர்களை அணுகினேன். அவர்கள் உடனே எனது வார்த்தைகளுக்கு இணங்காமல் கர்த்தருக்குள் பொறுமையாயிருக்க எனக்கு ஆலோசனை கொடுத்தார்கள். எனினும், அங்கு கரமானா ஆற்றில் நடைபெற்ற ஒரு முழுக்கு ஞானஸ்நான ஆராதனையை நான் பார்க்கும்படியாக என்னை அழைத்தார்கள். நான் கரமானா ஆற்றில் நடந்த ஞானஸ்நான ஆராதனையை பார்த்த விபரம் நான் வீடு போய் சேர்வதற்குள்ளாக எனது தகப்பனாருக்கு கிடைத்தது. அவர் ஒரு நல்ல கம்பை என்னை அடிப்பதற்காக ஆயத்தம் செய்து தயார் நிலையில் இருந்தார். நான் எங்கள் வீட்டுக்குள் அடி எடுத்து வைத்ததுதான் தாமதம் அவர் என்னை அடித்து நொறுக்கிவிட்டார்.

அவருடைய கடுங்கோபம் தனிந்ததும் அவர் என்னைப் பார்த்து "நீ ஞானஸ்நானம் எடுத்தாயா?" என்று கேட்டார். நான் " இல்லை " என்று பதில் அளித்தேன். "அவர்களுடைய மார்க்கத்தை நீ அதிகமாக விரும்புவதைப் போல எனக்குத் தெரிகிறது. நீ இப்படி அவர்கள் மதத்தில் ஆர்வம் காட்டினால் நான் உனது படிப்பை நிறுத்திவிடுவேன் என்று என்னை எச்சரித்ததுடன் " இன்றிலிருந்து நீ பென்னம்மா வீட்டுக்கு செல்லக் கூடாது. அவர்களுடைய மார்க்க சம்பந்தமாக நீ எதுவும் செய்யக்கூடாது " என்றும் என்னைக் கடிந்து கொண்டார்.

அப்பாவுடைய அடிகள் என் சரீரத்தை நொய்ய உழுத நிலம் போல இரத்தக்களறி ஆக்கினபோதினும் தேவனுடைய ஆறுதலும், அம்மாவுடைய ஆறுதலும் எனக்கு கிடைக்கப் பெற்றதால் மிகுந்த தேவ சமாதானத்தோடு நான் காணப்பட்டேன். எனது ஊரிலுள்ள அன்பான விசுவாசிகளின் ஜெபங்களும், அன்பும், அரவணைப்பும் எனக்கு தொடர்ந்து கிடைத்து வந்தது. நான் தேவனுடைய வேத புத்தகத்தை ஆசை ஆவலாக எனது பெரிய அகராதிக்குள் மறைத்துவைத்தும், இரவு நேரங்களிலும் வாசித்து வந்தேன். ஒரு நாள் நான் பெரிய அகராதிக்குள் வேதத்தை மறைத்து வைத்து வாசிப்பதை எனது அண்ணன் ஒருவன் (உடன் பிறந்தவன் அல்ல) எனது நாற்காலிக்கு பின்னாலிருந்து பார்த்து நான் வாசிக்கும் புத்தகத்தை கொடுக்கும்படியாக கேட்டான். நான் எனது அன்பளிப்பு வேதாகமத்தை அவனிடம் கொடுத்தபோது அதை அவன் எனது தகப்பனாரிடம் கொடுத்துவிட்டான். அவ்வளவுதான், எனது தகப்பனார் தனது அறைக்கு என்னை அழைத்து எனது கண்களுக்கு முன்பாக எனது வேதாகமத்தை கண்டம் துண்டமாக கிழித்து வீசி எறிந்து விட்டார்.

தேவ மக்களுடைய பரிசுத்த ஐக்கியமில்லாமலும், தேவனுடைய வார்த்தைகளை வாசியாமலும் இருந்த நான் எனது தகப்பனாரின் கொடுமையால் எனது இருதயத்தின் சமாதானத்தை இழந்து, தேவனை விட்டு விலகிச்சென்று விடுவேனோ என்று பெரிதும் அச்சம் அடைந்தேன். எனினும், தேவனுடைய அநாதி அன்பும், அவருடைய திரண்ட கிருபைகளும் என்னை பத்திரமாக தாங்கிக் கொண்டது.

மெட்ரிகுலேசன் அரசாங்க தேர்வுக்குப் பின்னர் எனது வேதாகமத்தை பிடுங்கி எனது தகப்பனாரிடம் கொடுத்த அந்த பொல்லாத வாலிபனுக்கே என்னை திருமணம் செய்து கொடுக்க எனது தந்தை மனக்கோட்டை கட்டி ஆவலாக காத்திருந்தார்.

இதற்கிடையில் எனது குன்னமுல்லை ஜெப வீட்டிலுள்ள விசுவாசிகள் எனது சார்பாக ஒரு வேலை விண்ணப்பத்தை ராணுவத்திற்கு ஏற்கெனவே அனுப்பியிருந்தனர். எனது காரியத்தில் தேவன் நேரிடையாகச் செயல்பட்டு ஒரு பெரிய அதிசயம் செய்தார். கொஞ்ச நாட்களுக்குள்ளாகவே ராணுவத்திலிருந்து எனது வேலைக்கான உத்தரவும், பாக்கிஸ்தானிலுள்ள பெஷாவர் பட்டணத்திலுள்ள ராணுவ கேந்திரம் வரை செல்லுவதற்கான இலவச ரயில் பிரயாண சீட்டும் கிடைத்தது. உடனே நான் எனது வீட்டைவிட்டுப் புறப்பட்டு பெஷாவர் பட்டணம் வந்து சேர்ந்தேன். பெஷாவரில் எந்த ஒரு தேவாலய ஆராதனையோ அல்லது விசுவாசிகளின் ஐக்கியமோ எனக்கு கிடைக்கவில்லை. ராணுவ கட்டுப்பாடுகளின் மத்தியிலும், கிறிஸ்தவ ஐக்கியம் எனக்கு இல்லாதபோதினும் நான் கர்த்தருக்குள் வளர்ந்து வந்தேன்.

நான் செத்துப் போனேன்.

நான் பெஷாவருக்கு சென்றபோதினும் எனது பெற்றோருடன் கடித தொடர்பு வைத்திருந்தேன். எனது வீட்டிலிருந்து வந்த கடிதங்களின் மூலமாக நான் செத்துப்போனேன் என்பதை அறிந்தேன். நான் வீட்டைவிட்டு பெஷாவருக்கு தப்பி ஓடிவிட்டேன் என்பதை அறிந்த என் தகப்பனார் கடுங்கோபம் கொண்டு ஒரு செய்தி தாளிலே " எனது 17 வயது மகள் அமீனா பீகம் ஒரு விபத்திலே செத்துப்போனாள் " என்று விளம்பரம் கொடுத்ததுடன் ஒரு பெரிய விருந்தை வீட்டில் வைத்து எனது சாவுச்சடங்கையும் உற்றார் உறவினருடன் நடத்தி முடித்து நான் அவரது மகள் அல்ல என்பதை பூரணமாக உறுதி செய்து விட்டார். அந்த செய்தி தாள் விளம்பரத்தையும் வீட்டில் நடந்த காரியங்களையும் நான் கேள்விப்பட்டதன் பின்னர் நான் எனது வீட்டுக்குத் திரும்பிச் செல்லவே இல்லை. 2 வருட ராணுவ சேவைக்குப் பின்னர் எனது ஊர் தேவ மக்கள் எனக்கு ஒரு வாழ்க்கைத் துணையை பம்பாயில் கண்டுபிடித்திருப்பதாக எனக்கு தகவல் கொடுத்தனர். அதின் காரணமாக நான் எனது ராணுவ சேவையை ராஜிநாமா செய்து விட்டு பம்பாய்க்கு வந்து சேர்ந்தேன். பம்பாய் வந்து சேர்ந்ததும் முதற்காரியமாக கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் எடுத்துக்கொண்டு பம்பாய் பட்டணத்திலுள்ள ஒரு ஜெப ஐக்கியத்துடன் இணைந்தேன்.

எனது திருமணம்

தமிழ்நாடு, கேரளா மாநிலங்களின் எல்லைப்பகுதியிலுள்ள நெய்யாற்றின்கரை என்ற ஊரில் ஒரு கன்வென்ஷன் கூட்டத்தில் தேவ செய்தியை கொடுத்த பக்த சிரோன்மணி சாதுசுந்தர்சிங்கை ஒரு விசுவாசி தன்னுடைய வீட்டிற்கு பகல் விருந்துக்கு அழைத்திருந்தார். விசுவாசியின் மனைவி கர்ப்பவதியாக இருந்ததுடன் மிகவும் சோர்பாக அன்று காணப்பட்டார்கள். சாது சுந்தர்சிங் அந்த பெண்ணைப் பார்த்து " சகோதரியே, தேவன் உங்களுக்கு ஒரு குமாரனைக் கொடுக்க போகின்றார், அவனை " கர்த்தருடைய தாசன் " என்று அர்த்தம் கொள்ளும் "சுவாமிதாஸ்" என்று பெயரிட்டுக் கூப்பிடுங்கள் என்று கூறினார். பக்தனின் வார்த்தையின்படியே அந்த பெண்ணுக்கு விரைவில் ஒரு ஆண் மகவு பிறந்தது. குழந்தையின் பெற்றோர் அந்தப்பாலகனுக்கு ஜோசப் சுவாமிதாஸ் என்று பெயரிட்டனர். இது நடந்தது 1923 ஆம் வருடமாகும்.

பின்னர் 1947 ஆம் ஆண்டு நானும் மேலே குறிப்பிட்ட சுவாமிதாஸ் அவர்களும் திருமணம் செய்து கொண்டோம். எனது கணவர் பம்பாயிலிருந்து பூனாவுக்கு ராணுவத்தில் பணிபுரியச் சென்றார். இங்குதான் தேவன் எங்கள் இருவரையும் தம்முடைய முழு நேரப்பணிக்கு அழைத்தார். ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நாங்கள் சென்னையிலுள்ள பரங்கிப்பேட்டைக்கு தேவ ஊழியர்களாகச் சென்றோம். எனது கணவர் தனது ராணுவ பணியை கர்த்தருக்காக விட்டுவிட்டார். 1956 ஆம் ஆண்டு சென்னை வந்த எங்களை கர்த்தர் தமது ஊழியத்தின் பாதையிலே ஆச்சரியமாக பயன்படுத்தினார். எனது கணவருடைய பெயருக்கு ஏற்றாற்போல அவர் ஆண்டவருடைய தாசனாக தான் மரணமடைந்த 56 ஆம் வயது வரை கர்த்தருக்கு மகிமையானதோர் தேவ ஊழியம் செய்தார்.

உண்மையாகவே எனது தேவபக்தியுள்ள தாயாரின் வார்த்தைகள் தீர்க்கத்தரிசன வார்த்தைகளாகும். நான் நம்பின எனது அருமை ஆண்டவர் இயேசு எப்பொழுதும் என்னோடு இருக்கின்றார். 53 ஆண்டுகளுக்கு முன்பாக நான் எனது கடைசி இராச்சாப்பாட்டை எனது தகப்பனாருடைய வீட்டில் சாப்பிட்டபோதிலும் உலகத்தோற்றத்துக்கு முன்பாக என்னைத் தமக்கென தெரிந்து கொண்ட என் அன்பின் தேவன் இடைப்பட்ட ஆண்டுகளில் ஒரு நாள் கூட ஆகாரம் இல்லாமல் என்னை பசிப்பட்டினியாக போடவில்லை. என்னைப் பெற்ற தகப்பனுக்கு நான்

ஒரு செத்துப்போன மகள். ஆனால், என் பரலோக தகப்பனுக்கு அவருடைய நேச குமாரனாம் இயேசு கிறிஸ்துவின் மூலமாக நான் என்றும் இம்மையிலும் மறுமையிலும் உயிரோடிருக்கும் நேச குமாரத்தி. அல்லேலூயா.

(Courtesy - HARVEST TIMES, Mumbai)

நீங்கள் எனக்கு சாட்சிகள்

சமீபத்தில் ஒரு கர்த்தருடைய பிள்ளையை நான் சந்தித்தேன். நெல்லை மாவட்டத்தில் உள்ள ஒரு பெரிய கிராமத்தில் முழுமையும் முகமதிய மக்கள் வாழும் ஒரு பெரிய முஸ்லீம் தெருவில் ஒரு முகமதியர் வீட்டில் வாடகைக்கு இருக்கும் அவர்கள் தனது சாட்சியை என்னுடன் பகிர்ந்து கொண்டார்கள். கர்த்தருக்கு மகிமையாகவும், உங்களுக்கு தேவ ஆசீர்வாதமாக இருக்கவும் அதை நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றேன்.

மேற்கண்ட கிறிஸ்தவ சகோதரி குடியிருக்கும் முகமதிய தெருவுக்கு வெளி ஊரிலிருந்து ஒரு முகமதியர் வந்திருக்கின்றார். முழுவதும் இஸ்லாமிய மக்கள் வாழும் தெருவில் தனது வீட்டின் வராந்தா சுவர்களில் தேவனுடைய அநேக வசனங்களை தொங்க வைத்து வாழும் நமது சகோதரியை குறித்து அவர் எரிச்சலடைந்து அந்த வீட்டுக்கு சொந்தக்காரரான முகமதியரை அணுகி " முழுவதும் முகமதியர்களாகிய நாம் வாழ்கின்ற இடத்தில், உங்கள் வீட்டில் இடம் கொடுத்து அஞ்ஞானியான ஒரு கிறிஸ்தவ குடும்பம் இருக்கவும், அதிலும் நமது பெரிய பள்ளிவாசல் இருக்கும் தொழுகை ஸ்தலத்துக்கு அருகில் அவர்களுக்கு தங்க இடம் கொடுத்திருப்பது தவறாகும். அவர்களை வீட்டை விட்டு உடனே காலி பண்ணச் செய்யுங்கள்" என்று சொல்லி இருக்கின்றார். அந்த மனிதருடைய வார்த்தையை மிகவும் பொறுமையுடன் கேட்டுவிட்டு நமது முகமதிய வீட்டுக்காரர் அவருக்கு கீழ்க்கண்டவாறு பதில் கொடுத்துள்ளார்.

"இந்த கிறிஸ்தவ குடும்பம் எனது வீட்டில் பல்லாண்டு காலமாக குடியிருந்து வருகின்றனர். அவர்கள் எனக்கு அன்பும், ஆதரவுமாக இருக்கின்றார்கள். அவர்கள் எனக்கு எந்த தீங்கும் இதுவரை செய்யவில்லை. நமது இஸ்லாம் மார்க்கத்துக்கு எதிராகவும் அவர்கள் எதுவுமே பண்ணவில்லை. இன்னும் ஒரு முக்கியமான காரியத்தை நான் உங்களுக்கு சொல்லியே ஆக வேண்டும். அதாவது, இந்த தெருவிலுள்ள எல்லா முகமதியர்களைக் காட்டிலும் இந்த கிறிஸ்தவ மக்கள் நற்குணசாலிகளாக இருக்கின்றார்கள். இவர்களின் அன்பையும், பாசத்தையும், அரவணைப்பையும் எனது தெருவிலுள்ள இஸ்லாமியர் எவரிடமும் நான் காணவில்லை" என்று கூறினார். இந்த வார்த்தைகளை கேட்ட அந்த வெளி ஊர் முகமதியர் பதில் பேச எந்த ஒரு வார்த்தைகளின்றி மௌனமாக எழுந்து நகர்ந்து போய்விட்டார்.

இன்று நம்மை குறித்து தேவன் விரும்பும் சாட்சி இதுவேதான். புறமதஸ்தருக்கு முன்பாக நாம் இப்படித்தான் ஜீவனுள்ள சாட்சியாக வாழ்ந்து காட்டவேண்டும். " மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது" *(மத் 5 : 16)*

பரதேசியின் மோட்ச பிரயாணம் - 18

அகோர பயங்கர ராட்சதன் பிரயாணிகளைப் பிடித்தல்

அவர்கள் படுத்துத் தூங்கின இடத்திற்குச் சமீபத்திலேயே ஒரு அரண்மனை இருந்தது. அதற்குச் **சந்தேக துருக்கம்** என்று பெயர். (சந்தேக துருக்கம் என்பது, மெய்க்கிறிஸ்தவர்கள் முதலாய் பாவத்துக்கு இடம் கொடுத்த பின்பு, தங்களுடைய ஆத்தும ரட்சிப்பைக் குறித்து பயந்து சந்தேகிப்பதைக் குறிக்கிறது) சந்தேக துருக்கம் அரண்மனையும் பிரயாணிகள் படுத்திருந்த பூமியும் **அகோர பயங்கர ராட்சதன்** என்று அழைக்கப்பட்ட ஒரு அரசனுக்கு சொந்தமாய் இருந்தது. (அகோர பயங்கர ராட்சதன் என்பது, எல்லா நம்பிக்கையும் அற்றுப் போகிறதைக் குறிக்கிறது. இது ஒரு பலத்த ராட்சதனைப் போல் அவிசுவாசிகளைக் கடைசியாகப் பிடித்துக்கொள்ளும்) அகோர பயங்கர ராட்சதன் மறுநாள் அருணோதயத்தில் எழுந்திருந்து தனது மைதானத்தில் அங்கும் இங்கும் உலாவி சுகத்தை அனுபவிக்கிற வேளையில் பிரயாணிகள் இருவரும் தன் நிலத்தில் நித்திரை பண்ணுகிறதை கண்டு கொண்டான். உடனே அவன் உக்கிர கோபத்தோடு முகத்தைச் சுளித்துக் கொண்டு, அவர்களண்டை போய், யார் இங்கே? எழும்புங்கள் என்று பெருஞ்சத்தம் போட்டான். அவர்கள் துடித்து விழித்து எழுந்தார்கள். நீங்கள் எங்கேயிருந்து வந்தீர்கள்? என் பூமியில் என்ன செய்கிறீர்கள்? என்று ராட்சதன் கேட்டான். அதற்கு அவர்கள் : ஐயா ! நாங்கள் மோட்சப் பிரயாணிகள், வழிதப்பி உமது பூமியில் வந்துவிட்டோம் என்று சொன்னார்கள். உடனே ராட்சதன் முன்னிலும் அதிக மூர்க்கமாகி, நீங்கள் எவ்வளவேனும் என்னை மதியாமல் எனது பூமியில் வந்து அதைக் காலாகோலமாய் மிதித்து, கெடுத்து , அதிலே படுத்து உறங்கி பாழாக்கிப் போட்டீர்கள். ஆகையால் நடவுங்கள், முன்னால் நடவுங்கள் என்று ஓட்டினான். ராட்சதன் அவர்களைவிட அதி பராக்கிரமனானபடியால் அவர்கள் எதுவும் பேசாமல், அவனுக்கு முன்னே நடந்து போனார்கள். மேலும் தப்பிதம் தங்கள்மேல் இருக்கிறதென்று உணர்ந்தபடியால் ஒன்றும் பேச அவர்கள் துணியவில்லை. ராட்சதன் அவர்களை நடத்திக்கொண்டு தன் கோட்டைக்குள் இருந்த ஒரு அரண்மனைக்குள் கொண்டுபோய் அடைத்து வைத்தான். அது மகா இருளும் நாற்றமுள்ள ஒரு கிடங்காயும்,

அவ்விருவருடைய மனதுக்கு எவ்வளவேனும் பொருந்தாத இடமாயும் இருந்தது. இவ்விடத்தில் அவர்கள் புதன்கிழமை காலை முதல் சனிக்கிழமை இரவுமட்டும் அடைபட்டுக்கிடந்தார்கள். ஒரு பிடி அன்னமாவது, ஒரு சொட்டு தண்ணீராவது அவர்களுக்கு கிடைக்க வில்லை. மின்மினிப்புழுவுக்கொத்த வெளிச்சமாவது அங்கே வீசவில்லை. என்னமாய் இருக்கிறீர்கள் என்று வந்து விசாரிப்பாரும் இல்லா திருந்தார்கள். ஆகையால் அவர்கள் நிலைமை மகா நிர்ப்பந்தத்தில் இருந்தது. தங்கள் சிநேகிதருக்கும் அறிமுகமானவர்களுக்கும் விலகி வெகு தூரத்தில் இருந்தார்கள். இவ்விடத்தில் கிறிஸ்தியானுக்கு இரண்டுபங்கு துக்கம் இருந்தது. சிறைச்சாலையின் துன்பத்தோடு நம்முடைய விவேகத் தாழ்ச்சியினாலும் ஆத்திரப்புத்தியினாலும்தானே இவ்வளவு சங்கடம் நேரிட்டதென்கிற கவலையும் அவனை வேதனைப்படுத்தியது.

இந்த அகோர பயங்கர ராட்சதனுக்கு **கூச்சம்** என்னப்பட்ட ஒரு மனைவி இருந்தாள். (கூச்சம் என்பது, தேவனுடைய வாக்குத் தத்தங்களைப் பற்றி உண்டாகும் அவநம்பிக்கையைக் குறிக்கிறது) ராட்சதன் அன்று படுத்துக்கொள்ளப் போகும் போது தன் மனைவியை நோக்கி: ஆ என் நேசக் கூச்சமே! இன்று பகலில் நடந்த ஒரு சமாச்சாரத்தைக் கேள். நமது பூமியில் இரண்டு பிரயாணிகள் படுத்திருந்தார்கள். அவர்களை நான் கையோடு பிடித்து, நமது காவற்கிடங்கு ஒன்றில் அடைத்து வைத்திருக்கிறேன் என்று சொல்லி, இன்னும் அவர்களுக்கு செய்யவேண்டிய தண்டனை ஏதாவது உண்டானால் உன் கூச்ச ஆலோசனையோடு சொல்லுவாயாக என்று கேட்டான். அதைக்கேட்ட கூச்சம் : ஆ, என் ராட்சத மன்னரே, அவர்கள் யார்? எவ்விடத்தார் எங்கே போகிறார்கள்? என்று கேட்டாள். அதற்கு ராட்சதன் சொல்ல வேண்டியதை சொன்னான்.

அதைக்கேட்ட கூச்சம் சொல்லுவாள் : நீர் அதிகாலையில் விழித்தவுடனே போய் அவர்கள் இருவரையும் இரக்கமில்லாமல் அடிக்கிறதைப்போல் நல்ல யோசனை வேறொன்றுமில்லை என்று சிந்திக்கிறேன் என்றாள். அந்த ஆலோசனையின் பிரகாரம் ராட்சதன் மறுநாள் அதிகாலை விடிகிற சமயத்தில் எழுந்து, கணுக்கணுவாய் இருந்த ஒரு கனத்த தடியையும் எடுத்துக்கொண்டு, பிரயாணிகள் அடைப் பட்டிருந்த கிடங்கினுள்ளே போய், உக்கிரகோபத்தோடு கூச்சலிட்டு, அவர்களை நாய்களைப்போல பாவித்து, மானபங்கமாய்த் திட்டினான். இப்படி அவன் திட்டும்படியாக அவர்கள் ஒரு வார்த்தையாகிலும்

பேசினதே இல்லை. அப்புறம் அவன் அவர்கள் மேல் விழுந்து அடிதண்டமாய் அடித்தான். அவர்கள் அவனை எதிர்த்து மடக்கவாவது, அக்கம்பக்கம் புரளவாவது சத்துவமில்லாமல் போனார்கள். அப்புறம் அவர்கள் தங்கள் நிர்ப்பந்த நிலைமையைப்பற்றி புலம்பவும், தங்களுக்கு உண்டான வருத்தத்தை உணர்ந்து துக்கிக்கவும் தனியே விட்டுப்போட்டு போய்விட்டான். ஆகவே அந்த நாள் முழுவதையும் அவர்கள் பெருமூச்சு விடுவதிலும் அங்கலாய்த்து ஏங்குவதிலுமே கழித்தார்கள்.

மறுநாள் இரவு கூச்சம் என்பவள் தனது கணவன் அகோர பயங்கர ராட்சதனிடத்தில் மோட்ச பிரயாணிகளைக் குறித்து விசாரித்தபோது, அவர்கள் இன்னும் உயிரோடிருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டு : என் கணவரே, நீர் நாளைய தினம் அதிகாலையில் போய் , அவர்கள் தங்கள் உயிரைத் தாங்களே மாய்த்துக் கொள்ளும்படியான ஆலோசனை சொல்லும் என்று சொல்லிக் கொடுத்தாள். அதின்படியே அகோர பயங்கர ராட்சதன் மறுநாள் அருணோதய நேரத்தில் எழுந்து புறப்பட்டு அவர்களண்டை முன்போல கோபாவேசத்துடன் போய் தான் முந்தினநாள் அடித்த அடிகளால் அவர்கள் படுகாயப்பட்டு, படுத்த இடம் மாறாமல் கிடக்கிறதைக் கண்டு, அவர்களைக் கூப்பிட்டு, நீங்கள் இந்தக் கிடங்கைவிட்டு வெளியேறப் பிரியம் இல்லாதிருக்கிறபடியால், ஒரு கத்தியால் குத்திக்கொண்டாவது, கயிற்றால் தூக்குப்போட்டுக் கொண்டாவது , அல்லது விஷம் குடித்தாவது உங்கள் உயிரை மாய்த்துக் கொண்டாலன்றி வேறு வழி உங்களுக்கு இல்லை. உங்கள் ஜீவன் இவ்வளவு கசப்பாய் இருக்கிறதென்று நீங்கள் கண்டும், அதைக் காப்பாற்றிக் கொள்ளக் கருத்தாய் இருப்பதனால் என்ன பலன்? என்று சொன்னான். ஆனால் அவர்கள் தங்களை அனுப்பிவிடும்படி அவனைக் கேட்டார்கள். உடனே அவன் தன் முகத்தைச் சுளித்துக்கொண்டு, மூர்க்கத்தோடு அவர்கள் மேல் பாய்ந்தான். பாயவே, வெயில் காலத்தில் அவனுக்கு வழக்கமாய் வருகிற **வலிப்பு** வந்துவிட்டது. இந்த வலிப்பு மாத்திரம் வராவிட்டால் அவர்களைத் தப்பாமல் கொன்று போட்டிருப்பான். (ராட்சதனுக்கு வலிப்பு வருகிறது என்பது, மகா நிர்ப்பந்த நிலைமையில் இருக்கும்பொழுது விசுவாசிகள் முற்றிலும் திகைத்துப்போய்விடாதபடி வேளா வேளை சில தேவ ஆறுதல்களை அடைகிறார்கள் என்பதைக் குறிக்கிறது) வலிப்பு வந்துவிட்டதால் அவன் நிதானம் தப்பி தொப்பென்று விழுந்து, கை கால் வராமல் கிடந்தான். சற்று நேரத்தில் வலிப்பின் கடுமை கொஞ்சம் குறையவும் அவன் மெதுவாக

எழுந்து அவர்களை என்ன செய்யலாம் என்று ஆலோசிக்கும்படி வெளியே போய்விட்டான். அவன் போன உடனே அவர்கள் இருவரும் நாம் அகோர பயங்கர ராட்சதனுடைய தீர்மானத்தின்படி செய்யலாமா, செய்யக்கூடாதா என்று ஆலோசிக்கத் தொடங்கினார்கள்.

கிறிஸ்தியான் - கிறிஸ்தியான் தன் தோழனைப் பார்த்து, தம்பி நாம் இனி என்ன செய்யலாம்? இந்த பிழைப்பைப்போல நிர்ப்பந்தமான பிழைப்பு இல்லையே, இப்படியே காலத்தை தள்ளிவிடலாமோ, அல்லது நாமே நமது உயிரை மாய்த்துக் கொள்ளலாமா என்பதைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியவில்லை. இப்படியே நாளைத்தள்ளாமல் நான்றுகொண்டு சாவதற்கே என் ஆத்துமா விரும்புகிறது. இந்தச் சிறைச்சாலையைவிட கல்லறைக்குழியையே என் மனம் தெரிந்து கொள்ளுகிறது. ஆதலால் ராட்சதனுடைய யோசனையின்படியே செய்வோமா, என்ன? என்று கேட்டான்.

திடநம்பிக்கை - அதற்குத் திடநம்பிக்கை சொல்லுகிறான் இப்பொழுது நாம் இருக்கிற நம்முடைய நிலைமை பயங்கரமானது என்பது நிஜம்தான். இப்படி எக்காலமும் அவதிப்படுவதைப் பார்க்கிலும் சாவே எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் நாம் நாடிப்போகும் நாட்டின் ஆண்டவர் " கொலை செய்யாதிருப்பாயாக " என்று பிறப்பித்திருக்கின்ற கட்டளையை சற்றே கவனித்துக் கொள்ளுவோமாக. நாம் மற்றவர்களைக் கொல்லக்கூடாதென்று கட்டளையிடப்பட்டு இருக்குமானால் அவன் பேச்சைக்கேட்டு நமது உயிரை நாமே மாய்த்துக்கொள்ளக் கூடாது என்றும் கட்டளையிடப்பட்டு இருக்கிறது என்றும் ஞானமாய் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். மேலும் மற்றவர்களைக் கொலை செய்தவன் அவனுடைய சரீரத்தைக் கொன்ற கொலையை மாத்திரம் கட்டிக் கொள்ளுகின்றான். ஆனால், தன்னைத்தானே கொன்று கொண்டால் அது சரீரத்தையும், ஆத்துமாவையும் ஒருமிக்க கொலை செய்கிறதாய் இருக்கிறது. அதுவும் அன்றி என் சகோதரரே, நீர் கல்லறையில் அல்லல் இல்லாமல் கிடப்பதை நினைத்தீரே, கொலைகாரர் எல்லாரும் போய் சேருகிற நரக பாதாளத்தை மறந்து போனீரோ? ஏனெனில் கொலைபாதகன் ஒருவனுக்கும் நித்திய ஜீவனில் பங்கில்லை. அது தவிர நாம் பின்னும் யோசிப்போம், சர்வ அதிகாரமும் அகோர பயங்கர ராட்சதனுடைய சக்கரத்துக்குள்ளாக இருக்கிறதில்லையே. நம்மைப்போல எத்தனையோ பேர் இந்த அரக்கன் கையில் அகப்பட்டு அடைபட்டாலும், மறுபடியும் அவன் கைக்குத்

தப்பிப் போய் இருக்கிறார்கள் என்று நான் அறிந்திருக்கின்றேன். அண்ட சராசரங்களையும் படைத்த ஆண்டவராகிய தேவன் இந்த அகோர பயங்கர ராட்சதனை கொன்றாலும் கொல்லலாமே, யாருக்கு தெரியும்? அல்லது எப்போதாவது ஒரு வேளை அவன் நம்மை அடைத்து வைத்திருக்கும் அறையின் கதவை பூட்டாமல் மறந்துபோய்விடச் செய்தாலும் செய்யலாமே. அல்லது நமக்கு முன்பாக முன்வந்த அந்த வலிப்பு திரும்பவும் வந்து அவன் கால், கைகளை முடக்கி போட்டாலும் கோடலாமே. அதை யார் அறிவார்? மறுபடியும் எப்போதாவது அப்படிப்பட்ட வலிப்பு அவனுக்கு வருவது மெய்யானால், நான் உடனே, ஆண் பிள்ளையைப் போல தைரியங்கொண்டு அவனுடைய கைக்குத் தப்பும்படி ஒரு கை பார்க்கலாம் என்றுதான் என்மட்டுக்கும் தீர்மானம் பண்ணிக்கொண்டிருக்கின்றேன். நான் ஒரு மூடன் என்றே சொல்ல வேண்டும். அன்றைக்கு வலிப்பெடுத்து விழுந்தானே, அப்போதே தப்பி ஓட பிரயத்தனப்பட்டேன் இல்லை. எப்படி இருந்தபோதிலும் என் உத்தம சகோதரனே, நாம் சில காலம் பொறுமையாயிருந்து, வரும் கஷ்டத்தை எல்லாம் சகித்துக்கொள்ளுவோமாக. நாம் சந்தோசத்தோடே வெளியேறிவிடும்படியான நல்லகாலம் பிறக்கும். நம்முடைய உயிரை நாமே மாய்த்துக்கொள்ளுகிற கொலைபாதகர் ஆகவேண்டாம் என்று சொன்னான். இந்த வார்த்தைகளால் திடநம்பிக்கை கிறிஸ்தியானுக்கு உண்டாகிய கொதித்த மனதைக் குளிரப்பண்ணினான். ஆதலால் இருபேரும் அன்றைய தினமும் முன்போல, தங்கள் துக்கமும் மன நோவுமான ஸ்திதியோடு அந்த இருட்டறையில் இருந்தார்கள்.

பொழுது சாய்கிற சாயங்கால வேளையில் ராட்சதன் மறுபடியும் அவ்விருவரும் இருந்த கிடங்குக்கு போய், தன் ஆலோசனையின்படி அவர்கள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டார்களா இல்லையா என்று பார்த்தான். பார்க்கவே, அவர்கள் பின்னும் உயிரோடு இருக்கிறார்கள் என்று கண்டுகொண்டான். என்ன உயிர்? அரைகுறையான உயிர்தான். அன்னம் தண்ணீர் இல்லாமை யினாலும், அடிபட்ட காயங்களாலும் அவர்களுக்கு மூச்சுவிடப் பலம் இருந்ததே ஒழிய, வேறு பலம் இருந்ததில்லை. எப்படியும் அவர்களுக்கு உயிர் இருந்தது. அதைக்கண்ட ராட்சதன் கோபாக்கினியால் பொங்கி, நீங்கள் என் ஆலோசனையின்படி செய்யாதபடியினால், உங்களுக்கு ஒருக்காலும் சம்பவியாத கேட்டைப் பார்க்கிலும் பெருங்கேடு சம்பவிக்கும் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

அதைக்கேட்டவுடனே அவ்விருவருக்கும் உண்டான நடுக்கத்திற்கு ஒரு அளவு கிடையாது. கிறிஸ்தியான் மயங்கி விழுந்து விட்டான் போல தோன்றுகின்றது! அப்புறம் அவன் சற்று தெளிவடைந்து மறுபடியும் ராட்சதனுடைய ஆலோசனையைக் குறித்து இருவரும் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். கிறிஸ்தியானுக்கு சங்கடப்படுவதைக் காட்டிலும் உயிரை மாய்த்துக்கொள்ளுகிறதே நன்மை என்று காணப்பட்டது. ஆனால் திடநம்பிக்கையோ அதற்கு இணங்காமல் இந்த இரண்டாம் உத்தரவை அவனுக்குச் சொல்லுகின்றான். எப்படியெனில்

திடநம்பி :- என் உத்தம சகோதரரே, இம்மட்டும் நீர் எவ்வளவு வீரசூரனாய் விளங்கினீர் என்பதை நினைத்தீர் இல்லையே? அப்பொல்லியோன் முதலாய் உம்மை அடக்கக்கூடாமல் போயிற்று. அவனை நீர் அதோகதி ஆக்கிவிட்டீர். மரண நிழலின் பள்ளத்தாக்கில் நீர் கேட்டகெடுதிகளும், பார்த்த பயங்கரங்களும் உம்மை அசைக்கக் கூடாமற்போயிற்று. இதுவரை நீர் சகித்த சங்கடங்கள் எவ்வளவு? பயங்கரங்கள் எவ்வளவு? அதிசயங்கள் எவ்வளவு? இப்பொழுது உமக்கு பயமா கெதி? சுபாவத்தின்படி உம்மிலும் பலவீனனாய் இருக்கிற நான் உம்மோடு கூட கிடங்கில் இருக்கிறதைப் பார்க்கிறீரே, அந்த ராட்சதன் உம்மைப்போல என்னையும் படுகாயப்படுத்தினானே. உம்மைப்போல நானும் அன்னம் தண்ணீர் இல்லாமல் தானே இருக்கிறேன். உம்மைப்போல நானும் இந்தக்கிடங்கின் காரிருளுக்குள் காலங் கழிக்கின்றேனே, ஆகையால் நாம் இன்னும் கொஞ்சகாலம் பொறுத்துக் கொள்ளுவோமாக. மாயாபுரி சந்தையில், நீர் எவ்வளவு புருஷலட்சணம் காண்பித்தீர் என்பதை நினைத்துக் கொள்ளும். அங்கு நீர் கைகால் விலங்குகளையாவது, சிறைக்கூண்டையாவது, பயங்கரமான மரணத்தையாவது ஒரு பொருட்டாக எண்ணவில்லையே. ஆதலால் எந்தக் கிறிஸ்தவனுக்கும் நேரிடக்கூடாத வெட்கம் நமக்கு வந்து நேரிடாதபடிக்கு நம்மால் ஆனமட்டும் பொறுத்துக்கொள்ளுவோமாக என்றான்.

அன்று இரவு ராட்சதன் தன் மனைவியோடு பள்ளி அறையில் இருக்கையில், அவள் மறுபடியும் இந்தக் கைதிகளைப்பற்றி ராட்சதனான தனது புருஷனிடத்தில் விசாரித்து, அவர்கள் தன் ஆலோசனையின்படி தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டார்களா, இல்லையா என்று கேட்டாள். அதற்கு அவன் சொல்லுகிறான் : அவர்கள் முரட்டுக்

குணமுள்ள திருட்டுப்பயல்கள். தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளுவதைப் பார்க்கிலும், வந்ததை எல்லாம் சகித்துக் கொள்ளும்படியாக துணிந்திருக்கிறார்கள் என்றான். அதற்கு அவள் : அப்படியானால் நீர் நாளையத்தினம் அவர்களை அரண்மனை கொல்லைப்புறத்துக்குக் கூட்டிக் கொண்டு போய் இம்மட்டும் உம்மாலே கொலை செய்யப்பட்டிருக்கிறவர்களின் எலும்புகளையும், மண்டை ஓடுகளையும் காண்பித்து இன்னும் ஒரு கிழமைக்குள்ளாக முன்னே அவர்கள் கூட்டாளிகளுக்கு செய்யப்பட்டது போல் இவர்களையும் சந்துசந்தாய் கிழித்துப்போடுவதாய் பயமுறுத்தி, அவர்கள் மனதில் நன்றாய்ப்படும்படி சொல்லும் என்றாள். (இது அவர்கள் யூதாஸ் காரியோத்தையும் மற்றவர்களையும் போல தங்கள் பாவங்களிலேயே சாகும்படி போதிக்கப்பட்டதை குறிக்கிறது).

அப்படியே மறுநாள் கிழக்கு வெளுத்தவுடனே ராட்சதன் எழுந்திருந்து கைதிகளண்டை போய், தன் மனைவி தனக்குச் சொன்னபடியே அவர்களைக் கூட்டிக்கொண்டு அரண்மனை கொல்லைப்புறம் போய், அவர்களுக்கு காட்டவேண்டிய எலும்புக்குவியல்களை எல்லாம் காட்டினான். காட்டுகிறபோதே அவன் சொல்லுகிறான் : உங்களைப்போலவே முன்னொரு காலத்தில் பிரயாணம் போன மோட்ச பிரயாணிகளில் பலர், உங்களைப்போலவே நியாயமின்றி என் பூமியில் நுழைந்தார்கள். அவர்களை எனது மனதுக்கேற்ற சமயத்தில் சந்துசந்தாகக் கிழித்துப் போட்டேன். அப்படியே உங்களை இன்னும் பத்து நாளைக்குள்ளாக செய்யவே செய்வேன், இப்பொழுது கிடங்கிலே போய் கிடவுங்கள் என்று சொல்லி அடித்தடித்து துரத்திக்கொண்டு கிடங்குக்குள் சேர்த்தான். ஆகையால் அவர்கள் சனி பகல் முழுவதும் முன்போல் புலம்பித் தவித்துக்கொண்டே இருந்தார்கள். அன்று இரவு ராட்சதனும், அவன் மனைவி கூச்சமும் தங்கள் பள்ளியறைக்குப் போனபோது திரும்பவும் இந்தக் கைதிகளைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். அந்தக் கிழவனான ராட்சதன் அதிசயத்தோடு சொல்லுகிறான் : ஆ, என் நேச கூச்சமே, நான் எவ்வளவாய் அடித்தாலும் எப்படி ஆலோசனை சொன்னாலும் அவர்கள் சட்டைபண்ணக் காணோம். இதுவே எனக்கு அதிசயமாயிருக்கிறது என்றான். அதற்கு அவள் சொல்லுகிறாள் : ஓ, அதிவீரபராக்கிரம ராட்சதரே! கேளும், அடியாளுக்கு அவர்களை குறித்து ஒரு அச்சம் தோன்றுகிறது. யாரோ ஒருவர் வந்து அவர்களை விடுதலையாக்குவார் என்கிற நம்பிக்கையோடு இருக்கிறார்களாக்கும், அல்லவென்றால்

அவர்கள் மடிக்குள்ளே பலமாதிரியான திறவுகோல்கள் இருக்கிறதாக்கும். அதைக்கொண்டு திறந்து, வெளியேறிவிடலாம் என்ற தைரியத்தோடு இருக்கிறார்களாக்கும் என்று சொன்னாள். உனக்கு அப்படியா தோன்றுகிறது? என் கூச்சமே பொறுத்தது பொறுத்தோம், இனி விடியுமட்டும் பொறுப்போம். விடிந்ததும் நான் போய் அவர்கள் மடிகளைப் பரிசோதனை செய்து போடுகிறேன் என்று சொல்லி முடித்தான்.

காரியம் இப்படியிருக்கவே, கைதிகள் இருவரும் சனிக்கிழமை நடு இரவில் ஜெபம் பண்ணத் தொடங்கி, கொஞ்சங்குறைய விடியுமட்டும் ஜெபம் பண்ணிக் கொண்டிருந்தார்கள். விடிகிறதற்கு சற்றுமுன் கிறிஸ்தியான் ஏதோ பேரதிசயம் கண்டவன்போல, படபடப்போடு பேசிச் சொல்லுகின்றான் : நான் தடையின்றி வெளியே போய் ஒரு துரையைப் போல உலாவுகிறதற்கு வழி இருக்கும்போது இந்த நாற்றம் பிடித்த இருட்டறையில் நாளெல்லாம் கிடக்கிற என்னைப் போல பைத்தியக்காரன் உண்டோ? என் மடிக்குள் **வாக்குத்தத்தம்** என்று பேர் வழங்கப்படுகிற திறவுகோல் இருக்கிறது. அதைக்கொண்டு சந்தேகத் துருக்கத்தின் எந்தப் பூட்டையும் திறந்து விடலாம் என்பதற்கு தடையில்லையே என்றான். அப்படியானால் அதைப்போல் சந்தோச செய்தி வேறொன்றும் இல்லை. இனி வேறு யோசனை என்னத்துக்கு, மடியில் இருக்கிற திறவுகோலை எடுத்து திறவும் என்று திடநம்பிக்கை சொன்னான். (வாக்குத்தத்தம் என்னும் திறவுகோல் : இது விசுவாசிக்கிற ஒவ்வொருவனுக்கும் நித்திய ஜீவன் உண்டென்று சொல்லப்பட்ட கிறிஸ்துவின் வாக்குத்தத்தங்களை குறிக்கின்றன. கிறிஸ்தியான் அவைகளை மறந்து போனான். " என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை " என்ற வாசகம் இரட்சிப்பைப்பற்றி திகைக்கும் ஒவ்வொருவனையும் உற்சாகப்படுத்த போதுமானது)

அப்படியே கிறிஸ்தியான் எடுத்து, சிறைச்சாலையின் கதவுகளை ஒவ்வொன்றாய்த் திறந்தான். திறவுகோலைத் திருப்பினவுடனே தாழ்ப்பாள்கள் எல்லாம் தானாய் திறக்கிறாற்போல லேசாக விலகிவிட்டது. உடனே கிறிஸ்தியானும், திடநம்பிக்கையும் கிடங்கைவிட்டு வெளியே வந்தார்கள். அப்புறம் அரண்மனை முற்றத்துக்கு போகும் வெளிவாசலின் கதவை கிறிஸ்தியான் திறந்தான். அதுவும் திறந்துவிட்டது. அதைக்கடந்து கடைசியாகத் திறக்கவேண்டிய இரும்புக்கதவண்டை போனார்கள். அதின் பூட்டு துருப்பிடித்து வெகு

சிக்குப்பட்டு இருந்தது. எனினும் திறவுகோல் அதையும் திறந்து விட்டது. கதவு படீர் என்று திறந்தபோது, கிரீச் என்று ஒரு இரைச்சல் உண்டாயிற்று. அந்த இரைச்சல் அயர்ந்து தூங்கின ராட்சதன் காதுக்குள் சங்கு ஊதி எழுப்பினால்போல ஆயிற்று. அவன் அந்த வினாடியே ஓடி, கைதிகளை பிடிக்கும்படி குதித்து எழும்பிப்போனான். ஆனால், அவன் கை, கால் செயலற்று போயிற்று. அவனுடைய பழைய வலிப்பு அவனுக்கு வந்துவிட்டது. ஆகையால் அவர்களை பின் தொடர்ந்து பிடிக்கக் கூடாமல் போயிற்று. அப்புறம் மோட்ச பிரயாணிகள் இருவரும் சற்று தூரம் வழிநடந்து **ராஜபாதையில்** மறுபடியும் வந்து சேர்ந்துகொண்டார்கள். (ராஜபாதை என்பது, எல்லாப் பாவங்களையும் விட்டுவிட்டு நீதியின் பாதையில் நடக்கிறதைக் குறிக்கிறது) அகோர பயங்கர ராட்சதனுடைய அரசாட்சிக்கு உட்பட்ட பூமியை அவர்கள் கடந்துவிட்டதால் அப்புறம் அவனால் அவர்களுக்கு யாதொரு ஆபத்தும் நேரிடக்கூடாதிருந்தது.

பிரயாணிகள் இருவரும் அகோர பயங்கர ராட்சதனுடைய அரண்மனை பூமிக்குத் திரும்பின படிக்கட்டை ஏறி, ராஜபாதையில் சேர்ந்தவுடனே, இனி பயணம்பண்ணி வரும் பிரயாணிகள் சந்தேகத்துருக்கத்தின் கைதிகளாகிவிடாதபடி, என்ன பிரயத்தனம் செய்யலாம் என்று இருவரும் ஆலோசித்தபோது அந்த இடத்தில் ஒரு ஸ்தம்பம் எழுப்பி, அதில் பிரயாணிகளுக்கு எச்சரிப்பு உண்டாக சில வரிகளை எழுதிவைப்பது உத்தமம் என்று தீர்மானித்தார்கள். அத்தீர்மானத்தின்படியே படிக்கட்டு அண்டை அவர்கள் ஒரு ஸ்தம்பம் நிறுத்தி அதன்மேல் : -

இந்தப் படிக்கட்டுப் பாதையை,
பயங்கர ராட்சதன் கட்டி இருக்கிறான்,
இப்படி நீ ஏறிப்போனால்
சந்தேக துருக்கம் சேருவாய்
மோட்சலோக ராஜாவுக்கு
அவன் பலத்த விரோதி
அவன் பரிசுத்த பிரயாணிகளை
அழிக்க வகை தேடுகிறான்.

என்று பெரிய எழுத்தில் வெட்டிவைத்தார்கள்

பின்னர் வந்த அநேக மோட்ச பிரயாணிகள் அந்த வாசகத்தைப் படித்துப் பார்த்து வழிவிலகாமல் நேர்பாதை நடந்து, மோசம் இன்றி மோட்சலோகப் பிரயாணத்தில் சென்றார்கள். அப்புறம் தாங்கள் அகோர பயங்கர ராட்சதன் கைக்குத் தப்பினதை நினைவுகூர்ந்து :-

வழிதப்பிப் போனோமே வந்த பலன் கண்டோமே,
விழிப்பாய் நடப்பீரே, மோட்ச பிரயாணிகளே,
ராஜவழி விட்டிடது பக்கவழியாய் நடந்தால்
சந்தேகத் துருக்கத்து சத்துராதி பிடிப்பான்,
அவன் பேர் பயங்கரமாம், அவன் அரண்பேர் சந்தேகம்,
விழிப்பாய் நடப்பீரே, சொல்லிவிட்டோம், சொல்லிவிட்டோம்.

என்று பாடினார்கள்.

மர்ரே மச்செயின் என்ற தேவ மனிதனின் நாட்குறிப்பில் காணப்படும் சில வரிகள்.

மோட்சத்தை ஒரு பரிசுத்த உலகமாக நான் அடிக்கடி தியானம் செய்ய வேண்டும். மோட்சத்தில் உள்ளோர் எல்லாரும் பரிசுத்தர்கள். மோட்சத்தின் அனைத்து சந்தோசங்களும் பரிசுத்த சந்தோசமே. அங்கு நடைபெறும் செயல்கள் யாவும் பரிசுத்தமாகும். எனவே எனது தனிப்பட்ட வாழ்வில் மிஞ்சிய பரிசுத்தமில்லாமல் நான் அந்த பரிசுத்த மோட்சத்திற்கு ஒருக்காலும் செல்ல இயலாது.

நான் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்தால் அதிகமதிகமாக வேதத்தை வாசித்து தியானிக்கவும், அதிகமாக தேவனோடு தனித்திருக்கவும், பாவம் என்னை அணுக விடாதபடி அதிலிருந்து என்னை காத்துக்கொள்ள எப்பொழுதும் விழிப்புள்ளவனாகவும் நான் இருத்தல் வேண்டும்.

பாவம் செய்யாத நிலையில் முடிந்த அளவு பாவத்தின் வெகு அருகாமையில் நான் செல்ல பிசாசானவன் அடிக்கடி என்னை சோதிக்கின்றான். தேவனை இவ்வண்ணமாக சோதித்து பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தும் காரியம் மிகவும் பயங்கரமானதாகும். மெய்யாகவே இது சத்துருவாகிய பிசாசு எனது ஆத்துமாவுக்கு எதிராக ஆழமாக பதிக்கின்ற கொடிய கண்ணிவெடியாகும்.

அவர்கள் மார்க்கங்கள் அப்படிச் செய்ய அவர்களுக்குக் கற்பிக்கின்றன.

16-3-2000 தேதியிட்ட "இந்து" ஆங்கில நாளிதழில் ஒரு அதிர்ச்சியூட்டும் செய்தி வெளிவந்தது. பாக்கிஸ்தான் நாட்டிலுள்ள லாகூர் பட்டணத்திலுள்ள நீதிமன்றத்தில் அல்லா பக்ஷ் ரஞ்சா என்ற நீதிபதி இக்பால் ஜாவேத் என்ற குற்றவாளிக்கு கீழ்க்கண்டவாறு தண்டனை வழங்கி தீர்ப்பளித்திருந்தார்:-

"இக்பால் ஜாவேத்தை பொதுமக்களுக்கு முன்பாக நிறுத்தி முதலில் அவனை கழுத்தை நெறித்துக்கொல்ல வேண்டும். அதின் பின்னர் அவனது உடலை 100 துண்டுகளாக வெட்டி அந்த துண்டுகளை எரி அமிலத்தில் போடவேண்டும்."

நீதிபதியின் தீர்ப்பு இத்தனை பயங்கரமாக இருப்பதற்கு நியாயமான காரணமும் உண்டு. இப்படி கொலை தீர்ப்பிடப்பட்ட இக்பால் ஜாவேத் 100 குழந்தைகளை கொன்ற பாதகன். முதலில் குழந்தைகளை பாலியல் பலாத்காரம் செய்வான். அதின் பின்னர் அவர்கள் கழுத்தை நெறித்துக் கொல்லுவான். அதற்கப்பால் அவர்களை துண்டுதுண்டாக வெட்டி எரி அமிலத்தில் போடுவான்.

இக்பால் ஜாவேத்தை கழுத்தை நெறித்துக் கொன்று அவன் உடலை 100 துண்டுகளாக வெட்டி எரி அமிலத்தில் போடுவதை தங்கள் குழந்தைகளை இழந்த 100 பெற்றோர்களும் நேரில் வந்து பார்க்க வேண்டும் என்றும் நீதிபதி தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார்.

பழைய ஏற்பாட்டில் நாம் பார்க்கின்ற நியாயப்பிரமாணத்தின் தீர்ப்பான " கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், கைக்கு கை, காலுக்கு கால், சூட்டுக்கு சூடு, காயத்துக்கு காயம், தழும்புக்கு தழும்பு, பழிக்குப் பழி " (லேவி 21 : 24, 25) என்ற தீர்ப்பை இஸ்லாமிய மக்களும் கடைப் பிடிக்கின்றனர்.

மனிதன் மனிதனுக்கு இவ்விதமான தண்டனைகளை அவனவனுடைய அக்கிரம, அநியாயத்திற்குத் தக்கதாக வழங்குகின்றான். ஆனால், அன்புள்ள தேவன், மனிதன் எத்தனை பெரிய பாவ அக்கிரமங்களை செய்தவனாயினும் அவனை முழுமையாக மன்னித்து தம்மண்டை சேர்த்துக்கொள்ளுகின்றார்.

தாவீது இராஜா, சவுல் அரசனின் மகள் மீகாளை தனக்கு மனைவியாக கொள்ளுவதற்கு 200 அப்பாவி பெலிஸ்த மக்களை படுகொலை செய்ததை வேதாகமத்தில் நாம் காண்கின்றோம் (1 சாமு 18 : 27). சவுல் கேட்டது 100 பெலிஸ்தரின் நுனித்தோல்கள்தான், ஆனால், தாவீது ராஜா தனது பராக்கிரமத்தின் பெருமையை காண்பிக்க 200 பெலிஸ்தரை கொன்று தீர்த்தார். அந்த தாவீது அரசனின் கொடிய பாவ அக்கிரமத்தை தேவன் அவருக்கு மன்னித்தபடியால் அவர் " கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு " (சங் 130 : 7) என்று பாடினதுடன் தனது பாவ இரத்தக்கறை படிந்த தனது சொந்த இருதயத்தைப் பார்த்து " என் ஆத்துமாவே, கர்த்தர் உன் அக்கிரமங்களை எல்லாம் மன்னித்தார்" (சங் 103 : 3) என்று கூறி சங்கீதம் பாடினார்.

தாவீது இராஜா ஒரு உலகத்து நீதிபதியால் நியாயந்தீர்க்கப் படுவாரானால், அந்த நீதிபதி அவரை உயிரோடு வைத்து 200 துண்டுகளாக வெட்டிக்கொல்ல அவருக்கு கட்டாயம் தீர்ப்பளித் திருப்பார். ஆனால், பரம தந்தை அன்பின் சொரூபியாவார். தேவன் அன்பாகவே இருக்கின்றார் (1 யோ 4 : 8) என்று பரிசுத்த யோவான் அப்போஸ்தலன் எழுதினார். தேவனின் முழு உருவமே அன்புதான். அந்த அன்பு திரளான பாவங்களை மூடும் (1 பேதுரு 4 : 8) என்று பேதுரு தமது நிரூபத்தில் குறிப்பிடுகின்றார். ஆங்கில வேதாகமத்தில் " திரளான "என்ற வார்த்தைக்கு "மல்ட்டிடியூட்" என்ற பதம் அதாவது "பெரும் எண்ணிக்கை " என்பது உபயோகிக்கப்பட்டுள்ளது. அந்த பெரும் எண்ணிக்கைக்கு முன்பாக 100 மற்றும் 200 எல்லாம் நெருங்கி நிற்க முடியாது. " நம்முடைய பாவங்களை நாம் தேவனுக்கு அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் " (1 யோ 1 : 9) என்ற தேவ வசனத்தில் "எல்லா அநியாயம்" என்ற வார்த்தையில் நமது அனைத்துப் பாவங்களும் அடங்கிவிடுகின்றது.


இந்த முழு உலகத்திலும் ஒரு மாபெரும் கொடும் தீச்செயலை புரிந்த மனிதன் ஜெர்மனி தேசத்தின் ஹிட்லர் என்ற கொலை பாதகன்தான். சிறியோர், பெரியோர், வாலிபர், குழந்தைகள், விருத்தாப்பியர் என்ற அனைத்துப் பிரிவினரும் அடங்கிய 60 லட்சம் பாவமறியா அப்பாவி யூத மக்களை அந்த பஞ்சமா பாதகன் விஷ வாயு உலைகளில் தள்ளி எரித்து சாம்பல் தூள் ஆக்கினான். அந்தக்

கொடியவன் கூட தனது பாதகச் செயலுக்காக தனது வாழ்வின் இறுதி மணி நேரத்தில் மனங்கசந்து அழுது புலம்பி, மார்பில் அடித்து தேவனிடம் மன்னிப்புக்காக கதறியிருந்தால் திரளான பாவங்களை மூடும் அன்பின் கருணாகரன் இயேசு கிறிஸ்து அவனது பாவங்களையும் மன்னித்து அவனுக்கும் மோட்ச பாக்கியம் அளித்திருப்பார். அதுவேதான் இயேசு இரட்சகரின் கல்வாரி அன்பின் கிறிஸ்தவ மார்க்கம்.

தேவி குண்டு சாகர் - அரசிகளும், அந்தப்புர பெண்களும் உயிரோடு வைத்து எரிக்கப்பட்ட இடம்.


கணவன் இறந்ததும் அவனது சவத்துடன் அவனுடைய மனைவியையும் வலுக்கட்டாயமாக உயிரோடு வைத்து எரிக்கும் கொடிய பழக்கத்துக்கு நமது இந்திய தேசத்தில் பலியான அப்பாவி பெண்களின் எண்ணிக்கையின் கணக்கு ஆண்டவர் ஒருவரிடம்தான் உண்டு. அந்த மூடப்பழக்கம் இன்றுவரை நமது தேசத்தில் மிகவும் இரகசியமாக அங்கொன்றும் இங்கொன்றுமாக நடந்துகொண்டு தான் இருக்கின்றது என்பதை செய்தித்தாட்கள் நமக்குத் தெரிவித்து வருகின்றன.

ராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பிக்கானிர் பட்டணத்திலிருந்து சுமார் 9 கி.மீ தொலைவில் " தேவி குண்டு சாகர் " என்ற ஒரு சிறிய கிராமம் உள்ளது. கிராமத்தை நெருங்க நெருங்க நமது வலது கைப்பக்கத்தில் சற்று தூரத்தில் வெள்ளை சலவைக்கற்களால் உருவாக்கப்பட்ட ஏராளமான மாடங்கள் தெரிகின்றன. அதற்கு சற்று அப்பால் செங்கற்களால் கட்டப்பட்ட மாடங்கள் தனியாக நமது கண்களுக்கு புலனாகின்றது.



இந்த மாடங்களைக் குறித்து கேள்விப்பட்ட எந்த ஒரு சிந்தனையாளனும் தனது உள்ளத்துக்குள் ஏக்கத்தின் பெருமூச்சு எழுப்பாமல் இருக்க இயலாது. இந்த மாடங்கள் வாய் திறந்து பேசும் திறன் கொண்டவையாக இருப்பின் அவைகள் சொல்லும் கண்ணீரின் கதைகளைக் கேட்கும் எந்த ஒரு மனிதனும் நடுநடுங்கிப் போவான். இந்த மாடங்களுக்கு உள்ளேதான் அரசர்களின் ராணிகளும், அவர்களின் மறுமனையாட்டிகள், வைப்பாட்டிகள், அந்தப்புரத்து பெண்கள் பலரும் அரசர்களின் சவங்களோடு வைத்து உயிருடன் எரிக்கப்பட்டுள்ளனர்.

1997ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டு காலமாக சகோதரன் நார்ட்டன் அவர்களும் நானும் மேற்கண்ட அரச சுடுகாட்டுக்கு ஒழுங்காக போய் வந்திருக்கின்றோம். இருள் சூழ்ந்து, எந்த ஒரு தைரிய



நெஞ்சினனையும் பயத்தால் பின்வாங்கச் செய்யும் விதத்தில் அந்த இடம் உள்ளது. சுடுகாட்டைச் சுற்றிலும் கோட்டைச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. கர்த்தருக்குள் என்னைத் திடப்படுத்திக்கொண்டு 3 தடவைகளும் நான் உள்ளே சென்று அரசர்களுடைய சுடுகாடுகளை பார்த்து வந்தேன். 1997 ஆம் ஆண்டு முதல் தடவையாக நான் சென்றபோது நடு மத்தியான நேரம். உள்ளே ஒரு பெரிய பழங்காலத்து பூவரசு மரம் நிற்கின்றது. அதின் வயதின்படி பார்த்தால் அங்கு எரிக்கப்பட்ட எல்லா அரசர்கள், அரசிகள், கணக்கற்ற அந்தப்புர பெண்மக்களை அது கட்டாயம் பார்த்திருக்கும். பலவந்தமாக எரிக்கப்பட்ட அந்தப் பேதைப் பெண்டிரின் அலறல்கள், கதறுதல்கள், புலம்பல்கள், வியாகுலங்கள் எல்லாவற்றையும் அது செவிமடுத்துக் கேட்டும் இருக்கும். ஒவ்வொரு சுடுகாட்டுக்கும் மேலாக தாஜ்மகாலைப்போன்று ஒரு பளிங்கு கல் மாடம் கட்டியுள்ளனர்.

அரசருடன் அரசியும், பெண்களும் எரிக்கப்பட்டதை குறிக்கும் விதத்தில் பெண்ணின் ஒரு ஜோடி காலடிகளை கருங்கல்லில் செதுக்கியுள்ளனர். கோட்டைக்கு உள்ளிருந்து அதில் அமைக்கப்பட்டுள்ள சிறிய ஜன்னல்கள் வழியாக நாம் வெளியே பார்த்தால் கீழே பள்ளத்தில் ஒரு நீர்த்தடாகம் இருப்பதை நாம் காணலாம். சுடுகாட்டில் எரிக்கப்பட்ட பெண்களின் அழுகைக்குரல்களை இந்த நீர்த்தடாகமும் கட்டாயம் கேட்டிருக்கும்.


தேவிகுண்டு சாகர் கிராமத்திலுள்ள அரசர்களின் சுடுகாடுகளை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். ஒவ்வொரு தடவையும் அந்தச் சுடுகாடுகளை நான் பார்த்தபோது நமது இந்திய தேசத்தின் அறியாமை, மூடத்தனமான நம்பிக்கை காரணமாக எத்தனை அப்பாவி பெண்கள் பலிக்காடானார்கள் என்பதை எண்ணி பெருமூச்செறிந்தேன். வலுக்கட்டாயமாக செத்த சவத்தோடு பெண்களை உயிரோடு எரிப்பதற்கு வசதியாக பெண்களுக்கு அதிக மயக்கம் கொடுக்கக்கூடிய அபினியை கட்டாயப்படுத்திக் கொடுத்துவிடுவதோடு காதைப் பிளக்கும் கொட்டு, மேளம், பறைகள் போன்றவைகளை அடித்து முழக்கி பெரும் சத்தம் உண்டாக்கி பெண்களின் அலறல் சத்தங்களை அடங்கப் பண்ணி இருக்கின்றனர். எத்தனை கொடுமை பாருங்கள்!

இந்த அரச சுடுகாடுகளை ஒட்டி சற்று தூரத்தில் ஒரு பெரிய கூட்டுக் குடும்பம் வாழ்கின்றனர். புரோகித குடும்பமான அவர்கள் அரச சுடுகாட்டிலுள்ள சதிமாதா கோயிலுக்கு பூஜாரிகளாக இருக்கின்றனர். அங்கு செல்லும் ஒவ்வொரு தடவையும் இந்தக் குடும்பத்தையும் நாங்கள் சந்தித்து தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை ஒழுங்காக ஜெபத்தோடு



கொடுத்து வந்திருக்கின்றோம். அதில் சந்திரகாந்த் புரோகித் என்ற வாலிபனை தபால் மூலம் வேதப்பாடத்திட்டத்திலும் சேர்த்தோம். அரச சுடுகாட்டில் உள்ள சதிமாதா கோயிலுக்கு தற்பொழுது அவன்தான் பூஜாரி. தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களைப் பெற்று தனது கரங்களில் வைத்திருக்கும் நிலையில் எடுத்த புகைப்படத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். சந்திரகாந்த் புரோகித் இடதுகைப்பக்கமாக இரண்டாவது காணப்படுகின்றான்.

பிக்கானிர் பட்டணத்திலுள்ள அரசர்களின் கோட்டை நுழைவாயிலில் சதிமாதாவை ஆராதிக்கும் வகையில் சதி ஏறிய பெண்களை நினைப்பூட்டும் விதத்தில் அவர்கள் கரங்களை கல்லில் செதுக்கி மாலை அணிவித்திருப்பதை நாங்கள் கவனித்தோம். அதையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். பூஜாரி சந்திரகாந்த் உடைய தாத்தாவிடம் சுடுகாட்டில் பெண்கள் எரிக்கப்பட்டதை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா என்று நாங்கள் கேட்டோம். அதற்கு அவர் " நான் பார்க்கவில்லை. எனது தகப்பனார் நேரில் பார்த்திருக்கின்றார். அந்த சதிகளில் பெண்களுடைய பரிதபிப்பின் குரல்களையும் அவர் கேட்டிருக்கின்றார்" என்று சொன்னார். எனினும், அவருடைய குடும்பத்தினர் சதியை வாழ்த்திப் போற்றவே செய்கின்றனர். அப்படி சதி நடந்து கொண்டிருக்கும் போது ஒரு தடவை ஒரு மயில் கூட்டமே சதி தீயில் பாய்ந்து மாண்டு சதி மாதாவை பூஜித்தன என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட சதி மோகமே இன்றும் நமது நாட்டில் பெண்களை உயிரோடு வைத்து எரித்துக்கொல்ல காரணமாக இருக்கின்றன. நமது இந்திய பெண் மக்கள் என்ன பாவம் செய்தனரோ? அல்லது ஏவாள் அன்று செய்த பாவம்தான் இன்னும் தொடர்கின்றதோ தெரியவில்லை!



இந்தக் கொடிய சதி பழக்கத்தைக் குறித்து பண்டிதை ராமாபாய் அம்மையார் தனது **The High Caste Hindu woman** என்ற புத்தகத்தில் எழுதியிருக்கின்றார்கள். ரிக் வேதத்திலுள்ள கிரிகா சூத்திர கீர்த்தனைகளில் கணவன் இறந்ததும் அவனது சிதையில் அவனது விதவை மனைவியை உயிரோடு வைத்து எரித்துக்கொல்லும் மூடப்பழக்க

வழக்கங்களை அங்கீகரித்து எதுவுமே எழுதப்படவில்லை. அதற்கு மாறாக ரிக் வேதம் கீழ்க்கண்ட ஒப்பற்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது :-

கணவனுடைய சடலத்தை எரிக்கும் சுடுகாட்டுக்கு வந்திருந்த அவரின் விதவை மனைவியை ஊரிலுள்ள அவரின் இனஜனங்கள் பார்த்து " பெண்ணே, எழுந்திருந்து உயிரோடிருக்கும் எங்களுடன் வந்து சேர்ந்து கொள். நீ நெருங்கிப்படுத்திருந்த உனது கணவனின் ஜீவன் போய்விட்டது. இப்பொழுது நீ எங்களண்டை வந்துவிடு. ஒரு மனைவி தனது கணவனுக்கு செய்யவேண்டிய அனைத்து கடமைகளையும் நீ செய்து முடித்து விட்டாய். அந்த கணவன் உன்னை தனது மனையாட்டியாக உனது கரம் பற்றிப்பிடித்தான். பின் வந்த நாட்களில் உன்னை ஒரு தாயாகவும் மாற்றினான் " என்றுதான் எழுதப்பட்டுள்ளது.

ரிக் வேதத்திலுள்ள மேற்கண்ட வரிகளையே பிற்காலத்தில் வந்த ஈவிரக்கமற்ற புரோகிதர்கள் தங்களுடைய சொந்த ஆதாயம் கருதி முழுமையையும் மாற்றி சதி என்ற உடன்கட்டை ஏறும் பழக்கத்தை சமுதாயத்தில் புகுத்திவிட்டனர் என்று எழுதியிருக்கின்றார்கள்.

பண்டிதை ராமாபாய் அம்மையார் **The High Caste Hindu Woman** என்ற தமது அதே புத்தகத்தில் இந்து சமுதாயத்தில் விதவைப்பெண்கள் எப்படி வாழவேண்டும் என்பதை "மனு நீதி" சாஸ்திரத்திலிருந்து மேற்கோள் காட்டி எழுதியிருக்கின்றார்கள்.

ஒரு பெண் விதவையானதும் அவளது தலைமுடி மொட்டையாக சிரைக்கப்பட்டு வீட்டின் இருண்ட மூலையில் ஒரு கொடிய அவமானமான ஒரு செயலை செய்துவிட்ட குற்றவாளியைப் போல அவள் தள்ளப்படவேண்டும். மரித்துப் போன கணவனின் இனஜனங்களும் அக்கம் பக்கத்தினரும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவளை அவச்சொற்களாலும், தூஷணங்களாலும் மனங்கொண்டமட்டும் திட்டித் தீர்க்கலாம்.

அந்த விதவை, வெள்ளை, சிகப்பு அல்லது செம்பட்டை நிற ஒரு வஸ்திரத்தை மட்டும்தான் உடுத்த வேண்டும். அவள் எந்த ஒரு ஆபரணங்களும் தனது சரீரத்தில் அணியக்கூடாது.

குடும்பத்திலும் மற்றும் இதர எந்த ஒரு சுபகாரியங்களிலும் அவள் தன்னைக் காண்பிக்கக் கூடாது. அந்த நிகழ்ச்சிகளில் அவள் கலந்து கொள்ளவும் கூடாது.

ஒரு விதவையை ஒரு மனிதன் தனது பிரயாணத்தின் ஆரம்பத்தில் பார்த்தால் அது சாபத்தீடான அப சகுனமாகும். அவன் தன் பிரயாணத்தை அதின் காரணமாக நிறுத்தி அடுத்த நாள்தான் ஆரம்பிக்க வேண்டும். ஒரு விதவைப் பெண் கெட்ட சகுனம் ஆவாள். வேசி, துன்மார்க்கமான பெண்ணை அழைக்கும் "ராண்ட்" என்ற வார்த்தைக்கு ஒரு விதவையும் பொருத்தமாவாள்.

ஒரு நாளைக்கு ஒரு தடவை மாத்திரம்தான் அவள் ஆகாரம் சாப்பிடவேண்டும். நல்ல சுபதினங்களில் அவள் ஒன்றுமே சாப்பிட கூடாது. காரணம், அவள் அதிகமாக புசித்தால் சிற்றின்ப குரோத செயல்களுக்கு முயற்சிப்பாள்.

ஒரு விதவைப்பெண் யாருடனும் பழகக்கூடாது. பெண்க ளுடனும் கூட கலந்து உறவாடக்கூடாது. பெற்ற தகப்பன், உடன்பிறந்த சகோதரன், மற்றும் சகோதரர்களுடைய அந்தஸ்தில் உள்ளவர்களிடம் மட்டும் அவள் கலந்து பழகிக் கொள்ளலாம்.

ஒரு விதவையானவள் வீட்டிலே பாத்திரம் கழுவுதல், வீட்டை சுத்தம் செய்தல், கழிப்பறையை சுத்தம் செய்தல் போன்ற இழிவான, அடிமைத்தனமான வேலைகளைத்தான் செய்தல் வேண்டும்.

விதவைகள் தங்களுடைய கணவனுடைய தகப்பன், தாய், கணவனுடைய சகோதரர், சகோதரிகளால் நடத்தப்பட்ட கொடுமைகள் காரணமாக அவர்களுக்கு முன்னாலிருந்த ஒரே ஒரு ஆறுதல் தற்கொலைதான். ஆ, விதவைகள் பட்ட வியாகுலப் புலம்பல்களை யாரே அறிவர்! அந்த நாட்களிலிருந்த கிறிஸ்தவ மிஷனரிகளில் ஒருவர் இப்படிப்பட்ட விதவைகளின் புலம்பல்களை கேட்டு எழுதி வைத்திருக்கின்றார். படித்துப் பாருங்கள்:-

" ஜெபத்தைக் கேட்கிறவரே, நாங்கள் உமக்கு விரோதமாக பாவம் செய்திருந்தால் எங்களுக்கு மன்னித்தருளும். நாங்கள் என்ன பாவம் செய்தோம் என்று பேதையர்களாகிய எங்களுக்குத் தெரியவில்லை. ஓ, மாபெரும் தேவனே, எங்கள் பெயர் குடிகாரர்களோடும், பைத்தியகாரர்களோடும் சபல புத்தியுள்ளவர்களோடும், மிருகங்க ளோடும் எழுதப்பட்டுள்ளன. கொலைக்குற்றவாளிகள் ஆயுட்காலம் முழுமைக்கும் சிறைக்கூடங்களில் அடைபட்டுக் கிடந்தாலும் அவர்கள் எங்களைவிட எவ்வளவோ சந்தோசமாக இருக்கின்றார்களே! காரணம்,

அவர்களுக்கு உமது உலகத்தை குறித்து கொஞ்சமாவது தெரியும். அவர்கள் சிறைச்சாலையில் பிறக்கவில்லை. ஆனால், நாங்கள் எங்கள் வாழ்வில் ஒரு நாள்கூட, ஏன் எங்கள் சொப்பனங்களிலும் கூட உமது உலகத்தைப் பார்க்கவில்லை. அதைப்படைத்த உம்மையும் எங்களுக்குத் தெரியாது. உமது படைப்புகளைப் பார்த்தவர்கள் உம்மை அறிந்து கொள்ள வாய்ப்புள்ளது. ஆனால் அடையுண்டு கிடக்கும் எங்களுக்கோ உம்மை அறிந்து கொள்ள முடியாது. நாங்கள் குடியிருக்கும் வீட்டின் நான்கு சுவர்களை நாங்கள் உலகம் என்றோ அல்லது இந்தியா என்றோ சொல்லக்கூடுமோ? நாங்கள் இந்த நான்கு சுவர்களுக்குள்தான் பிறந்தோம். இது எங்கள் சிறைக்கூடம். இங்கு நாங்கள் ஒவ்வொரு நாளும் செத்துக்கொண்டு இருக்கின்றோம்.

உலகத்தின் எஜமானரே, நீர் எங்களை படைக்கவில்லையா? அல்லது எதிர்பாராதவிதமாக வேறு ஒரு கடவுள் உம்மை அறியாமல் எங்களைப் படைத்துவிட்டாரா? ஆண்களை மாத்திரம்தான் குறித்து நீர் கவலை கொள்ளுவீரோ? பெண் குலத்தவராகிய எங்களைக் குறித்து உமக்கு அக்கறைக் கிடையாதா? ஓ, சர்வவல்லவரே, இந்த உலகத்தின் மகிழ்ச்சிகளில் நாங்களும் சற்று பங்கு கொண்டு சந்தோசப்பட எங்களுக்கு உதவி செய்ய உம்மிடம் வல்லமை இல்லாமற் போயிற்றோ? நெருக்கப்படுவோரின் குரல் இந்த உலகத்தில் கேட்கப்படும்போது எங்களுடைய கூக்குரல்களை கேட்காமல் உமது நீதியின் கதவுகளை அடைத்துக்கொள்ளுவதின் காரணம் என்னவோ? ஓ, சர்வ வல்ல கடவுளே, ஒருவராலும் நெருங்க இயலாத இடத்தில் இருப்பவரே, உம்முடைய கரைகாணா சமுத்திரம் போன்று பரந்து விரிந்து கிடக்கும் உமது இரக்கம், கருணையை எண்ணி எங்களை நினைத்தருளும். எங்களுடைய பாரச்சுமையை எங்களால் தாங்க முடியவில்லை. எங்களில் பலரும் இந்த பாரச்சுமையை தாங்க இயலாமல் எங்களை கொன்று தீர்த்துவிட்டோம். இன்னும் பலராகிய நாங்கள் எங்களை கொன்று கொண்டே இருக்கின்றோம்.

ஓ, இரக்கமுள்ள கடவுளே, இந்திய பெண் குலத்தவராகிய எங்கள் மேல் சுமத்தப்பட்டுள்ள இந்த கொடிய சாபத்திலிருந்து எங்களை விடுவித்தருளும் என்பதே எங்கள் பிரார்த்தனை ".

கணவன் இறந்ததும் அவனுடைய செத்த சடலத்துடன் உயிரோடிருக்கும் மனைவியை வைத்து எரித்துக்கொல்லவும், அப்பாவி,

பாவமறியா விதவைப் பெண்களை வீடுகளின் நான்கு சுவர்களுக்குள்ளாக அடைத்து வைத்து எத்தனையோ அநியாயங்களையும், நிஷ்டூரங்களையும், இரக்கமற்ற செயல்களையும் அவர்களுக்கு எதிராக செய்யவும் அவர்கள் மார்க்கங்கள் போதிப்பதாக இருந்தாலும் நம் அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்து அந்தப் பெண் குலத்தை அளவிடற்கரிய விதத்தில் நேசித்தார்.

ஆண்டவராகிய இயேசு தாம் சிசுவாக இருந்தபோது அன்னாள் என்ற 84 வயது விதவையின் புகழ் வார்த்தைகளை ஏற்று அங்கீகரித்தார். அந்த விதவையை கெட்ட சகுனமாக் எண்ணி புறக்கணிக்கவில்லை. நாயீன் ஊர் ஏழை விதவையின் மேல் மனதுருகி அவளது மரித்த வாலிப மகனை உயிரோடு எழுப்பி அவளை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கடித்தார். சரெப்தா ஊர் விதவையை குறித்து பெருமிதமாக தமது பேச்சில் குறிப்பிட்டார். தேவாலயத்தின் காணிக்கை பெட்டியில் 2 காசு போட்ட ஏழை விதவையின் காணிக்கையை ஆண்டவர் புகழ்ந்து பேசி மகிழ்ந்தார். விதவைகளின் வீடுகளைப்பட்சித்துக் கொண்டிருந்த வேதபாரகரை அவர் கடுமையாக சாடினார். அவர்களுக்கு அதிக ஆக்கினையை கொடுத்தார்.

ரூத் என்ற மோவாபிய விதவையின் வம்சாவழியில் ஆண்டவராகிய இயேசு பிறந்து விதவைக்கு புகழ் சேர்த்து அவர்களின் சிரசில் பொன் முடி சூட்டினார்.

மனுமக்களின் பாவம் போக்க மானிடனாக அவதரித்த அந்த அன்பின் தேவகுமாரன் தான் சிசுவாக இருந்தபோது ஒரு கன்னிப் பெண்ணின் மார்பகத்தில் பால் குடித்தார். அந்தக் கன்னியின் கர்ப்பத்தை அவர் அருவருக்கவில்லை. அவருடைய ஊழியத்தில் பெண் மக்களுக்கு அதிக இடம் கொடுத்தார். அவருடன் அநேக ஸ்திரீகள் ஊழியத்திலே இருந்ததாக தேவனுடைய வார்த்தை கூறுகின்றது. (லூக் 8 : 3) பெண் குலத்தின் சுகத்தையும், சந்தோச சமாதானத்தையும் நேச இரட்சகர் மனதார விரும்பினார் என்பதை "உன் வேதனை நீங்கி சுகமாயிரு" (மாற் 5 : 34) என்று தம்மைத் தொட்ட பெரும்பாடுள்ள ஸ்திரீக்கு சொன்னதிலிருந்து நாம் தெளிவாக கண்டு கொள்ளுகின்றோம்.

பாடுபட்டு மரித்த நம் அன்பின் நேசர் தாம் மரித்தாலும் பிழைத்திருப்பதை முதன் முதலில் ஒரு பெண்ணுக்குத்தான் வெளிப்படுத்தினார். அவளை துன்பப்படுத்தி, தினமும் அவளை

சித்திரவதை செய்து கொண்டிருந்த 7 பிசாசுகளையும் கூட அவர் அவளிடமிருந்து ஏற்கெனவே துரத்தியிருந்தார்.

பெண் குலத்தின் பேரில் இரட்சகர் எத்தனை கரிசனையாக இருந்தார் என்பதற்கு அவர் சிலுவையில் தொங்கும் அந்த கடைசி நேரத்தில் தமது அருமை தாயாருக்கு தனது அன்பான சீடன் ஒருவனின் மூலமாக கொடுத்த ஆதரவின் மூலமாக நாம் காண்கின்றோம்.

இந்த பாழ் உலகத்தில் ஆண், பெண் என்ற பாகுபாடுகள் இருப்பினும் நாம் நாடிச்செல்லும் பரலோகத்தில் அவை ஒன்றும் கிடையாது. அங்கே கொள்வனை, கொடுப்பனை எதுவும் இல்லை. அந்த பேரின்ப வீட்டில் நாம் எல்லாரும் தேவ தூதர்களாக மாற்றம் பெற்று நமது ஆத்தும மணவாளனாம் இயேசுவை என்றுமுள்ள சதாகாலங்களிலும் புகழ்ந்து போற்றி பாடித் துதித்துக் கொண்டிருப்போம். அல்லேலுயா.

இன்ப துன்ப நேரத்திலும் உன் அன்புள்ள இயேசுவை பார்!

பேசீல் என்ற தேவ பக்தன் தீக்கிரையாக்கப்பட்ட சில இரத்தசாட்சிகளை குறித்து இப்படி சொல்வார். அக்கினியில் வைத்து கொளுத்தப்படுவதற்கு முந்தின நாள் அவர்கள் எல்லாரும் பிறந்த மேனியுடன் இரத்தத்தை உறைய வைக்கும் குளிரில் நிறுத்தப்பட்டனர். அப்பொழுது அந்த இரத்த சாட்சிகள் தங்களை இவ்விதமாக தேற்றிக் கொண்டனர். "குளிர் கொடியது. ஆனால், பரலோகம் இனிமையானது. இங்கு குளிரில் விறைத்து நடு நடுங்குகின்றோம். ஆனால் பரதீசில் ஆபிரகாமின் மடியின் இதமான வெம்மை இந்த குளிரை விறட்டி அடித்து ஓட்டிவிடும்."


கேலான் என்ற பரிசுத்த மனிதன் உரன்ஆஸ்கோபஸ் என்ற மீனைப் பற்றி குறிப்பிடும்போது அதற்கு ஒரே ஒரு கண்தான் உண்டு. அந்த கண்ணும் கூட சதா வானத்தையேதான் நோக்கியிருக்கும் என்பார். துன்ப துயரம் அனுபவிக்கும் கிறிஸ்தவனின் கண்கள் எப்பொழுதும் பரலோகத்தையே நோக்கிக் கொண்டிருந்தால் அவனது ஆத்துமா ஒருபோதும் சோர்பே அடையாது.

(தாமஸ் புரூக்ஸ்)

அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட இலையுதிராத கனி தரும் மரம்.

இமயமலைகளிலுள்ள அல்மோரா பட்டணத்திலிருந்து 34 கி.மீ. தூரத்தில் 8000 அடி உயரத்தில் பின்சர் என்ற ஒரு இடம் உள்ளது. அடர்த்தியான காடுகள், ஓக் மற்றும் பைன் மரச்சோலைகள், இமயத்தின் விதவிதமான மலர் தாவரங்கள் பலவும் இங்குள்ளன. இங்கிருந்து பார்த்தால் இமயத்தின் பனிமூடிய பல சிகரங்களையும் நாம் காணலாம். இந்த இடத்திற்கும் நாங்கள் சென்று வரவும், ஒரு சிறிய தேவ ஊழியத்தை செய்யவும் கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும், அல்மோராவிலுள்ள லீலாதர் அவர்களும், அவருடைய மூத்த மகள் கஞ்சனும் பின்சர் என்ற இடத்துக்குப் போய் வந்தோம். இந்த லீலாதரைக் குறித்து கடந்த தேவ எக்காளத்தில் 36 ஆம் பக்கத்தில் நான் எழுதியிருக்கின்றேன்.

பின்சரில் ஒரு அழகான சுற்றுலா பயணியர் மாளிகை உள்ளது. வனவிலங்குகள் நிறைந்த கானகத்தின் நடுவில் அது கட்டப்பட்டுள்ளது. சாதாரணமாக மக்கள் இங்கு தங்க இயலாது. ஒரு சிறிய கோப்பை



தேயிலை பானத்திற்கே அரசாங்க வரி எல்லாம் போட்டு சுமார் 10 ரூபாய்க்கு பில் கொடுக்கின்றார்கள்.

தேவன் எங்களை இங்கு அழைத்து வந்ததிலும் அவருக்கு ஒரு மேலான நோக்கம் இருந்தது. இங்குள்ள காட்டுப்பாதைகள் வழியாக

நாங்கள் நால்வரும் எங்கள் மனம் விரும்பிய தூரம் வரை நன்கு நடந்து திரிந்தோம். என்னைப் போல இயற்கைப் பிரியனான லீலாதர் அவர்கள் காட்டிலுள்ள விந்தை விந்தையான பரணிகள், மரப்பாசிகள் போன்றவற்றை வேண்டியமட்டும் சேர்த்து எடுத்துக் கொண்டார்.

ஒரு மேடான இடத்துக்கு நாங்கள் வந்தபோது ஒரு பெரிய தண்ணீர் தொட்டியை கண்டோம். சுற்றிலும் சிமெண்ட் சுவர் எழுப்பி தரை மட்டத்திலேயே அந்த தடாகம் இருப்பதை நாங்கள் கவனித்தோம். எந்த ஒரு மாசுமறுவில்லாமல் தெளிந்த சுத்த தண்ணீராக அது அங்கே கிடந்தது. அந்த தண்ணீர் தடாகத்தைச் சுற்றிலும் ஒருவித பசுமையான மரங்கள் அடர்த்தியாக அங்கு நிழலிட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தது. எங்களை பின்சருக்கு அழைத்துச் சென்ற லீலாதர் அவர்கள் அந்த அடர்த்தியான மரங்களையும், அந்த தண்ணீர் தடாகத்தையும் வைத்தே ஒரு நீண்ட வியாக்கியானம் எங்களுக்குக் கொடுத்தார்கள்.

" இதோ, நீங்கள் பார்க்கும் இந்த மரங்கள் சாமானியமான மரங்கள் அல்ல. இந்த மரங்களை நாங்கள் "தண்ணீர் மரம்" அதாவது "பானி கா பேட் " (ஹிந்தியில்) என்று அழைக்கின்றோம். இந்த மரங்களின் சிறப்பான அம்சம் யாதெனில் இந்த மரங்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் கட்டாயம் தண்ணீர் ஊற்றுகள் இருக்கும். அதற்கு ஆதாரமாக நீங்கள் பார்க்கின்ற இந்த நிர்மலமான நீர்த்தடாகம் உள்ளது. உங்களுக்கு தண்ணீர் வேண்டுமா? இந்த " தண்ணீர் மரங்கள் " நிற்கின்ற இடத்தில் தோண்டினால் போதுமானது. நிச்சயமாக உங்களுக்கு தண்ணீர் கிடைக்கும். நீர் நிலைகள் உள்ள இடங்களில் மாத்திரம்தான் இந்த




மரங்கள் வளரும். பொல்லாத மழையும் கூட இந்த மரங்கள் நிற்கின்ற இடத்தைப் பார்த்துத்தான் பெய்யும். கானகத்தில் நிற்கும் எல்லா மரங்களையும் விட இது ஒரு வித்தியாசமான செழிப்பின் பசுமையோடு இருப்பதை நீங்கள் கவனிக்கலாம்" என்று கூறினார். அவருடைய வார்த்தைகள் என் உள்ளத்துக்குள் ஊடுருவி சென்றன. பின்சரில் "தண்ணீர் மரங்கள்" நிற்கும் ஒரு காட்சியை நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். பின்சர் சுற்றுலா பயணியர் மாளிகையில் பணிபுரியும் வாலிபன் ஒருவன் நமது சகோதரன் நார்ட்டன் அவர்கள் மூலமாக தனக்குக் கிடைத்த தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களை ஆவலோடு படித்துக்கொண்டிருக்கும் ஒரு படத்தையும், பின்சர் சென்ற நாங்கள் நால்வர் நிற்கும் மற்றொரு படத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

ஒரு மெய்யான கிறிஸ்தவன் இந்த உலகத்தில் ஒரு "தண்ணீர் மரம்" போன்றவன். அவனிடத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் புறப்பட்டு ஓடும். "என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் "(யோ 7 : 8) என்று நம் அருமை இரட்சகரும் அதை உறுதிப்படுத்தினார். "நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட கனிதரும் மரம்" (சங் 1 : 3) என்று தேவன் அவனை சிலாகித்துப் பேசினார்.

ஒரு உண்மையான ஆவிக்குரிய பரிசுத்த கிறிஸ்தவன் உலகத்தின் மற்ற மக்களுக்கு ஆசீர்வாதமான ஒரு மனிதனாவான். இந்த பாவ உலகம் அவனை ஒரு வித்தியாசமான கோணத்தில் அடையாளம் காணும். வானத்தையும், பூமியையும் படைத்த ஜீவனுள்ள ஆண்டவர் அவனோடு இருப்பதை இந்த உலகம் துரிதமாக கண்டுபிடித்துவிடும். தங்களோடு இருக்கிறவனிலும் அந்த மனிதனோடு இருக்கிறவர் மிகப் பெரியவர் என்பதை அப்பட்டமாக அது இனம் கண்டுபிடித்துக் கொள்ளும். "ஈசாயின் குமாரன் ஒருவனைக் கண்டிருக்கிறேன், அவன் வாசிப்பதில் தேறினவன், அவன் பராக்கிரமசாலி, யுத்த வீரன், காரியசமர்த்தன், சவுந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடே கூட இருக்கிறார்" (1 சாமு 16 : 18) என்பதிலிருந்தும் " உனக்குள்ளே தேவர்களின் ஆவி உண்டென்றும், வெளிச்சமும் புத்தியும் விசேஷித்த ஞானமும் உன்னிடத்தில் காணப்பட்டதென்றும் உன்னைக்குறித்து கேள்விப் பட்டேன்" (தானி 5 :14) என்று பெல்ஷாத்சார் ராஜா கூறுவதிலிருந்தும் இந்த உண்மை நமக்கு வெளியாகும்.

எலியா தீர்க்கன் சமஸ்த இஸ்ரவேலுக்கும் எத்தனை ஆசீர்வாதமாக இருந்தார் என்பதை அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் வேளையில் " என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாய் இருந்தவரே" *(2 ராஜா 2 : 12)*



என்ற எலிசாவின் புலம்பலின் மூலமாக நாம் காண்கின்றோம். இஸ்ரவேல் மக்கள் யாவரும் ஆனந்த களிப்போடு பாதுகாப்பாக பயணம் செய்யும் இரதமும், குதிரை வீரருமாக எலியா தீர்க்கன் தமது வாழ்நாட்காலம் முழுவதும் இருந்தார்.

விக்கிரம ஆராதனைகள் நிறைந்த பாபிலோன் தேசத்திலே தேவனுடைய பரிசுத்த பிள்ளையாகிய தானியேல் தீர்க்கன் மக்களுக்கு மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தார். அந்த தேசத்தின் அரசன் முதல், குடிமக்கள் யாவரும் அந்த பரலோக ஆசீர்வாதத்தை முழுமையாக அனுபவித்து ஆனந்தித்தார்கள். தானியேல், சிங்கங்களின் கெபியிலே போடப்பட்ட அன்று இரவிலே ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொஞ்சமும் நித்திரையில்லாமல் தவித்ததையும், இரா முழுவதும் போஜனம் பண்ணாமலும், கீதவாத்திய இசைகளை கேட்க மனமற்றுப் போனதிலிருந்தும் *(தானி 6 : 18)* தானியேல், பாபிலோன் தேசம் முழுமைக்கும் எத்தனையான ஒரு ஆசீர்வாதத்தின் பாத்திரம் என்பதை நாம் காணமுடிகின்றது.

யோசேப்பு சென்ற இடமெல்லாம் தேவனுடைய ஆசீர்வாதமும் கூடவே சென்றது. பார்வோனுடைய பிரதானியான போத்திப்பாருடைய வீட்டிலே இருந்த யோசேப்பின் மூலமாக அங்கு ஆசீர்வாதம் பொங்கி

வழிந்தது. "கர்த்தர், யோசேப்பினிமித்தம் அந்த எகிப்தியன் வீட்டை ஆசீர்வதித்தார். வீட்டிலும், வெளியிலும் அவனுக்கு உண்டானவைகள் எல்லாவற்றிலும் கர்த்தருடைய ஆசீர்வாதம் இருந்தது " (ஆதி 39 : 5) என்ற தேவனுடைய வார்த்தை நம்மை பரவசமடையச் செய்கின்றது. போத்திப்பார் வீட்டிலிருந்து சிறைக்கூடம் சென்ற யோசேப்போடு தேவனுடைய ஆசீர்வாதமும் கூடவே சென்றது. சிறைக்கூடத்திலிருந்த யாவரும் யோசேப்பால் ஆசீர்வதிக்கப்பட்டனர். சிறைக்கூடத்திலிருந்து முழு எகிப்துக்கும் அதிபதியாக பார்வோனுக்கு அடுத்த ஸ்தானத்துக்கு யோசேப்பு உயர்த்தப்பட்டுச் சென்றபோது எகிப்து மக்களுக்கும், எகிப்தை சுற்றி இருந்த தேசங்களுக்கும் அவர் ஆசீர்வாதத்தின் பாத்திரமாக காணப்பட்டார். மெய்தான், ஒரு கர்த்தருடைய பரிசுத்த பிள்ளை எல்லாருக்கும் ஆசீர்வாதமான பாத்திரமாவான்.

அல்மோரா பட்டணத்தின் பின்சர் என்ற இடத்தில் நிற்கின்ற தண்ணீர் மரங்களைப் போல தேவனுடைய பிள்ளைகள் உலகத்தின் எந்த எந்த இடங்களில் இருந்தாலும் அவர்கள் மற்றவர்களின் ஆவிக்குரிய தாகம் தீர்க்கும் ஜீவ தண்ணீர் நீர் ஊற்றுகளை தங்கள் வசம் கொண்டிருப்பார்கள். அவர்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பார்கள்.

நமது இந்திய மண்ணில் பிறந்த ஒரு சாதுசுந்தர்சிங் இந்த முழு உலகத்துக்கும் எத்தனை ஆசீர்வாதமான ஒரு பாத்திரமாக காணப்பட்டார். அவருடைய பரிசுத்தமான வாழ்க்கையையும், அவரது தேவச்செய்திகளையும் இன்று நாம் வாசித்தாலும்கூட நமது இருதயம் கொழுந்துவிட்டு எரிகின்றதே!

" உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய் " (ஆதி 12 : 2) என்ற கர்த்தாவின் வார்த்தையின்படி தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஜீவ தண்ணீர் பொங்கி வழியும் நீர் ஊற்றுகளை நம்மிடத்தே கொண்ட ஆசீர்வாதமான ஜீவ விருட்சங்களாக மாற்றுவாராக.




" திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.... " (யோவான் 10 : 10)

இமயமலைகளிலுள்ள குவால்தம் என்ற பனிமலை கிராமத்தில் நாங்கள் 3 நாட்கள் தங்கியிருந்து தேவ ஊழியம் செய்தபோது ஒரு நாள் கர்த்தர் எங்களுக்குக் காண்பித்த ஒரு பாதை வழியாக நாங்கள் சென்று கொண்டிருந்தோம். ஊரைக்கடந்து கொஞ்ச தூரம் சென்றதும் எங்கள் பாதை ஓரமாக வலது கைப்பக்கத்தில் ஒரு பெரிய மரம் மேட்டின்மேல் நின்று கொண்டிருந்தது. வானளாவ ஓங்கி வளர்ந்து நின்ற அந்த பைன் மரத்தின் முக்கால் பகுதி அடிமர வேரை மழைத் தண்ணீர் கரைத்து கரைத்து அது ஒரு சிறிய பிடிப்பிலேயே நின்று கொண்டிருப்பதை நாங்கள் கவனித்தோம். ஒரு பலமான காற்று அல்லது ஒரு கன மழை பெய்யுமானால் அந்த மரம் கட்டாயம் வேரோடு பூமியில் சாய்ந்து விழும் என்பதில் எவ்வித சந்தேகமுமே கிடையாது.

அந்த மரத்தின் வேர்ப்பகுதியை ஒரு குடிசையாக்கி அதினுள் ஒரு மனிதர் வாசம்பண்ணிக் கொண்டிருப்பதை நாங்கள் கவனித்தோம். குடிசையின் கூரையை அதே பைன் மரத்தின் காய்ந்த கிளைகளாலேயே மேற்கூரை மறைப்பு போட்டிருந்தார். நானா பக்கமும் தனது வேர்களை விட்டிருந்த அந்த பைன் மரத்தின் அடியில் ஒரு நாய் கூட நல்ல வசதியாக படுக்க இயலாது. ஆனால், ஒரு மனிதர் அதை தனக்கு படுக்கை அறையாகவும், வாழ்விடமாகவும் வைத்திருந்தார். அந்த விந்தையான மனிதரை எப்படியும் காணவேண்டும் என்று நாங்கள் மிகவும் பிரயாசப்பட்டோம். நாங்கள் போகும் நேரமெல்லாம் அந்த அடிமரவேர் குடிசை ஆள் இன்றி வெறுமையாகத்தான் இருக்கும். குடிசைக்கு முன்னால் ஒரு அடுப்பு, தண்ணீர் எடுக்க ஒரு பிளாஸ்டிக் ஜெரிகேன் போன்ற பொருட்கள் இருக்கும். ஆனால் குடிசைவாசி அங்கிருக்க மாட்டார்.

இறுதியாக ஒரு நாள் நாங்கள் அந்த குடிசையின் சொந்தக்காரரை கண்டுபிடித்தோம். குடிசையில் தனது வேலைகளை முடித்துவிட்டு தனது குடிசையைவிட்டு அவர் நாங்கள் வந்து கொண்டிருந்த பாதையில் எங்களுக்கு எதிராக அவர் மெதுவாக கரத்தில்



கோலூன்றி நடந்து வந்து கொண்டிருந்தார். தலையில் ஒரு தீபெத்திய குல்லா வைத்து தாடி வளர்த்திருந்த அந்த உருவம் பார்க்க மிகவும் பரிதாபகரமாக இருந்தது. அவர் எங்களண்டை வந்ததும் அவருக்கு ஒரு சிறிய உதவி செய்ய முன்சென்றோம். ஆனால், அவரோ அந்தப்பணத்தை கண்ணேறிட்டும் பார்க்காமல் எங்களை விட்டு ஒதுங்கி வழி விலகிச் சென்றார். அவருக்கு அந்த பணம் காசு எதிலும் விருப்பமில்லை என்பதை நாங்கள் கண்டறிந்தோம்.

பனிமலைச்சிகரங்களை கொண்ட மிகவும் குளிரான அந்த குவால்தம் கிராமத்தில் திறந்த வெளியில் சன்னல் பின்னலான வேர்கள் நிறைந்த அடிமரத்துக்குள் எப்படி அவர் உயிர்வாழ்ந்து வருகின்றார்



என்பதைக் குறித்து நான் மிகவும் சிந்தித்துப் பார்த்தேன். குவால்தம் ஊரில் தெருக்கள், திண்ணைகள், பாதுகாப்பாக வசதியாக இருக்கக்கூடிய எத்தனையோ இடங்கள் இருக்கையில் சாத்தானாம் பிசாசு இந்த ஏழை மனிதனை எந்த ஒரு இடத்துக்கு துரத்தி அடித்து விரட்டியிருக்கின்றான் என்பதை யோசித்தேன். படுக்க, உட்கார, நிம்மதியாக இருக்க வசதியற்ற அந்த மரத்தின் அடிமர வேர்களுக்குள் சாத்தானாம் பிசாசு அந்த மனிதனை நுழைத்து தள்ளிவைத்திருந்தான். பலமான காற்றோ அல்லது பலத்த மழையோ பெய்யுமானால் அந்த மரம் அவன்மேல் சாய்ந்து அவனை நசுக்கிப்போடும். குவால்தம் ஊரில் நாங்கள் கண்ட மனிதனின் மரத்தடி குடிசையையும், அந்த குடிசையில் வாழ்கின்ற மனிதனையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

ஆ, சாத்தானாம் பிசாசு எத்தனை கொடியவன் என்று பாருங்கள்! தேவன் தமது வசனத்தில் " திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான் "(யோ 10 : 10) என்று எத்தனை சரியாக எழுதி வைத்தார்.

வேதாகமத்தில் லேகியோனைக்குறித்து நாம் வாசிக்கின்றோம். பிசாசானவன் அவனை பிரேத கல்லறைகளுக்கும், வனாந்திரங்களுக்கும் துரத்திவிட்டிருந்ததாக வசனங்கள் நமக்கு தெரிவிக்கின்றன (லூக் 8 : 27 , 29) எத்தனை கொடூரம் பாருங்கள். வீட்டைவிட்டு லேகியோனை துரத்திய சாத்தான், குடும்பத்தின் உறவுகள், பாசப் பிணைப்புகள், அன்பின் கட்டுகள் யாவையும் விட்டு பிரித்தெடுத்து ஊளையிடுதலுள்ள அவாந்தரமான வனாந்திர வெளிகளுக்கும், நாற்றமும், துர்க்கந்தமும் வீசும் கல்லறை குழிகளுக்கும் அவனை விரட்டி விட்டிருந்தான்.

பாலஸ்தீனா தேசம் திராட்சத் தோட்டங்கள், அத்தி மரங்கள், ஒலிவத்தோப்புகள் நிறைந்த தேசம். பிசாசானவன் லேகியோனை திராட்சத்தோட்டங்களுக்குள் விரட்டிவிட்டிருக்கலாமே! பசிக்கும் நேரம் திராட்சை கனிகளைப் பறித்துப்புசித்து, வெயில் எரிக்கும் நேரம் திராட்ச செடிகளின் நிழலில் அந்த லேகியோன் சுகமாக படுத்துக்கொள்வானே! ஆனால், பிசாசு பஞ்சமாபாதகன், கருணையற்ற கல்நெஞ்சினன்! அவனை பசி பட்டினி போட்டு வதைத்து பகலின் வெயிலையும், இரவின் பனியையும் அவன் மேல் பெய்யச் செய்து அவனை சாகடிப்பதுதானே பிசாசின் நோக்கம்.

இந்தச் செய்தியை நான் எழுதிக்கொண்டிருக்கும்போது செய்தி தாளில் ஒரு விந்தையான செய்தி தென்படுகின்றது. கேரளா மாநிலத்தில் கோழிக்கோடு பட்டணத்துக்கு அருகில் ஒலவன்னா என்ற கிராமத்தை சேர்ந்த வேலாயுதன் என்ற ஒரு மனிதனை குறித்து அதில் எழுதப்பட்டுள்ளது. தனக்கு சொந்தமான நல்ல வீடு, வாசல், மனைவி, ஒரே மகள், மாதந்தோறும் அரசாங்க ஓய்வு ஊதியம் எல்லாம் இருந்தும் அந்த மனிதனை சாத்தானாம் பிசாசு கொடிய விஷப்பாம்புகளுடன், இரவும், பகலும் நடுக்கத்தோடும், கலக்கத்தோடும், சாவின் பயத்தோடும் கண்ணாடிக்கூட்டுக்குள் வாழும்படியாக துரத்திவிட்டிருந்தான். தனது அன்பு மனைவி, ஆசை மகளுடன் தனது காற்றோட்டமான வீட்டின் அறையில் நல்ல வசதியான கட்டிலில் தலையணை வைத்து ஆனந்தமாக நித்திரை செய்ய வேண்டிய வேலாயுதனை மனுஷ கொலைபாதகன் விஷப்பாம்புகளோடு கண்ணாடிப் பேழையில் காலங்கழிக்க விரட்டிவிட்டிருந்தான். ஒரு தடவை அந்த மனிதன் அந்த விஷ நாகப் பாம்புகளோடு தொடர்ச்சியாக 683 மணி நேரம் அதாவது சுமார் 29 நாட்கள் தங்கி சுகமாக வெளியே வந்தார். இந்த சாதனையின் வெற்றி களிப்பு அவரது வாழ்வில் நீடிக்கவில்லை. அவர் மிகவும் செல்லமாக வளர்த்த நல்ல பாம்பு ஒன்று அவரை கொத்தி சில மணி நேரத்துக்குள்ளாக அவரை கொன்று போட்டது. கொல்லவும், அழிக்கவும், நாசம் செய்யவும் உலகுக்கு வந்த சாத்தான் மனுமக்களை பல்வேறு விதங்களில் அவர்கள் புத்தியை மாறாட்டம் அடையப் பண்ணி அவர்களை கொன்று குவித்து அவர்களின் விலையேறப்பெற்ற ஆத்துமாக்களை நரகத்திலே தள்ளிக்கொண்டே இருக்கிறான்.

தினந்தோறும் சாலைவிபத்துக்களின் மூலமாக எத்தனை லட்சாதி லட்சம் மக்களை சாத்தான் வாரிக்கொண்டிருக்கின்றான்! நாசி வரை வாகனங்களின் ஓட்டுநர்களுக்கு மதுபானம் குடிக்கக்கொடுத்து அவர்களின் கரத்தின் சுக்கானை சாத்தானே தனது கரத்தில் பிடித்து ஓட்டி வாகனங்களை மோதி உடைத்து நொறுக்கி ஷணப்பொழுதில் ஏராளமான மக்களின் உயிர்களை தினமும் குடித்து வருகின்றான். தேவன் தாமே அவனது கொடிய வல்லடிகளுக்கு நம்மை விலக்கி காத்து அவனது சதிசர்ப்பனைகளில் நாம் விழுந்துவிடாதபடி நம்மை பாதுகாத்துக் கொள்ளுவாராக.

" தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம்மெல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர், அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி ? (ரோ 8 : 32)

ஒரு நாள் நாங்கள் இருவரும் குவால்தம் ஊரிலிருந்து எங்கள் ஜோல்னா பைகளை தேவனுடைய சுவிசேஷ பிரசுரங்களால் நிறைத்துக் கொண்டு ஜெபத்தோடு கால்நடையாக ரஸ்தா மார்க்கமாக ஒரு காலை வேளை புறப்பட்டோம். எங்கள் பாதையின் இரு பக்கங்களிலும் பைன், கேதுரு போன்ற மரங்கள் திரள்திரளாக, வரிசைக்கிரமமாக வானுற ஓங்கி வளர்ந்து நிற்பதை நாங்கள் கண்டோம். பள்ளத்தாக்குகளிலே இமயமலையின் குக்கிராமங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக பரவிக்கிடந்தன. தேவனுடைய சுவிசேஷ நற்செய்தியை ஒரு தடவை கூட தங்கள் வாழ்நாளில் அந்த கிராமவாசிகள் கேள்விப்பட்டிருப்பார்களா என்பது சந்தேகம்.


எங்களுடைய பயணப்பாதையில் எங்களுக்கு எதிர்ப்படும் மக்களுக்கெல்லாம் ஆண்டவருடைய பிரசுரங்களை கொடுத்துக்



கொண்டே சென்று கொண்டிருந்தோம். மக்கள் அவைகளை ஆசை ஆவலோடு எங்களிடமிருந்து பெற்று வாசிப்பதை நாங்கள் கண்டோம். இப்படி நாங்கள் இருவரும் கால்நடையாகவே மலைப்பாதையில் இறங்கு முகமாக சுமார் 8 கி.மீ. தூரம் வரை நடந்து வந்தோம். எங்கள் பாதையில்

சிர்கோட் என்ற ஒரு கிராமம் வந்தது. அந்த கிராமத்திலும் சிலருக்கு நாங்கள் தேவனுடைய பிரதிகளைக் கொடுத்தோம். அங்கு ஒரு பள்ளிக்கூட தலைமை ஆசிரியரை நாங்கள் சந்தித்தோம். அவர் நாங்கள் கொடுத்த தேவனுடைய வசனங்களை படித்துப் பார்த்து சந்தோசப்பட்டு தனது பள்ளி மாணவர்களுக்கு கொடுக்கும்படியாக சற்று கூடுதலான துண்டுப்பிரசுரங்களை எங்களிடமிருந்து வாங்கிச் சென்றார். அவர் பெயர் பூரண்சிங் என்பதாகும்.

சிர்கோட் ஊரைக்கடந்து சற்று தூரத்தில் மற்றொரு சிறிய கிராமம் வந்தது. அங்கு நாங்கள் பால்கிஷன் என்ற ஒரு மனிதரை சந்தித்தோம். அவர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர். அவர் தனது வீட்டுக்கு முன்னால் உட்கார்ந்திருந்தார். நமது சகோதரன்



நார்ட்டன் அவர்கள் அவரோடு பேசி சம்பாஷித்து கர்த்தருடைய பிரசுரங்களையும் அவருக்கு கொடுத்தார்கள். தனது மடியில் " மனுஷனின் இருதயம்" உட்பட சில பிரசுரங்களை பால்கிஷன் வைத்திருப்பதை நீங்கள் படத்தில் காணலாம். தனக்கு கிடைத்த தேவனுடைய வார்த்தைகளை மிகுந்த மகிழ்ச்சியோடு வாசிக்கும் மற்றொரு சிர்கோட் கிராமவாசியின் படத்தையும் நீங்கள் இந்த செய்தியில் காணக்கூடும்.

மேலே குறிப்பிட்ட பால்கிஷன் தனது சம்பாஷணையின்போது தனக்கு 2 வாலிப பெண் மக்கள் உண்டு என்றும், அவர்களை திருமணம் புரிய வருவோர் சீதனம், நிலபுலம் மற்றும் பொருட்கள் எதையும் மையப்படுத்தி கேட்பார்களானால் அவர்களுக்கு தனது பிள்ளைகளை

மணம் செய்து கொடுப்பதில்லை என்றும், தனது பிள்ளைகளை மாத்திரம் விரும்பிக்கேட்போருக்கு தனக்குள்ள சொத்து, சுகம், தங்கம், வெள்ளி எல்லாம் அவர்களுடைய விருப்பத்திற்கும் அதிகமாகவே கொடுக்க தான் ஆயத்தமாக இருக்கின்றேன் என்றும் சொன்னார். அப்படியே, எனது மூத்த மகளை பெண் கேட்க வந்த பல வாலிபர்கள் பணம் காசை முக்கியப்படுத்தி பேசியதால் நான் அவர்களை துரத்தியடித்தேன். இறுதியில் ஒரு வாலிபன் " உமது மகள் மாத்திரம் போதும் " என்று என்னிடம் வந்தான். அவனுக்கு எனது மூத்த மகளை சந்தோசமாக கொடுத்து ஏராளமான சீதனங்களை வாரிக்கொடுத்தேன். அடுத்த மகளையும் அப்படி கேட்பவனுக்கே கட்டிக்கொடுக்க ஆயத்தமாக காத்திருக்கின்றேன் என்று கூறினார். அவருடைய வார்த்தைகள் எனது உள்ளத்தை மிகவும் பலமாகத் தொட்டது.

ஆண்டவர் இயேசுவை பணம் காசுக்காகவும், கிறிஸ்தவ மிஷன் வேலைகளுக்காகவும், கிறிஸ்தவ பெண்களை திருமணம் புரிவதற்காகவும் ஏற்றுக்கொள்ளும் மக்கள் ஏராளம் உண்டு. மிஷனரிகளின் ஆதரவையும், அவர்களின் பண சகாயம், இலவசமான நிலப்பட்டாக்கள், உலகப்பிரகாரமான வேலைகள் போன்றவற்றிற்காக எத்தனையோ ஆயிரமாயிரமான மக்கள் நம் தமிழ்நாட்டிலும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலும் கிறிஸ்தவர்களாகியிருக்கின்றனர். இவர்கள் எல்லாரும் இயேசு பெருமானின் சிலுவை அன்புக்கு வெகு தூரமானவர்கள். " இவரே என் சிநேகிதர், இவரே என் ஆத்தும நேசர் " என்று இயேசுவைக்குறித்து இவர்களால் கூற இயலாது. இந்த பெயர் கிறிஸ்தவர்களுக்கும், விக்கிரகாராதனைகள் செய்து மற்ற கடவுளர்களை வழிபடும் மக்களுக்கும் எந்த ஒரு வேறுபாடும் கிடையாது. பெயர்தான் ஜாண் என்றும், இயேசு பிள்ளை, இயேசு அடியான், இம்மானுவேல், மோசே என்பதாக இருக்கும். ஆனால், அவர்களுடைய செயல்களும், கிரியைகளும் நீசத்தனமாக இருக்கும்.

ஆண்டவர் இயேசுவை தங்கள் இருதய நாயகனாக ஏற்று அவரின் அன்பில் களிகூரும் பரிசுத்த தேவ மக்கள் பாக்கியவான்கள். அவர்களுக்கு அவர்களின் ஆத்தும மணவாளனின் தகப்பனாம் தேவன் பரலோகத்தில் கொடுக்கப்போகும் பரலோக சீதனங்களை யாரே அறியக்கூடும்? அந்த பரலோக சீதனங்களை மனிதக்கண்கள் காணவும் இல்லை, அதின் மாட்சியை மனிதன் தனது அற்ப அறிவினால் கற்பனை

செய்து பார்க்கவும் இயலாது (1கொரி 2 : 9). "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" (மத் 25 : 34) என்று நம் நேச மணவாளரின் தகப்பனாம் கர்த்தர் அந்த மோட்ச பட்டணத்தின் சீதனங்களை நாம் சுதந்தரிக்கும்படியாக நம்மை அழைக்கும்போது மாத்திரமே அதின் மாட்சி நமக்கு விளங்கும்.

தேவனுக்குப் பயந்தவர்களே, நீங்கள் எல்லாரும் வந்து கேளுங்கள் அவர் என் ஆத்துமாவுக்குச் செய்ததைச் சொல்லுவேன் (சங் 66 : 16)

நான் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்து வளர்ந்த கிறிஸ்தவளாக இருந்தபோதிலும் தேவ அன்பை, கல்வாரியின் அன்பை உணராதவளாக இரட்சிக்கப்படாத நிலையில் ஜீவித்து வந்தேன். ஓர் உத்தியோகஸ்தரின் மனைவி என்ற நிலையில் எல்லா உலக இன்பங்களையும் என் பிள்ளைகளோடு கூட அனுபவித்து வந்தேன். ஒரு நாள் நான் சினிமா பார்த்துக்கொண்டு சினிமா தியேட்டரில் அமர்ந்திருக்கும்போது தேவன் என்னை எச்சரித்தார். "நீ இருக்க வேண்டிய இடம் இதுவா?" என்று கேட்டார். வீடு திரும்பியதும் மனஸ்தாபப்பட்டேன். ஆனால் மீண்டும் ஒரு நாள் சினிமாவுக்கு போய்விட்டேன். வீட்டுக்கு வந்ததும் இரவெல்லாம் என் உள்ளத்தில் சமாதானமில்லாமல் தவித்தேன்.

இப்படி இருக்கும் நாட்களில்தான் ஒரு நாள் என் வாழ்க்கையில் மறக்க முடியாத அந்த சம்பவம் நேரிட்டது. எனது மூன்றாவது மகள் சரோஜா சுந்தரவல்லி பள்ளியில் தனது எஸ்.எஸ்.எல்.சி. பரீட்ஷையை எழுதிவிட்டு கோடை விடுமுறை நாட்களில் வீட்டிற்கு வந்திருந்தாள். எனது பிள்ளைகள் எல்லாரிலும் அழகும், அமைதியும், பொறுமையுமுள்ள மகள் அவள்தான். வீட்டிற்கு வந்த சில நாட்களுக்குள் தலைவலி என்று சொன்ன மகளுக்கு நாளுக்கு நாள் தலைவலி அதிகமாகி

இரண்டு டாக்டர்கள் சிகிச்சை அளித்தும் பயன் இல்லாமல் அவள் படுக்கையிலிருக்கும் நிலைக்கு ஆளாகிவிட்டாள்.

அது லெந்து கால நாட்கள். நெல்லை மாவட்டம் சாயர்புரம் சபையிலிருந்து வந்த ஓர் அம்மாள், ஸ்ரீவைகுண்டம் சபை தாய்மார் கூட்டத்தில் பேசினார்கள். கூட்டம் முடிந்ததும் நான் அந்த அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்து என் மகளுக்காக ஜெபிக்கச் சொன்னேன். அந்த அம்மாள் ஜெபித்து எழுந்ததும் தனக்கு அப்பொழுது கிடைத்த தரிசனத்தை என் மூத்த மகளிடம் கூறினார்கள். அது என்னவென்றால், "ஒரு பச்சை வண்டி என் மகளுக்கு அருகாமையில் புறப்படுவதற்கு ஆயத்தமாக திரும்பி நின்று கொண்டிருக்கின்றது" என்பதே. நான் தேவனுடைய சித்தம் அறியாத ஒரு பாவியாக இருந்தபடியால் அதைக்குறித்து சிந்திக்காமல் இருந்துவிட்டேன். அப்பொழுது நான் மனந்திரும்பாத ஒரு பெயர் கிறிஸ்தவளாக இருந்தபடியால் ஆவியில் மன்றாடிக் கேட்க வகை தெரியாத பாவியாக இருந்தேன்.

சில நாட்கள் சென்ற பின் ஒரு நாள் என் மகள் சரோஜா படுக்கையில் இருந்தவாறே எழுந்து தன் கால்களைத் தூக்கி வைத்து எதிலோ ஏற முயற்சிப்பதைக் கண்ட எனது மூத்த மகள் அவளிடம் "என்ன, சரோஜா என்ன செய்கிறாய்? அசையாமல் படுத்திரு" என்று சொல்ல அவளோ "அக்கா வண்டி வந்திருக்கு, நான் அதில் ஏறுகிறேன்" என்று கூறினாள். மூத்த மகள் "இல்லையே, என் கண்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே" எனக்கேட்க "நீ நன்றாகப் பார் உனக்குத் தெரியும்" என்று சரோஜா சொன்னாள். அன்று மத்தியானம் அவளது அப்பா அடுத்த கட்டிலில் உட்கார்ந்து ஆரஞ்சு சாறு பிழிந்து கொண்டிருந்தார்கள். அப்போது எனது சரோஜா மகள் "அப்பா என்னை விட்டுவிடுங்கள், நான் போகிறேன். என்னை விட்டுவிடுங்கள்" என்று மறுபடியும் மறுபடியுமாகக் கூறிக்கொண்டே இருந்தாள். நான் அவள் படுக்கையில் அமர்ந்திருந்தேன். எல்லாருமாகச் சேர்ந்து அவளை படுக்க வைத்தோம். இதற்கிடையில் அநேக தாய்மார், தேவ ஊழியர்கள் வந்து என் மகளுக்காக ஜெபித்து அவளுக்கு ஆயுசு நாட்களை கூட்டிக் கொடுக்குமாறு மன்றாடி ஜெபித்துப் போனார்கள். ஜெபத்தைக் கேட்ட தேவன் 15 வயதான என் மகளுக்கு 15 நாட்களை கூட்டிக்கொடுத்தார். பதினைந்து நாட்கள் கழித்து அதே நேரத்தில் அருமை மகள் இவ்வுலகத்தைவிட்டுப் பரலோகம் சென்றாள். சொல்லொண்ணா

துயரத்தில் ஆழ்ந்திருந்த எனக்குள் ஓர் உணர்வு வந்தது. என்னை நானே ஆராயத் தொடங்கினேன். என் பாவம்தான் என் மகளின் மரணத்திற்கு காரணமா? என்று கண்ணீர் சிந்தினேன். என் கண்ணீரை மாற்ற யாராலும் முடியாது என்ற நிலைக்கு வந்தேன். எனது நெருங்கிய இரு சிநேகிதிகள், ஒரு வக்கீல் மனைவி, ஒரு ரிஜிஸ்ட்ரார் மனைவி தினமும் மத்தியான வேளைகளில் வந்து என்னை ஆற்றி தேற்றி ஆறுதல் கூறிவிட்டுச் செல்லுவார்கள்.

இந்த நாட்களில் சாயர்புரத்தில் சென்னையிலிருந்து வந்த சகோதரன் என். தானியேல் அவர்களின் கன்வென்ஷன் கூட்டங்கள் நடந்து கொண்டிருந்தது. என் சிநேகிதிகள் இருவரும் என்னை அக்கூட்டத்திற்கு அழைத்துச் செல்லுவது என தங்களுக்குள் தீர்மானித்து எல்லா ஏற்பாடுகளும் செய்தனர். ஆனால் தேவனோ நான் மாத்திமல்ல, என் முழுக்குடும்பமும் அங்கு செல்ல கிருபை செய்தார்.

அங்கு போவதற்கு இரண்டு நாட்களுக்கு முன் ஓர் நாள் இரவு 10 மணிக்கு மேல் நான் அழுது முடித்து முழங்கால்களை ஊன்றி ஜெபிக்க ஆரம்பித்தேன். இரண்டொரு வார்த்தைகள் நான் ஜெபத்தில் சொல்லுவதற்குள் என் தேவன் தமது மிகுந்த கிருபையில் பாவியாகிய எனக்கு ஒரு பரலோக தரிசனத்தை காட்டினார். அங்கே நான் கண்ட காட்சிகளை அப்படியே நான் எழுதுகின்றேன் :-

பரலோகத்தில் நான் ஒரு பெரிய வளைவின் அருகில் முழங்காலில் நிற்கின்றேன். என் எதிரில் ஒரு விசாலமான தங்கத்தால் உருவாக்கப்பட்ட ரஸ்தாவை கண்டேன். வெகு தூரத்தில் ஒரே வயதுள்ள இரு பெண் பிள்ளைகள் வெண் வஸ்திரம் தரித்து மிகுந்த சந்தோசமாக நடந்து வருவதை நான் கண்டேன். அவர்கள் நான் முழங்காலில் நிற்கும் இடம் மட்டும் வந்ததும் என்னைக்கண்டார்கள். அந்த இரண்டு பெண் பிள்ளைகளில் ஒன்று என் மகள் சரோஜா என்பதை நான் கண்டேன். என் மகள் என்னைக்கண்டதும் "அம்மா"என்று அழைத்தாள். நானும் பதிலுக்கு "சரோஜிம்மா" என்று பதில் கொடுத்தேன். பின்னர் அவர்கள் இருவரும் அந்த வளைவை கடந்து ஒரு அழகான நந்தவனத்துக்குள் சென்றுவிட்டனர். உடனே ஒரு சத்தம் கேட்டது. அது என்னை அதிர வைத்தது. லூக்கா 7 : 16 என்று இரண்டு மூன்று முறை திரும்ப திரும்ப யாரோ சொல்லக் கேட்டேன். தேவன் எனக்கு அந்த வசனத்தில் என்ன வைத்திருப்பாரோ என்று நடுக்கத்தோடு எனது மூத்த மகளைக் கூப்பிட்டு

எனது வேதாகமத்தை எடுத்துத் தரச் சொன்னேன். அக்காலத்தில் மின்சார விளக்குகள் கிடையாது. இது நடந்தது 1953 ஆம் வருடம் செப்டம்பர் மாதம். பயமும் நடுக்கமும் என்னைப் பிடிக்க அதை நான் வாசித்தேன்.

"எல்லாரும் பயமடைந்து, மகா தீர்க்கத்தரிசியானவர் நமக்குள்ளே தோன்றினார் என்றும், தேவன் தமது ஜனங்களை சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்." (லூக் 7 :16) இதை வாசித்ததும் எனது பயம் என்னைவிட்டு அகன்றது. நாயீன் ஊர் விதவையின் வாலிப மகனை உயிர்ப்பித்த இயேசு பாவத்தில் மரித்துக்கிடந்த என்னையும் உயிர்ப்பித்தார். சந்தித்தார். இனி நான் அழ வேண்டிய அவசியம் இல்லை. தேவனை மகிமைப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்துக்குள் வந்தேன். கர்த்தரின் கிருபையால் என் கண்ணீர் அன்றோடு நின்றது. வெண் உடை தரித்து மகிமையில் உலாவும் என் மகள் சரோஜாவுக்காகவும் நான் கர்த்தரை ஸ்தோத்தரிக்க ஆரம்பித்தேன். தினமும் என்னை விசாரிக்க வரும் முன்பு குறிப்பிட்ட என் இரு சிநேகிதிகளிடமும் நான் கண்ட தரிசனத்தை சொன்னேன். நாங்கள் மூவரும் சந்தோசத்தோடு தேவனை துதித்தோம்., ஸ்தோத்திரித்தோம்.

ஆனால் என் பாவப்பாரம் என்னை அழுத்தினது. தேவனின் பிள்ளையாக மாற என் உள்ளம் வாஞ்சித்தது. நாங்கள் போட்ட திட்டத்தின்படி சாயர்புரம் கன்வென்ஷன் கூட்டத்திற்குப் போனோம். என் வாழ்க்கையில் நான் சென்ற முதல் கன்வென்ஷன் கூட்டம் இதுவே. எல்லாரையும் போல நானும் ஒரு பாட்டுத் தாளை வாங்கிக்கொண்டு, ஆலயத்தில் ஓரிடத்தில் போய் உட்கார்ந்து அதை வாசித்துக் கொண்டிருந்தேன். ஒரு பாட்டுக்கு ராகம் தெரியவில்லை. ஆனால் அந்த பாட்டின் வார்த்தைகள் என் உள்ளத்தை ஊடுருவிச் சென்று குத்தின. அதுதான் இந்தப் பாட்டு :-

ஓ! பாவங்கள் எத்தனையோ?
என் கைகள் புரிந்தனவோ, - நின்
கைகளில் வழிந்தோடும் செங்குருதி என்
கைகளைக் கழுவிடாதோ.

இவ்வாறாக என் நேசர் இயேசுவின் ஒவ்வொரு அவயவத்திலும் செங்குருதி பாயக்கண்டு பாவ உணர்வு பெற்று அடக்க முடியாமல் மிகவும் அழுதேன். என் பாவக் கொடுமையை தாங்க முடியாமல் எனக்காக என் இயேசு இரட்சகர் இரத்தம் சிந்தினார் என்பதை என் வாழ்வில்

முதன்முதலாவதாக அந்த தேவாலயத்திலே அறிந்தேன். நான் அழுததையோ, வேதனைப்பட்டதையோ எனக்கு அருகில் இருந்தவர்கள் ஒருவரும் காணவில்லை. ஆனால் என் நேசர் கண்டார். கன்வென்ஷன் கூட்டம் ஆரம்பித்தது. சகோதரன் என். தானியேல் மேடைக்கு வந்தார். நான் எந்த பாட்டுக்கு ராகம் தெரியாமல் வாசித்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தேனோ அந்த பாட்டையே கூடிவந்த மக்களை பாடும்படி சொன்னார். எல்லாரும் எழுந்து நின்றோம். பாடப்பாட நான் தாங்கொண்ணா வேதனையில் இன்னும் அதிகமாய் அழுதேன். மடை திறந்தாற்போல கண்ணீர் என் கண்களிலிருந்து வழிந்தோடினது. இது பரிசுத்த ஆவியானவரின் சுத்த கிருபை, சுத்த கிரியை என்பதை பின்பு உணர்ந்தேன்.

கூட்டம் முடிந்தது. யாவரும் வீடு திரும்பினோம். மறுநாள் எவரும் இல்லாத நேரத்தில் ஒரு தனி அறைக்குள் சென்று எனது பாவங்களை அறிக்கை செய்ய ஆரம்பித்தேன்.

எனது அதுவரை வாழ்விலும், பள்ளிக்கூட நாட்களிலும் நான் அறிந்தும், அறியாமலும் செய்திருந்த எனது பாவங்கள் யாவற்றையும் கர்த்தருக்கு அறிக்கையிட்டு பாவ மன்னிப்புக்காக கெஞ்சி கதறினேன். கண்ணீர் தாரை தாரையாக வடிந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். அவர் என் கண்ணீரைக் கண்டார். என் நொறுங்குண்ட இருதயத்தின் ஜெபத்தைக் கேட்டார். என் உள்ளத்தில் உலகம் தரக்கூடாத தேவ சமாதானம் தந்தார். 2 கொரி 5 :17 ன்படி இப்போது நான் ஒரு புது சிருஷ்டி. யோவான் 1 : 12 ன் படி நான் தேவனுடைய சொந்த பிள்ளை. பாவ மன்னிப்பின் நிச்சயமும், மறுமையின் பரலோக வாழ்வின் நிச்சயமும் எனக்கு உண்டு. அல்லேலுயா. கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

என்றைக்கு நான் இயேசுவை என் சொந்த ஆத்தும நேசராக ஏற்றுக்கொண்டேனோ அன்றிலிருந்து அவர் என் சரீரத்தையும் மீட்டு இரட்சித்தார். என் வியாதி, பெலவீனம் யாவும் மறைந்தன. இயேசுவே என் ஆத்தும, சரீர பரிகாரி. எந்த ஒரு மருந்து, மாத்திரை, ஊசி எதுவும் இல்லாமல் அவரே எனக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமாக இருந்து என்னை கரம் பிடித்து வழிநடத்தி வருகின்றார்.

இப்போது நான் கர்த்தருடைய கிருபையால் 84 வயதை முடித்து 85 வயதுக்குள் பிரவேசிக்கின்றேன். இன்றைக்கும் என் தேவன் நல்லவரும்,

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970

வல்லவரும், போதுமானவருமாக இருக்கிறார். தாய்மார் கூட்டம், தெருப்பிரசங்கம், முழு இரவு ஜெபம் யாவும் நடத்த இன்றைக்கும் பெலனளித்து வருகின்றார். அந்த நேச இரட்சகருக்கே துதி ஸ்தோத்திரம் கனம், மகிமை உண்டாவதாக.

திருமதி. சுசி கிரேஸ் ஜாண்,
அம்மன்புரம், நெல்லை மாவட்டம்.

(மேலே கண்ட அனுபவ சாட்சியை தேவ எக்காளத்தில் பிரசுரிக்கும்படியாக எனக்கு சில வருடங்களுக்கு முன்பே தாயார் சுசி கிரேஸ் ஜாண் அனுப்பியிருந்தார்கள். அது இப்பொழுதுதான் வெளி வருகின்றது. ஒருக்கால் அந்த அன்புத்தாயார் தனது பரலோக வீட்டில் இப்பொழுது இருக்கலாம் என்று கர்த்தருக்குள் நம்புகின்றேன்.)

உலக மகா யுத்தத்தின் போது ஒளியை குறித்து விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் நடத்தினர். அதின் பலனாக ஒரு எரியும் தீக்குச்சியின் ஒளி அரை மைல் தூரம் வரை தெரியும் என்று கண்டுபிடித்தனர். சீராக எரிந்து கொண்டிருக்கும் ஒரு அரிக்கன் லாந்தரின் வெளிச்சம் ஒன்றேகால் மைல் தூரம் மட்டும் எட்டக்கூடியது என்று அறிந்தனர். அதே சமயம் முற்றுமாக ஒளியூட்டப்பட்ட ஒரு அறையின் ஜன்னலிலிருந்து வெளிவரும் வெளிச்சம் 12 மைல்கள் தூரம் வரை பிரகாசிக்க கூடியது என்று கண்டனர்.

வாசிப்போனே, உன் அருமை இரட்சகருக்காக நீ எவ்வளவு கொஞ்சமாக அதுவும் எத்தனை மங்கிய விதத்தில் ஒளி வீசுவதாக நீ உனக்குள் எண்ணி துயரடையலாம். பரவாயில்லை. வெளிச்சத்தின் தூரம் எத்தனையாயினும் கலங்கவேண்டாம். ஆனால் உனது விளக்கு பிரகாசித்துக் கொண்டே இருந்தால் போதுமானது.

Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

CPP Ph : 30630